Restaurant SHABARINA
Specialites Indiennes
21, Rue Cail,
75010 Paris.
Tel: 01 42 05 05 68
Mo: La Chapelle ou
Gare du Nord

France: 10FFrs. GB: 90P Germany: 2.50DM Swisse: 2.50SFrs.

# ஈழமுரசு

Eelamurasu Weekly

முரசு: 3 20 - 26 பெப்பரவரி 1997 முழக்கம்: 110

லாச்சப்பலில்...
அறுசுவை உணவுவகைகளுக்கு
சபறினா
உணவகம்
21, Rue Cail, 75010 Paris.
Tel: 01 42 05 05 68
Mo: La Chapelle ou Gare du Nord

# 173 ஈழத் தமிழர்கள் நெதர்லாந்து விமான நிலையத்தில் அரசியல் தஞ்சம்

## அனைவருக்கும் தற்காலிக வதிவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது

**கடந்த ஞாயிற்றுக்கிழமை, 173 ஈழத் தமிழர்கள் ஒரே விமானத்தின் மூலமாக நெதர்லாந்து, அம்ஸ்ரடாம் விமான நிலையத்தில் வந்திறங்கி அகதி அந்தஸ்துக் கோரியுள்ளனர். நெதர்லாந்து நாட்டையே மிகவும் பரபரப்பாக்கிய இச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அடங்கிய 173 ஈழத் தமிழர்கள் மத்திய ஆசிய நாடான துருக்மெனிஸ்தான் தலைநகரான அக்ககாபாத்திலிருந்து போயிங் 757 விமானம் ஒன்றின் மூலமாக ஞாயிற்றுக்கிழமை மாலை அம்ஸ்ரடாம் விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.**

விமானத்தை தடுத்துவைத்த நெதர்லாந்து அதிகாரிகள், இந்த அகதிகள் ஒரே தடவையில் எவ்வாறு நாட்டிற்குள் புக முடிந்தது என்பது தொடர்பான விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளதுடன் துருக்மெனிஸ்தான் அரசுடன் உடனடியாக தொடர்புகொண்டு தீவிரமான விளக்கங்களைக் கேட்டறிந்த பின்னரே விமானத்தை மீண்டும் செல்ல அனுமதித்துள்ளனர்.

எல்லோரும் ஒரே நேரத்தில் கொடுத்த நெருக்குதல் காரணமாகவே விமானத்தை நெதர்லாந்தில் தாம் தரையிறக்க வேண்டி வந்ததென விமானிகள் விசாரணையின் போது தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## வேவு விமானம் வீழ்ந்து நொருங்கியது 4-வது வான் கலத்தை இழந்த சிறீலங்கா அரசு

சிறீலங்கா விமானப் படையினருக்குச் சொந்தமான இஸ்ரேலியத் தயாரிப்பான "ட்ரோன்" வேவு விமானம் கடந்த வாரம் அநுராதபுரத்தில் வீழ்ந்து நொருங்கியது. இவ் வருடத்தில் விமானப் படையினர் இழந்த நான்காவது விமானம் இதுவாகும்.

கடந்த மாதம் பூநகரிப் பகுதியில் இவ் வகையான விமானம் ஒன்று காணாமல் போனதையடுத்து இந்த ட்ரோன் விமானத்தை மேலதிக பரிசோதனைகள் செய்வதற்காக இஸ்ரேலிய

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

# இராணுவ நடவடிக்கைகள் எதனையும் எதிர்கொள்ள நாம் தயார் -புலிகள் அறிவிப்பு

வன்னிப் பெருநிலப்பரப்பில் உக்கிரமான சமர், எந்த முனையிலும், எவ்வேளையிலும், எந்நேரமும் வெடிக்கலாம் என விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ அறிக்கையொன்று தெரிவித்துள்ளது.

"பெரும் பகுதிகளை ஆக்கிரமித்து கட்டம் கட்டமாகக் கைப்பற்றுவது அதன் வாயிலாக குடாநாட்டிற்கு கொழும்புடன் தரைவழித் தொடர்பினை ஏற்படுத்தலுமே தற்போதைய படையெடுப்பின் நோக்கமாகும். எனினும் இந்தப் போர் நடவடிக்கைகளுக்கு எதிரான யுத்தத் தாக்குதலுக்கு புலிகளின் போர் அணிகள் தயாராக உள்ளதால் எந்தவேளையிலும் எந்த முனையிலும் உக்கிர சமர் வெடிக்கலாம்." இவ்வாறு விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்" இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய நான்கு மாவட்டங்களையும் உள்ளடக்கிய வன்னிப் பெருநிலப்பரப்பு மீதான பாரிய படையெடுப்பு இப்போது வவுனியாவில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பெரும் எடுப்பில் ஒருங்கிணைக்கப்பட்ட ஆட்பல, படைப்பல வளங்களுடன் நகர்த்தப்படும் இந்த நடவடிக்கையானது தனியொரு படையெடுப்பாக இல்லாமல் படிப்படியாக நிகழ்த்தப்படும் ஒரு பலகட்ட தொடர் படையெ

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## சந்திரிகாவின் வாசஸ்தலத்திற்கு அருகே பெரும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்

சந்திரிகாவின் வதிவிடத்திற்கு அருகாமையில் கடந்த சனியன்று (15.02.97) இரவு பெரும் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது. 30 பேரடங்கிய குழுவொன்று தானியங்கித் துப்பாக்கிகளால் உணவு விடுதி ஒன்றை நோக்கி சரமாரியாக சுட்டுத் தள்ளினர்.

இந்த உணவு விடுதி ஐ.தே.க. உறுப்பினர் ஒருவருக்குச் சொந்தமானது. துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து உணவு விடுதியில் உணவருந்திக் கொண்டிருந்த மக்கள் சிதறி ஓடினர். அவர்களது வாகனங்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## எனது உயிருக்கு எப்போதுமே ஆபத்து உண்டு - ரத்வத்தை

எனது உயிருக்கு எப்போதுமே ஆபத்து உண்டு இந்த ஆபத்திலிருந்து வெளியேற முடியாதபடி நான் அழுத்தப்பட்டிருந்தாலும் நான் பின்வாங்கப் போவதில்லை.

இவ்வாறு சிறீலங்காவின்

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## அதிகாரிகள் உட்பட 63 பொலீசார் இரத்தினபுரி பகுதியிலிருந்து இடமாற்றம்

இரத்தினபுரி, குருவிட்ட, எகலியகொட ஆகிய மூன்று பொலீஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், இரண்டு உதவிப் பொலீஸ் அத்தியட்சகர்கள், இன்ஸ்பெக்டர்கள், சப் இன்ஸ்பெக்டர்கள் 16 பேர், 15 சார்ஜன்டுகள், 23 பொலீஸ் கான்ஸ்டபிள்கள் ஆகியோர் இரத்தினபுரி பொலீஸ் அத்தியட்சகர் பிரிவில் இருந்து பொலீஸ் தலைமையகத்தினால்

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

உங்கள் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்கிறது
KUMARS SHOP
S. A. R. L.
80, Bld. Barbes, 75018 Paris. M°: Marcadet Poissonniers
Tél: 01 42 59 35 10 / Fax: 01 42 59 35 00



Singapore Exchange Co.
90, Bld. Rochechouart,
75018 Paris. Mo: Anvers ou Pigalle
Tel: - Fax: 01 42 23 03 10
ou 01 42 59 53 91

தமிழ் மக்களின் இதயநாதமாய் என்றும் முழங்குவது ஈழமுரசு

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE

**நிர்வாகி:**
ப. வேலுப்பிள்ளை

**ஸ்தாபக ஆசிரியர்:**
அமரர் க. கஜேந்திரன்

**ஆசிரியர்:**
பி. சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
**EELAMURASU**
**22, Rue Perdonnet,**
**75010 Paris, France**

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
அருந்தவராஜா:
Tel: 02 151 39 73 83

டென்மார்க்:
S.E. MAHENDRAN
SPURVE VEJ-20,
7200 GRINSTED.
Tel + Fax: 75310546

சுவிஸ்: மக்கள் கடை
Tel: 01-271 7374

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145

இத்தாலி:
S. தில்லைவாசன்
VIA DANTE - 296, PALARMO
Tel: 03473358290

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
தாறுவஸ்தன்
Tel: 0223 680462



லாச்சப்பலில்

சகலவிதமான அச்சுத் தேவைகளுக்கும்

**தமிழ் அச்சகம்**

Tel: 01 42 09 60 64


# புதிய குடியேற்ற விதிகளுக்கு எதிராக பாரிசில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

பிரான்சில் உருவாக்கப்பட்டு வரும் புதிய குடியேற்ற சட்ட விதிகளை எதிர்த்து அறிஞர்கள். கலைஞர்கள் அரசியல் கட்சிகள் இணைந்த போராட்டம் ஒன்று தீவிரமடைந்து வருகின்றது. இதன் முக்கிய அம்சம் 22.02.1997 சனிக்கிழமை பாரிசில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று திட்டமிடப் பட்டுள்ளது.

இவ் உர்வலம் GARE DE L'EST சனிக்கிழமை மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இச் சட்டத்தை எதிர்க்கும் நோக்குடன் சட்ட மறுப்பு இயக்கம் ஒன்று திட்டமிடப் பட்டுள்ளதாக சில செய்திகள் தெரிவிக்கின்றன.

இச் சட்டமூலம் எதிர்வரும் 25.02.1997 அன்று பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்படுகின்றது. இச் சட்டத்தை தாம் நிராகரிப்பதாக 461 திரைப்பட நடிகர்கள், 130 திரைப்படத் தயாரிப்பாளர்கள், 110 பத்திரிகையாளர்கள் 210 மொழி பெயர்ப்பாளர்கள், 496 பாடகர்கள், 421 பல்கலைக்கழக விரிவுரையாளர்கள். 130 நாடக அரங்கேற்றுனர்கள், 250 பிரசார அதிபர்கள், 365 உளவியல் நிபுணர்கள், 147 சிற்ப வேலைசெய்பவர்கள், 54 கருத்தோவியம் வரைபவர்கள், 150 கட்டிடக் கலைஞர்கள் கையெழுத்திட்ட மனுக்களை அனுப்பியுள்ளனர்.

INTERNET மூலம் எதிர்ப்பு தெரிவிக்க விரும்புபவர்கள் பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளன.

HTTP://WWW.PREMIER/ MINISTRE. GOUV (பிரதமர் அலுவலகம்)
HTTP:// WWW. VOLUTE, QC.CA/ECRA NOIR/APPEL 66HTM
WEBMASTER@ASSEMBLEE.NAT.FR (பாராளுமன்றம்)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## சந்திரிகா...

இச் சம்பவத்திற்கு மக்கள் முன்னணி அரசின் குண்டர் படையினரே காரணமென உணவு விடுதியின் உரிமையாளரான ஐ.தே.க. உறுப்பினர் சரத் ஜொங்கே தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்ட பின்னர் விடுதிக்குள் நுழைந்த இக் குழுவினர் விடுதியின் உரிமையாளரை தேடிய போதும் அவர் ஏற்கனவே தப்பிச் சென்ற காரணத்தால் மீண்டும் துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்ட பின்னர் இக் குழுவினர் தப்பிச் சென்றுவிட்டனர்.

இரத்தினபுரி மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் நத்தா எல்லாவலயின் ஈமச் சடங்குகள் நடந்து சொற்ப நேரத்தின் பின்னரேயே இச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## எனது உயிருக்கு...

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்தை கட்டுகாஸ் தோட்டையிலுள்ள பாடசாலை ஒன்றின் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

நாட்டில் இன்றிருக்கும் நிலைமை சொற்ப வருடங்களுக்கு முன் இருந்தது போல் அல்ல. அன்று பாதுகாப்புச் செலவீனம் சுமார் 30 மில்லியன்களாக இருந்தது. ஆனால் இன்று அது சுமார் 49 மில்லியன்களாக அதிகரித்துள்ளது. இதனாலேயே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியுள்ளது.

புலிகளுக்கான யுத்தம் இலேசான விடயமல்ல. எமது சிங்கள தேசத்தை கட்டியெழுப்ப போராடிக் கொண்டிருக்கும் படையினரை நாம் எப்போதும் கௌரவிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். வடக்கிலிருந்து எனக்கு வரக்கூடிய ஆபத்துக்கு எதிராகவும் அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு ரத்வத்தை மேலும் தெரிவித்தார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## 173 ஈழத் தமிழர்கள்...

நெதர்லாந்து நாட்டில் ஒரே தடவையில் ஏராளமானோர் அகதி அந்தஸ்து கோரியமை இதுவே முதற் தடவை என நெதர்லாந்து செய்தி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விமானத்தின் ஓட்டிகளினால் விமான நிலையத்திற்கு தரையிறங்கக் கோரி அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்ட போது நேர அட்டவணை எதுவுமற்ற விமானம் ஒன்று திடீரென வருவது தொடர்பாக விமான நிலைய அதிகாரிகள் பெரும் குழப்பத்தில் ஆழந்தனர்.

எனினும் விமானத்தை தரையிறங்குவதற்கு அனுமதியை வழங்கினர். விமானத்தை நெருங்கிய அதிகாரிகள் விமானத்தின் கதவினைத் திறந்து பார்த்தபோது விமானத்திலிருந்த 173 பேரும் தமக்கு நெதர்லாந்தில் அகதி அந்தஸ்து தரும்படி ஏகோபித்த வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவர்கள் அனைவரையும் பொறுப்பேற்ற குடிவரவு பிரிவு அதிகாரிகள், அனைவருக்கும் தற்காலிக வதிவிட அனுமதிகள் வழங்கி விசேட தங்குமிடங்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்கள்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## அதிகாரிகள்...

இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இரத்தினபுரி மாவட்ட ஆளும் கட்சி எம்.பி. நாலந்த எல்லாவல படுகொலை சம்பவம், மற்றும் அதைத் தொடர்ந்து நடைபெற்ற பொலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் தாக்குதல் ஆகிய காரணங்கள் தொடர்பாகவே இவர்கள் இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சப்ரகமுவ பிரதிப் பொலிஸ் மாஅதிபராக இருந்த நிமல் ஜெயசுந்தர ஏற்கனவே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தற்போது இடமாற்றத்திற்கு இலக்கான பொலீசாரின் நடவடிக்கைகள் குறித்து விசாரணைகள் நடாத்தப்பட்டு வருவதாக பொலீஸ் தலைமையக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## இராணுவ...

டுப்புப் போர் உபாயத்தைக் கொண்ட ஒரு நீண்டகாலத் திட்டம் என அறியப்படுகிறது. அடுத்த மாதம் நடக்கவுள்ள சிறீலங்காவில் உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னராக உத்தேசப் படையெடுப்பை ஆரம்பித்து வாக்கு வேட்டை நடாத்தும் நோக்கமும் அரசுக்கு உண்டு. எனினும் இந்த வன்னிப் படையெடுப்புக்கு முக்கியமாக இரண்டு காரணங்கள் இருக்க முடியும். முதலாவதாக குடாநாட்டுப் படையினருடன் இராணுவ தரைத் தொடர்பை ஏற்படுத்துவது. இரண்டாவது, சர்வதேசமும் சிங்கள தேசமும் ஏற்றுக் கொள்ளத்தக்க பெரும் பின்னடைவு ஒன்றை புலிகளுக்கு வழங்க முயல்வது.

வன்னித் தளத்தில் பல்வேறு முனைகளிலும் படையெடுப்பு அரங்குகள் திறக்கப்படக்கூடிய சாத்தியப்பாடுகளை எதிர்பார்த்து இவ் அசைவுகளை அவதானித்த வண்ணம் புலிகளின் படைகள் காத்திருக்கின்றன. எனவே, அகன்று பரந்து படைகளை நகர்த்துவது பேராபத்தை விளைவிக்கும் ஒரு காரியமாகவே சிங்களத் தரப்புக்கு இருக்கப் போகிறது. யாழ்ப்பாணச் சமரிற்குப் பிறகு முல்லைத்தீவு என்றும், ஆனையிறவு என்றும் மற்றும் வேறு வழியிலாகவும் புலிகள் பெற்றிருக்கின்ற புதிய தளபாட பலமும் கணிசமான மனித வளமும் மரபு முறைச் சமர்களில் ஈடுபட வ்ல்ல திடமான போர்த்திறனை இப்போது புலிகளுக்கு வழங்கியுள்ளன. ஆரம்பிக்கப்பட்ட படையெடுப்பானது சிங்களத் தலைமை குறித்து தற்கொலைக்கு ஒப்பான காரியம் ஒன்றாக எதிர்காலத்தில் இதனை இராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் ஆய்வாளர்கள் வரலாற்று ரீதியாகப் பதியப் போகிறார்கள்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## வேவு விமானம்...

அதிகாரிகள் சிறீலங்கா வந்திருந்தனர்.

இவர்களின் அறிவுறுத்தலின் பேரில் அநுராதபுர விமானப் படைத் தளத்தில் வைத்து பரிசோதனை பறப்பினை மேற்கொண்டபோதே விமானம் வீழ்ந்து நொருங்கியுள்ளது. விமானப்படையினரை மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாக்கிய இச் சம்பவம் பாதுகாப்பு வட்டாரங்களால் ஓரிரு நாட்களுக்கு மறைக்கப்பட்டபோதும் வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் இதனை வெளிப்படுத்தியுள்ளன.

இதே வேளை மூன்றாவது ட்ரோன் விமானமும் பழுதடைந்து இருப்பதாகத் தெரிய வருகிறது.

# அறிவித்தல்

பிரான்சு வாழ் தமிழ்ச் சிறார்களின் ஆற்றல், அறிவை வளர்க்கும் எண்ணத்துடன், சிறுவர்கள் உள்ளரங்க விளையாட்டுப் பயிற்சிகளைப் பெறுவதற்கான ஒழுங்குகள் சிலவற்றை செய்துள்ளோம்.

மேசைப்பந்தாட்டம், சதுரங்கம், கரம், டாம் ஆகிய விளையாட்டுக்களை உடனடியாகவும், மேலும் பல விளையாட்டுக்களை எதிர்வரும் காலங்களிலும் ஆரம்பிக்கவுள்ளோம்.

6 தொடக்கம் 16 வயது வரையான சிறுவர்கள் இவ்விளையாட்டுப் பயிற்சிகளில் கலந்துகொள்ளலாம். இப்பயிற்சிகளை வழங்குவதற்கு திறமையான பயிற்சியாளர்களையும் ஏற்பாடு செய்துள்ளோம்.

விளையாட்டுக்களில் ஆர்வமுள்ள தமிழ்ப்பெற்றோர்களே!

உங்கள் பிள்ளைகளின் ஆரோக்கியத்தைப் பேணவும், எதிர்காலத்தில் திறமையான விளையாட்டு வீரர்களை உருவாக்கும் நோக்குடனும் ஆரம்பிக்கவிருக்கும் இவ் விளையாட்டுப் பயிற்சி நிலையத்திற்கு உங்கள் பிள்ளைகளை அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

தொடர்புகட்கு: தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - பிரான்ஸ் - 01 43 58 11 42


லாச் சப்பலில் குறைந்த செலவில் நிறைந்த பிரயாண சேவை

**Errances Travels**

Fax: 01 42 09 53 39 - Li: 075 95 01 37
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc
தொடர்புகளுக்கு: நாதன் (தமிழில்)

Tél 01 42 09 70 00

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,700 Frs. |
| Colombo | - | 3,950 Frs. |
| Singapour | - | 3,700 Frs. |
| Kualalumpur | - | 3,400 Frs. |
| Madras | - | 3,800 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,400 Frs. |
| Montreal | - | 2,260 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,260 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

(ADV)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly

# அம்பலப்படுத்துவது அவசியம்

சிறீலங்காவிற்கு மலையக மக்கள் கொத்தடிமைகளாகக் கொண்டுவரப் பட்டு 150 வருடங்களாகப் போகின்றது.

இந்த 150 வருட காலத்தில் அந்த மக்கள் அனுபவித்த கஷ்டங்களும், துன்பங்களும் சொல்லில் அடங்காதவை.

சிறீலங்காவின் பௌத்த சிங்களப் பேரினவாதிகள், தங்களின் நாட்டை ஆக்கிரமிக்க வந்த ஆக்கிரமிப்பாளர்களாக அந்த மக்களை திட்டித் தீர்த்தும் காலந்தோறும் வெட்டிக் கொன்றும் வருகின்றனர். ஆனால் அந்த மக்களது உழைப்பிலேதான் அந்த துட்டகைமுனு புத்திரர்களது நாடு வாழ்ந்து கொண்டிருக்கிறது என்ற உண்மை அவர்களுக்குத் தெரிவதில்லை.

இன்றைய சிங்கள பௌத்த பேரினவாதிகளும், அரசியல்வாதிகளும், அமைச்சர்களும் சொகுசு வாழ்க்கை வாழ்வதற்கும், ஆள் படை அணிகளுடன் பந்தாவாக ஆடம்பரக் கார்களில் பவனி வருவதற்கு அந்த அப்பாவி மலையத் தமிழனின் உழைப்பு அடிப்படையாக இருந்து வருகிறது.

தொடர்ந்து, சிறீலங்காவின் பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதற்காக தங்களது உயிரையும் உடலையும் தொடர்ந்து அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற 'நாடற்றவர்கள்' என்று சொல்லி, ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிற, புறக்கணித்து வைக்கப்பட்டிருக்கிற அடிப்படை மனித உரிமை மீறல் உலகத்தின் வேறெந்த நாட்டிலும் இவ்வளவு பெரிய அளவில் சமீப காலத்தில் நடைபெற்றதாக வரலாறு இல்லை.

1948-ம் ஆண்டு அந்த மக்களின் வாக்குரிமையை பறித்ததிலிருந்து 1964-ம் ஆண்டு, அவர்களின் விருப்பம் அறியாமலே இந்தியாவுக்கு திருப்பி அனுப்புவதற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டது. 1996-ல் தோட்டங்களை தனியார் மயப்படுத்தி, சிங்களக் காடையர்கள் மூலம் பல தோட்டங்களிலிருந்து அவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றியவரை அந்த மக்களுக்கெதிரான சட்ட ரீதியான அடக்குமுறை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

சிறீலங்கா அரசு தன்னை ஒரு ஜனநாயக அரசாகவும், எல்லா மக்களுக்கும் சமத்துவமான உரிமைகளை வழங்க முற்படுகிற அரசாகவும் 150 வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்ட 8 அடிக்குள்ளேயே அவர்களது வாழ்க்கை இன்னும் முடங்கிப் போய் கிடக்கிறது.

சிங்களப் பேரினவாதிகள் தங்களுக்கு வெள்ளை எஜமானனிடமிருந்து சுதந்திரம் கிடைத்த 50 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாட கோலாகலமான ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிற நேரத்திலே அந்த மக்களை நாதி அற்றவர்களாக நாடற்றவர்களாக செய்யப்பட்ட 50 வருட நிறைவும் சேர்ந்து விடுகிறது என்பது பெரிய அளவுக்கு வெளிக்கொணரப்படவில்லை.

இங்கே ஐரோப்பிய நாடுகளில் 5 முதல் 15 வருடங்கள் நிரந்தரமாக வசித்தவர்களுக்கு வதிவிட உரிமை வழங்கப்படுகின்றது. 20 முதல் 50 வருடங்களுக்குள் இங்கிருந்து அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, கனடா, அமெரிக்காவுக்குச் சென்றவர்கள் அந்த நாட்டுப் பிரசைகள் ஆகியிருக்கின்றார்கள். முழுக்க முழுக்க வெளிநாடுகளிலிருந்து சென்றவர்களால், அமெரிக்காவிற்கும், கனடாவிற்கும், அவுஸ்திரேலியாவுக்கும் உரிமை கோரப்படுகிறது.

ஆனால் 150 வருடங்களாக பல தலைமுறைகளாக மலையகத் தமிழினம் மலை மண்ணிலே இருந்து தமது குரலை வெளியுலகிற்கு காட்ட முயன்று வந்திருக்கிறது வருகிறது.

தென் ஆபிரிக்காவில் இடம் பெற்ற இனவெறி நிறவெறிக்கு ஒப்பானவகையில் 50 முதல் 150 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வரும், இந்த மக்களுக்கு 'தமிழர்கள்' என்ற இனவாத அடிப்படையிலான திட்டமிட்ட மனித உரிமை மீறலை செய்துவருகிற ஒரே நாடு சிறீலங்காதான் என்ற உண்மை பெரிய அளவுக்கு இங்கே மேற்குலகில் பிரச்சாரப்படுத்தப்படுவதில்லை

உலக சமாதானம், மனித உரிமைகள், ஜனநாயக உரிமைகள் பற்றி அதிகளவுக்கு பேசப்படுகின்ற இந்தத் தசாப்தத்தில் 3 இலட்சத்துக்கு அதிகமான மக்கள் எந்த வித உரிமையும் இல்லாமல் நாடற்றவர்களாக நாதியற்றவர்களாக வாழுகின்ற கொடுமை சிறீலங்காவில் மட்டும் தான் உள்ளது என்பது பெரிய அளவுக்கு வெளியுலகுக்கு அம்பலப்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும்.

## வாழைச்சேனையில் தொடரும் வன்செயல் ஆறு கருவாட்டுக் கடைகள் தீக்கிரை

வாழைச்சேனைப் பகுதியில் தொடர்ந்து வன்செயல்கள் நடைபெற்று வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. வாழைச்சேனை பிரதான வீதியில் அமைந்திருந்த ஆறு கருவாட்டுக்கடைகள் கடந்த ஞாயிறு இரவு எட்டு மணி அளவில் இனம் தெரியாதவர்களினால் தீயிட்டுக் கொழுத்தப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. இக் கடைகள் தகரத்தாலும் தென்னங்கிடுகுகளாலும் அமைக்கப்பட்டிருந்தன எனக் கூறப்படுகின்றது.

இதேவேளையில் இவ் வீதியில் இராணுவத்தினரும் பொலீசாரும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டு வருவது வழமை எனவும் தெரிவிக்கப்படுகிறது. இப் பகுதியில் நடைபெற்ற மற்றொரு வன்செயல் சம்பவத்தில் அஸார் (19) என்ற முஸ்லீம் ஊர் காவல் படைவீரர் ஒருவரும் இனந் தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

வாழைச்சேனைப் பகுதியில் தினமும் ஒவ்வொரு சம்பவம் இடம் பெறுவதால் இப் பகுதியில் உள்ள தமிழ் முஸ்லீம் மக்கள் அச்சத்துடன் வாழ்வதாகவும் இப்பகுதியில் தொடர்ந்து பதட்டம் நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஓட்டமாவடியில் கலவரமா? பள்ளிவாசல் மறுக்கிறது

வாழைச்சேனையில் ஊர் காவல் படைவீரர் கொல்லப்பட்டதையடுத்து ஓட்டமாவடியில் கலவரங்கள் வெடித்தன என்று கூறப்படுவது தவறானது. ஓட்டமாவடி பள்ளிவாசல் நிர்வாக எல்லைக்குள்ளேயோ அல்லது ஓட்டமாவடி பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள்ளேயோ தமிழர்களுக்கு எதிரான எத்தகைய வன்முறைகளும் இடம்பெறவில்லை. இதனை திட்டவட்டமாக கூறிவைக்க விரும்புகிறோம் என ஓட்டமாவடி முகைதீன் ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது அயல் கிராமத்தில் சில வன்செயல்கள் ஆரம்பித்த போது ஓட்டமாவடியில் இருந்த 25 ற்கும் மேற்பட்ட தமிழ் சகோதரர்களை நாம் பாதுகாத்து அனுப்பி வைத்துள்ளோம்.

அயல் கிராமங்களில் இடம் பெறும் எல்லா சம்பவங்களுக்கும் எம்மீது பழி போடப்படுவது முறை கேடானது. ஓட்டமாவடியில் கலவரம் மூண்டதாகக் கூறப்படுவது எம்மை அகௌரவப்படுத்தும் செயலாகும் எனவும் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பராமரிப்புப் பணியின்போது சேதமடைந்த "எயர்லங்கா"

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை காலை பராமரிப்புப் பணியில் எயர் லங்கா விமானம் ஒன்று ஈடுபடுத்தப்பட்டிருந்த வேளையில் அதன் முகப்புப் பகுதி சேதமடைந்திருப்பதாக அறியவருகின்றது.

இந்த எயர்லங்கா விமானம் திங்கள் அதிகாலை 2.45 மணியளவில் பாஃரெய்னில் இருந்து கொழும்புக்கு வந்ததாகக் கூறப்படுகின்றது. இதன் பின்னர் எயர்லங்கா நிறுவன பொறியியலாளர்கள் விமானத்தை பராமரிப்புக்கு உட்படுத்தியிருந்தனர்.

விமானத்தின் இயக்க முறைகளை அவர்கள் பரீட்சித்துக் கொண்டிருந்த வேளையில் முன் சக்கரம் உள்வாங்கவே முன் பகுதி தரையில் பட்டு விமானம் சேதத்துக்குள்ளானது. பின்னர் இச் சம்பவம் தொடர்பாக உடனடி விசாரணை மேற்கொள்ளப்பட்டதுடன் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவா என்பது குறித்தும் ஆராயப்பட்டது. இந்த விமானம் விரைவில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படலாம் எனவும் கூறப்பட்டுள்ளது.

## எல்லாவல கொலையில் தேடப்பட்ட முன்னாள் மேயர் சரணடைந்தார்

நாலந்த எல்லாவல எம்.பியின் படுகொலை தொடர்பாக தேடப்பட்டு வந்த இரத்தினபுரி மாநகரசபையின் முன்னாள் மேயர் மகிந்த ரத்னதிலக நிதிவாணன் வீட்டுக்குச் சென்று சரணடைந்துள்ளார். இவரை 20-ம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு கோட்டை நீதிமன்ற நீதவான் மேர்வின் காமினி விஜயதுங்க உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு தேடப்பட்ட ரட்னதிலக, சிரேஸ்ட சட்டத்தரணி தயா பெரேரா, ஜனாதிபதி சட்டத்தரணி எல்.எம்.என். அமீன் சகிதம் நீதவான் வீட்டுக்கு சென்று சரணடைந்துள்ளார். இவர் எதிர் வரும் 20-ம் திகதி இரத்தினபுரி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட இருப்பதாக தெரியவருகிறது. இதேவேளை இரத்தினபுரி மாவட்ட எம்.பி. புஞ்சிநிலமே தொடர்ந்து தேடப்பட்டு வருகிறார். இவரும் சரணடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. மேற்படி இருவரையும் கைது செய்ய உதவுவோருக்கு 20 இலட்சம் சன்மானம் வழங்கப்படும் என அரசு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வீடொன்றில் புகுந்து தாக்கிய 9 இராணுவத்தினர் கைது

திருமலை இராணுவ முகாமில் பயிற்சி பெற்று வீடு திரும்பும் வழியில் வலஸ்முல்லை, கல்லந்தமுல்லை என்ற இடத்திலுள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்து அங்கிருந்த மூவரை தாக்கிய இராணுவ வீரர்கள் ஒன்பது பேரை வலஸ்முல்லைப் பொலீசார் கைது செய்துள்ளனர். இதேவேளை வீட்டார் எதிர் தாக்குதல் நடத்தியதில் இரு இராணுவ வீரர்கள் காயமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இராணுவ வீரர் ஒருவரின் வீட்டுக்கு அருகில் உள்ள வீட்டாரே தாக்கப்பட்டவர்களாவர். பழைய பகைமையின் பழி வாங்கும் செயலாகவே இராணுவம் தாக்குதலை நடத்தியதாக பொலீஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத் தாக்குதல் சம்பவம் பற்றிய விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருவதாக தெரியவருகிறது.

## கிரேக்க கப்பல் முகவர்கள் பிணையில் செல்ல அனுமதி 7 பேரின் கடவுச்சீட்டுக்கள் பொலீசில் ஒப்படைக்க உத்தரவு

கிரேக்கப்பகுதியில் கடந்த வருட இறுதியில் நடைபெற்ற கப்பல் விபத்தில் பல இலங்கையர் கொல்லப்பட்டமை தொடர்பாக பொலீசாரினால் விசாரணை செய்யப்பட்டு வாக்கு மூலம் பெறப்பட்ட 7 உப பயண முகவர்கள் 50 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையும் தலா ஒருவரின் சரீரப் பிணையிலும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சுப்பிரமணியம் குலேந்திரன், பாலேந்திரன் தம்பையா, கணபதிப்பிள்ளை கனேஸ்வரன், அப்பாத்துரை சாந்திதாஸ், சுப்பிரமணியம் ரவிச்சந்திரன், மாரிமுத்து குலேந்திரன், மொஷாயஸ் ஆகிய முகவர்களே பிணையில் விடுவிக்கப்பட்டவர்களாவர். இவர்கள் இன்ரர்போல் பொலீசாரின் விசாரணைக்கு வேண்டியவர்கள். எனவே இவர்களின் கடவுச் சீட்டுக்களை ஒப்படைக்கும்படி கட்டளையிட வேண்டுமென இரகசியப் பொலீசார் நீதவானைக் கேட்டுக் கொண்டனர்.

இதற்கிணங்க சந்தேக நபர்களின் கடவுச் சீட்டுக்களை பொலீசாரிடம் ஒப்படைக்குமாறும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் இன்ரர் போல் பொலீசாரிடம் கையொப்பமிடுமாறும் கட்டளையிட்டு சந்தேக நபர்களை பிணையில் செல்ல நீதவான் அனுமதித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாலந்தவின் கொலையில் சம்பந்தப்பட்டோரை சரணடையக் கோருகிறார் ரணில்

இரத்தினபுரி மாவட்ட எம்.பியான நாலந்த எல்லாவல கொலை தொடர்பாக தேடப்படும் தனது கட்சி எம்.பி புஞ்சி நிலமேனியும் மற்றையோரையும் உடனடியாக பொலீஸ் சரணடையுமாறு ஐ.தே.கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன் இக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய எந்தவொரு ஐ.தே.கட்சி உறுப்பினரும் கட்சியிலிருந்து வெளியேற்றப்படுவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் நாலந்தவின் கொலை சம்பவத்தை வன்மையாகக் கண்டனமும் செய்தார்.

குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும், அரசியல் வன்முறைக் கலாச்சாரத்தை ஐ.தே. கட்சி கண்டிக்கிறது. உள்ளூராட்சித் தேர்தல்கள் எந்த முறையில் நடந்தாலும் அதை முகம் கொடுத்து எதிர் நோக்கி நாம் வெற்றி பெறுவோம் எனவும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

# புலிகளுடன் பேச வலியுறுத்தவே நாம் தேர்தலில் போட்டியிடுகிறோம்

## ரெலோ அறிவிப்பு

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் தொடரும் யுத்தம் காரணமாக அப்பாவிப் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகையால் அரசு மூன்றாத் தரப்பு மத்தியஸ்தத்துடன் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். வடக்குக் கிழக்கு மாகாணம் இணைந்த நிலையில் அரசாங்கம் அரசியல் யோசனையை அமுல் நடத்த வேண்டும் என்பன போன்ற விடயங்களை வலியுறுத்தவே கொழும்பு மாநகர சபைக்கான தேர்தலில் ரெலோ அதன் கட்சிச் சின்னத்தில் போட்டியிடுகிறது என அவ்வமைப்பின் செயலாளரும் முதன்மை வேட்பாளருமான சிவா பத்திரிகைகளுக்குத் தெரிவித்துள்ளார். ஏனைய தமிழ் கட்சிகளின் ஆதரவை தாம் பெறவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். 50 ற்கும் மேற்பட்டவர்கள் இடம் பெறுகின்ற இவர்களது வேட்பாளர் பட்டியலில் 4 சிங்களவர், 3 பெண்களும் உள்ளடங்குவர் எனத் தெரியவருகிறது.

# மாவீரரின் நினைவாக ஆரம்பப் பாடசாலைகள்

புதுக்குடியிருப்பில் உள்ள மூன்று ஆரம்பப் பாடசாலைகளுக்கு மாவீரர்களின் நினைவாக பெயர் சூட்டப்பட்டுள்ளன. இப் பாடசாலைகளின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகளின் பரிசளிப்பு விழாவின் போதே, மாவீரர்களான திலக், திலகா, மருது ஆகியோரின் பெயர்கள் இப் பாடசாலைகளுக்கு இடப்பட்டுள்ளன. இவ் விழாவில் விடுதலைப் புலிகளின் முல்லை மாவட்ட மகளிர் பிரிவின் அரசியற் பொறுப்பாளர் செல்வி. கிஷ்னா கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கினார்.

# ஜேர்மன் பிரசையான இலங்கை வாலிபர் கட்டுநாயக்காவில் கைது

இலங்கையைச் சேர்ந்தவரும் ஜேர்மன் பிரசையுமான தமிழ் இளைஞர் ஒருவர் இலங்கை வந்து திரும்பிச் செல்கையில் விமான நிலையத்தில் வைத்து இரகசியப் பொலீசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தம்முடன் சிலரை கூட்டிச் செல்ல முற்பட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மேற்படி இளைஞர் நீர்கொழும்பு நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது சந்தேக நபர்களை பிணையில் செல்ல நீதவான் அனுமதித்துள்ளார்.

வடபகுதியை சேர்ந்தவரும், எட்டுவருடம் ஜேர்மனியில் வசித்து, தற்போது ஜேர்மன் பிரசையுமான கந்தசாமி சூரியகுமார் (29) என்பவரே இலங்கை வந்து திரும்ப ஜேர்மன் செல்லும் வேளையில், வனஜா இளையா (21) ராஜரதி அன்னராசா (44) ராஜமணி ரகுநாதன் (10) அனித்தா இந்திரராஜா (12) ஆகியோரைக் கூட்டிச் செல்ல முயன்றார் என்றும் வெளி நாட்டு வேலைவாய்ப்பு முகவராக இவர் தொழில்பட்டார் என்றும் பொலீசார் மேற்படி வாலிபர் மீது குற்றம் சாட்டியுள்ளனர்.

மேற்படி சந்தேக நபர்களை பிணையில் செல்வதற்கு ரகசியப் பொலீசார் மறுப்புத் தெரிவித்ததுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள் என்றும் தற்போது அவர்கள் லொட்ஜில் தங்கியிருப்பதால், பிணையில் சென்றால் மீண்டும் திரும்பி வர வாய்ப்பில்லை எனவும் தெரிவித்துள்ளார். ஆகையால் நீதவான் சந்தேகநபர்களை 5000 ரூபா ரொக்கப் பிணையிலும் 50,000 ரூபா சரீரப் பிணையிலும் விடுதலை செய்துள்ளார்.

## பொன்னாலையில் பலியான மக்கள்

பொன்னாலை பகுதியில் கடந்த மாத இறுதியில் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 9 பேரினதும் விபரங்கள் கிடைத்துள்ளன. வயல் வேலைக்கு சென்ற மக்களை மறித்த படையினர் அவர்களை ஈவிரக்கமின்றி சுட்டுக் கொன்றனர். இச் சம்பவத்தில் மேலும் அறுவர் படுகாயமடைந்துள்ளனர். பலியானோர் விபரங்கள் வருமாறு;

சின்னப் பொடியன் செல்வம் (60 வயது)
இரட்ணம் சரஸ்வதி (45 வயது)
சற்குணராசா புவனேஸ்வரி (20 வயது)
நாமுத்து நகுலேஸ்வரம் (15 வயது)
வீரவன் ஆனந்த மூர்த்தி (30 வயது)
சாந்தமல்லி ஆனந்தமூர்த்தி (28 வயது)
சின்வன் சண்முகம் (65 வயது)
சின்னவன் நாகன் (55 வயது)
நாகன் புவனேந்திரன் (20 வயது)

பலியானவர்களில் அதிகமானோர் உறவினர்களாவர்.

## அறிவித்தல்

செல்வி லோகநாதன் மாதங்கி என்பவரது கடவுச்சீட்டு, அடையாள அட்டை, என்பன ஐரோப்பிய நாடொன்றில் கண்டெடுக்கப்பட்டுள்ளது மேலதிகத் தொடர்புகட்கு 'ஈழமுரசு'டன் தொடர்பு கொள்ளவும்.


லாக்கூர்னோவில் வீடு வாடகைக்கு

இரண்டு அறைகள் கொண்ட 35M2 அளவுடைய சகல வசதிகளுடன் கூடிய வீடு, Mo: La courneuve-இல் இருந்து 50 மீற்றர் தொலைவில் Center Commercial CARREFOUR, L'ecole, Marche 7/7 ஆகிய வசதிகள் உள்ளன.

வாடகை 2600 Frs

குத்தகைக்கு

பாரிஸ் 18 (Métro: Guy Moquet ல்) சகல வர்த்தகத்துக்குமான 100 சதுர மீற்றர் கடை ஒன்று 3,90,000 பிராங்குகளிற்கு குத்தகைக்கு விடப்படும். மாத வாடகை 8,000 பிராங்குகள்.
Centre Commercial, Marche 7/7 என்பன அருகில் உண்டு.
உணவு விடுதிக்கு மிகவும் வசதியானது.

தொடர்புகளுக்கு: Mr SRONG
Tel: 01 42 26 50 24

கலைப் பிரியர்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம்

ஐரோப்பிய நாடுகள் தழுவிய மாவீரர் குறும்பட போட்டி

இன்றிலிருந்தே தயாராகுங்கள்.
தொடர்புகளுக்கு: கலைபண்பாட்டுக் கழகம், பிரெஞ்சுக்கிளை
தொலைபேசி: 01 43 58 11 42

மொழிபெயர்ப்புச் சேவை

* உங்கள் அனைத்து மொழிபெயர்ப்புகளுக்கும், (கடிதத் தொடர்புகள் 1 பக்கம் மொழிபெயர்க்க - 60 Frs.)
* தொலைநகல் (Fax) சேவைக்கும் (35 Frs வெளிநாடுகளுக்கு)
* கறுப்பு வெள்ளை / வர்ண Photo Copie எடுக்கவும்

எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்

*Copies la Chapelle*

32, Rue Philippe de Girard, 75010 Paris. Tel: & Fax: 42 09 60 94


வாகன சேவை



உங்கள் பொருட்கள், வீட்டுத் தளபாடங்கள் போன்றவற்றை ஏற்றி இறக்கவும் வெளியூர் பிரயாணம் போன்ற தேவைகளுக்கும்

ரவி: 01 48 76 51 90
06 07 62 26 89 / 01 42 23 23 10

வாகன சேவை



உங்கள் பொருட்கள், வீட்டுத் தளபாடங்கள் போன்றவற்றை ஏற்றி இறக்கவும் வெளியூர் பிரயாணம் போன்ற தேவைகளுக்கும்

ரவி / தனபால்: 01 42 43 70 63



வீட்டுத் தளபாடங்களை ஏற்றி இறக்கவும், உங்கள் மங்கல வைபவங்களுக்கும், லூர்து யாத்திரை போன்றவற்றிற்கும் தேவையான வாகன வசதிகளுக்கு;

Tel: 01 43 03 07 08
01 48 05 02 14 / 01 49 23 97 32
பிரயாண வசதி கருதி: 06 07 34 80 51

நித்தி வாகன சேவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புக்கு வந்த அமெரிக்கப் பன்றிகள்

அமெரிக்காவிலிருந்து 32 பன்றிகள் சிறிலங்காவிற்கு வந்து சேர்ந்தன. கடந்த வாரம் இப்பன்றிகள் கொரிய விமானமொன்றின் மூலமாக கொழும்பை வந்தடைந்தன.

சிறிலங்காவில் பன்றி வளர்ப்பில் ஏற்பட்டுள்ள மந்த நிலையைப் போக்குவதற்கான வெவ்வேறு மூன்று இனங்களிலுள்ள இப்பன்றிகள் மாரவில்லவிலுள்ள விலங்குப் பண்ணை ஒன்றிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இப்பன்றி வளர்ப்பிற்கு அமெரிக்க அரசும் நிதியுதவி செய்துள்ளது. இப்பன்றிகளை இனப் பெருக்கம் செய்து ஏனைய பண்ணைகளுக்கு அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளதாம்.

# ஐ.தே.கட்சி எம்.பி, முன்னாள் மேயர் கைது செய்ய உதவினால் 20 லட்சம்

நாலந்த எல்லாவல எம்.பியின் கொலை தொடர்பாக தேடப்படும் ஐ.தே.க. முன்னாள் மேயர் மகிந்த இரட்ணதிலக, புஞ்சிநிலமே எம்.சி ஆகிய இருவரையும் கைதுசெய்ய, அவர்கள் மறைந்திருக்கும் இடங்கள் பற்றி தகவல் தருவோருக்கு தலா 10 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என பொலீஸ்மா அதிபர் டபிள்யூ.பி. ராஜகுரு அறிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் உள்ள குருவிட்ட என்னும் இடத்தில் கடந்த 11-ம் திகதி நாலந்த எல்லாவல எம்.பியும் பண்டாரவளை பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த M.N.ஜெயசேனா எனும் கான்ஸ்டபிளும் படு கொலை செய்யப்பட்டமை தொடர்பாக தேடப்படுவரும் அசந்தபுஞ்சி நிலமே எம்.பி, மகிந்த இரட்ணதிலக ஆகியோரை கைதுசெய்ய பொதுமக்களின் ஒத்துழைப்பையும் பொலீசார் நாடியிருப்பதாக தெரியவருகிறது.

இதே வேளை தேடப்படும் மேற்படி இருவருக்கும் இருப்பிடவசதி வழங்குவதோ அல்லது அதுபற்றிய விபரத்தை இரகசியமாக வைத்திருப்பதோ, தமக்குத் தெரிந்திருந்து அதனை வெளிவிடாது இருப்பதோ தண்டனைக்குரிய குற்றமாகும் எனவும், ஆதலால் யாராவது இந்த இரு சந்தேக நபர்களுக்கும் புகலிடமோ உதவியோ வழங்கினால் கைது செய்யப்படுவதுடன் கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கப்படுவர் எனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க கடந்த வியாழக்கிழமை கூடிய அமைச்சரவை எல்லாவலவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தியதுடன் இக் கொலை குரூரத்தனமாகவும் அரசியல் உள்நோக்கம் கொண்டதாகவும் உள்ளதென கண்டனம் தெரிவித்துள்ளது.

# கொழும்பில் யாழ். வெங்காயம், சுருட்டு, சர்க்கரை, சுளகு

யாழ்ப்பாணத்தில் இருந்து ஆறரைக் கோடி ரூபாவிற்கு மேற்பட்ட உற்பத்திப் பொருட்கள் கொழும்புக்கு கொண்டுவரப்படுவதாக தெரிய வருகிறது. காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து மேக்ஸ் மாகோ என்ற கப்பல் மூலம் வெங்காயம், சுருட்டு, சர்க்கரை, சுளகு போன்ற பல்வேறு பொருட்கள் கொண்டுவரப் பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து அண்மைக் காலத்தில் இந்தளவு பெருந்தொகையான பொருட்கள் கொண்டு வரப்பட்டமை இதுவே முதற்தடவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மேலும் பலவகையான பொருட்கள் எடுத்துவரப்படுமெனத் தெரிய வருகிறது. யுத்த சூழ்நிலைக்குள்ளும் மக்கள் தமது உணவு உற்பத்தி முயற்சியில் தளராது ஈடுபடுவதனையே இது காட்டுகிறது எனக் கூறப்படுகிறது.

# ஆபாசப்படம் தயாரித்தவர் நாடுகடத்தப்பட்டார்

நீர்கொழும்பில் சிறுவர்களை வைத்து ஆபாசப்படம் தயாரித்தவர் என்ற குற்றச் சாட்டின் பேரில் வழக்குத் தொடரப்பட்டு வந்த சுவிஸ் வர்த்தகரான விக்டர் பகுமான் அவரது நாட்டுக்கு நாடுகடத்தப்பட்டுள்ளார்.

1985-ம் ஆண்டு முதல் வதிவிட விசா பெற்று நீர் கொழும்பில் வாழ்ந்துவந்த இவர் இலங்கைச் சிறுவர்களை வைத்து ஆபாசப்படங்களை தயாரித்து வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்தார் என்ற குற்றச்சாட்டில் அவர் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

நீர் கொழும்பு அத்துல்கல சில்வஸ்டர் வீதியில் தங்கியிருந்த பகுமான் விடுதகுச் சென்ற குற்றத்தடுப்புப் பிரிவு உதவி பொலிஸ் அத்தியட்சர் நோபல் பிரான்சிஸ், அவரை குடிவரவு, குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளரிடம் ஆஜர்செய்து கடந்த செவ்வாய்க் கிழமை அவர் சுவிசுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார். பகுமான் இனிமேல் இலங்கைக்கு வரமுடியாதவாறு கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்குக்-கிழக்குப் பகுதியில் நுளம்பு ஒழிப்புத் தினம்

வடக்குக்- கிழக்குப் பகுதியில் கடந்த 15.02.97 ல் இருந்து நுளம்பு ஒழிப்புத்தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக உயிராபத்துமிக்க டெங்குக் காய்ச்சல் பரப்பும் நுளம்புகளை கட்டுப்படுத்துவது தொடர்பாகவே இந்த நுளம்பு ஒழிப்பு தினம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்குக் கிழக்கில் இத்தினத்தை முன்னிட்டு ஒரு வார காலத்திற்கு சுகாதார திணைக்கள உத்தியோகத்தினரால் பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் நுளம்பு ஒழிப்பு தொடர்பான கருத்தரங்குகள் நடாத்துவதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

தற்போது பரவிவரும் டெங்கு என்றழைக்கப்படும் காய்ச்சல் மிகவும் அபாயகரமான ஒன்று என சுகாதாரதிணைக்களம் எச்சரித்துள்ளது. மனித உடல் பல வகையான காய்ச்சல்கள் ஏற்படுகின்றபோதிலும் இந்த டெங்கு காய்ச்சல் உயிர் ஆபத்தை ஏற்படுத்தக்கூடியது என தெரிவிக்கப்படுகிறது.

# முல்லை. மகா வித்தியாலயம் மீண்டும் திறக்கப்பட்டது

சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள் பல வருடங்கள் சிக்கியிருந்த முல்லை மகா வித்தியாலயம் கடந்த வாரம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளினால் 'ஓயாத அலைகள்' சமர் மூலம் முல்லைத் தீவு பிரதேசம் விடுவிக்கப்பட்ட பின்னர் அங்கு நிர்மானப்பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த வாரம் முல்லை. மகா வித்தியாலயம் மீளவும் ஆரம்பிக்கப்பட்டதனால் பெற்றோர்கள் பலர் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

14.02.97 காலை 9.30 மணியளவில் விடுதலைப் புலிகளும், உள்ளூர் நிர்வாக அதிகாரிகளும் இத்திறப்பு விழாவில் பங்கு கொண்டனர். தமிழீழ தேசியக் கொடியை விடுதலைப் புலிகளின் முல்லைப் பிரதேச கல்விப் பொறுப்பாளர் திருஅன்பு அவர்கள் ஏற்றி வைத்தார். அதைத் தொடர்ந்து கல்லூரிக்கொடி அதிபர் திரு. பி. பேரின்பநாயகம் அவர்களால் ஏற்றி வைக்கப்பட்டது. உதவி கல்விப் பணிப்பாளர் திருசுப்பிரமணியம் திறப்பு விழா நாடாவினைச் கத்தரித்து சம்பிரதாய பூர்வமாக பாடசாலையை மக்களுக்கு அர்ப்பணித்து வைத்தார்.


## சிறுகதைப் போட்டி

நடைமுறை பிரஞ்சு, அரும்பு போன்ற நூல்களை வெளியிட்ட A.S.C.E.S கல்வி கலாச்சார நிறுவனம் தனது 7வது ஆண்டு நிறைவையொட்டி இப்போட்டியை நடாத்துகிறது.

* படைப்புகள் ஏற்கனவே பிரசுரமாகாதவையாக இருக்க வேண்டும்
* சிறந்த முதல் இரு ஆக்கங்களுக்கும் பரிசுகள் வழங்கப்படும்

முடிவுத் திகதி: 05-03-1997

முகவரி:

A.S.C.E.S - 62, rue du Poteau, 75018 Paris.



## பொதுக்கூட்டம்

வவுனியா எவர் கிறீன் விளையாட்டுக் கழகத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 23.02.97 ஞாயிற்றுக்கிழமை மாலை ஐந்து மணிக்கு நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகிறோம்.

இடம்: இமாலயா ரெஸ்ரோறன்ட்
9, Rue jacque Louvel Tessier, 75010 Paris.
Métro: Concourt

வவுனியா எவர்கிறீன் விளையாட்டுக் கழக வீரர்கள் பொது மக்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு: ந. நவராஜ்
தொலைபேசி: 01 43 48 42 96



## ORIENT TEXTILIEN & SCHMUCK

KOENIGSWALL 16 (AM FBF), 44137 DORTMUND - TEL: 0231-162377 - FAX: 49-231-147836

* ஜேர்மனியில் தங்க நகைகளின் தரத்திற்கும், தேர்விற்கும் தனிச் சிறப்பு பெற்ற ஸ்தாபனம் சிங்கப்பூர் விலையில் S D 146, * ஆடைகளின் நிரந்தர மலிவு விலைகள்: பனாறிஸ் சாறி 79; மைசூர் சில்க் 85; பட்டபிளை சாறி 25; குப்தா சாறி DM25; பஞ்சாபி DM 26; பட்டுவேட்டி DM 35, * கன, தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள், * புத்தம் புதிய டிசைன்களில் அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய ஆபரண செட் ab DM 119, * உங்கள் பழைய பவுனிற்கு குறைந்த கூலியில் உடனடியாகவே புதிய நகைகள் மாற்றிப் பெறுவதற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்! உரிமையாளர்: ச.ஜெகதீஸ்

(ADV) தரம்! உத்தரவாதம்!! அதிக தேர்வு!!! மலிவு!!!!

தரமான பொருட்களை நியாயமான விலைகளுடன் ஒப்பிடாதீர்கள்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சிறீலங்காவின் முகத்தில் கரி பூசிய 'கரீபியன் குயின்'

ஈழப்போர் III ஆரம்பமாகி 20 மாதங்கள் ஆகியுள்ள நிலையில் சிறீலங்காவின் முப்படைகளும் பெற்ற வெற்றிகளைவிட, அடைந்த தோல்விகளும், பின்னடைவுகளும்தான் அதிகம். இந்த இருபது மாதங்களில் விமானப் படையும், கடற்படையும் சுமார் முப்பது வரையிலான கலங்களை இழந்தன. வடக்கு கிழக்குக் கடல்பகுதியில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட கலங்கள் இல்லாத நிலையில் புதிய ரோந்துப் படகுகளையும், கண்காணிப்புக் கப்பல்களையும் சிறீலங்கா கொள்வனவு செய்தாலும் கடந்தகால அனுபவங்களை மனதிற்கொண்டு அந்த ரோந்துகள் தீவிரமாக இருக்கவில்லை.

இதே போன்று தொடர்ந்து பல விமானங்களை இழந்ததன் காரணமாக சிறீலங்கா விமானிகள் வடக்கு, கிழக்கு வானிற்கு மேல் பறக்க மறுத்தனர். அதே வேளை வாடகைக்கு பல வெளிநாட்டு விமானங்களை விமானிகளுடன் வாடகைக்கு அமர்த்தியே வடக்கு, கிழக்கு இராணுவத்துக்கு விநியோகங்களை மேற்கொண்டது.

சில அரசு சிறீலங்கா விமானிகள் இராணுவ மற்றும் அரச அதிகாரிகள், அமைச்சர்கள் போன்றோரை யாழ் குடா கொண்டு செல்ல இணங்கினாலும் பயத்தினாலோ அல்லது பாதுகாப்பு காரணங்களுக்காகவோ அவைகளும் இந்திய வான் பரப்பை அண்டியே பயணம் செய்து பலாலி படைதளப் பகுதிக்குள் பிரவேசிக்கின்றன.

ஈழப்போரில் நிலைமை இப்படி இருக்க 1997-ம் ஆண்டு சிறீலங்கா வான்படைக்கு மிக மோசமான காலப்பகுதி என இராணுவ ஆய்வாளர்கள் கூறியிருக்கிறார்கள். இவ்வருட ஆரம்பத்திலிருந்து சிறீலங்கா அரசு நான்கு விமானங்களை இழந்திருக்கிறது. இவைகளின் பெறுமதி 400 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும். இந்தவகையில் சிறீலங்கா விமானப்படையின் கவனமற்ற ஒரு நடவடிக்கையால் சிறீலங்கா அரசாங்கம் பல மில்லியன் ரூபாய்களை மீண்டும் இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சிறீலங்கா விமானப்படையும், குண்டுவீசுவதில் திறமை வாய்ந்ததுதான் ஆனால் அதன் இலக்குகள் என்றுமே சரியானதாக இருக்கவில்லை. இம்முறை அதன் அகோர குண்டுவீச்சுக்களினாலும், பீரங்கித் தாக்குதல்களினாலும் ஒரு சரக்குக் கப்பல் பாரிய சேதத்திற்கு உள்ளாக மற்றொரு மீன்பிடிப் படகு மூழ்கடிக்கப்பட்டுள்ளது. கடந்த 09.02.97 ஞாயிற்றுக் கிழமை மாலை 4.00 மணியளவில் சீனத் தயாரிப்பு வை 12 விமானம் சீனன்குடா விமானப் படைத் தளத்திலிருந்து புறப்பட்டு வடக்குக் கரையோரமாக, காங்கேசன்துறை பக்கமாக பலாலிக்கு சென்றுகொண்டிருந்தது. சிறீலங்கா விமானப்படையிடம் விசேடமான கண்காணிப்பு விமானங்கள் இல்லாததால் வை 12 ரக விமானங்களே கடல்பகுதி கண்காணிப்புகளுக்கு பாவிக்கப்பட்டு வந்தன. ஆகையால் கடற்படை அதிகாரி ஒருவரும் இவ்வகையான விமானங்களில் செல்வது வழக்கம். இவ் விமானத்தில் விமானி, உதவி விமானி இரண்டு கண்காணிப்பாளர்கள் மற்றும் அனுபவம் மிக்க விமானப்படை கணிப்பாளர், ஒரு கடற்படை அதிகாரி ஆகிய ஆறுபேர் இருந்தனர். கடந்த சில மாதங்களாகவே விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல்களை எதிர்பார்த்து இந்தியக் கடற்படையும், விமானப் படையும், சிறீலங்காவின் படைகளுடன் இணைந்து கண்காணித்துக் கொண்டிருந்தன. சரியாக ஒரு வருடத்திற்கு முன்னதாகவும் முல்லைத்தீவு கடல் பகுதியில் ஒரு கப்பல் இந்திய உதவியுடன் தாக்கி மூழ்கடிக்கப்பட்டது தெரிந்ததே.

இவ் விமானம் முல்லைத்தீவுக்கு மேலாக பறந்துகொண்டிருக்கையில் சுமார் 4.15 மணியளவில் அளம்பிலுக்கு வடக்காக ஒரு சிறு கப்பல் சென்றுகொண்டிருப்பதை அவதானித்தது. பாதுகாப்பு அமைச்சு விமானம் முதல் முறையாக கப்பலை கரையிலிருந்து பத்து கிலோ மீற்றர் தூரத்தில் சென்று கொண்டிருக்கும் போதே அவதானித்ததாகக் கூறினாலும் சில விமானப்படை அதிகாரிகள் உண்மையில் கப்பல் கரையிலிருந்து 40 கிலோமீற்றர் துரத்தில் சென்றுகொண்டிருக்கும் போதே அவதானித்ததாக கூறியுள்ளனர். இதே வேளை இக்கப்பலின் தலைமை மாலுமி கியூபா அரசிற்கு தனது அறிக்கையில் தமது கப்பல் சரியாக கரையில் இருந்து 47 கிலோ மீற்றர்கள் அதாவது இருபத்தி யேழரை கடல் மைல்கள் தொலைவிலேயே பயணம் செய்ததாகவும், சிறீலங்காவின் விமானம் தங்களை அவதானித்தபோது தாங்கள் சர்வதேசக் கடலிலேயே இருந்ததாகவும் கூறியுள்ளார்.

## கப்பல் விவகாரம்

சிறீலங்காவின் கடல் எல்லையானது கரையில் இருந்து 20 கிலோ மீற்றர்களோ அல்லது 12 மைல்களோதான். இந் நிலையில் இக்கப்பலை அவதானித்த வை 12 விமானம் கப்பலுடன் தொடர்பு கொள்ள முயன்றதாகவும், தங்களை அடையாளம் காட்டும்படி கோரியதாகவும் ஆனால் கப்பல் பதிலளிக்கவில்லை என்றும் கூறிய சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு, இக் கப்பல் அவதானிக்கப்பட்ட சமயம் வேறொரு சிறு கப்பலும் மிக வேகமாகச் சென்றுகொண்டிருந்ததாகவும் அதுவும் தன்னை அடையாளம் காட்ட மறுத்ததாகவும், இவ்வகையான கப்பல்களிலேயே புலிகளுக்கு ஆயுதம்வருவதாகக் கூறிய பாதுகாப்பு அமைச்சு அதன் காரணத்தால்தான் தங்களது விமானங்கள் இவ் இரு கப்பல்களையும் தாக்கின என்றது.



ஆனால் என்ன நடந்தது? கப்பலையும், சிறு படகையும் அவதானித்த வை 12 ரக விமானம் அனுராதபுரத்திலுள்ள வட பிராந்திய விமானப்படைத் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு குண்டுவீச்சு விமானங்களை அழைத்துள்ளது. உடனடியாக புக்காரா குண்டுவீச்சு விமானங்கள், மற்றும் MI 24 உலங்கு வானூர்திகள் அப்பகுதிக்கு விரைந்து 60 அடி நீளமான இழுவைப் படகின் மேல் தாக்குதல் நடத்தி அதை மூழ்கடித்தன. அடுத்ததாக அவற்றின் கவனம் மற்றைய கப்பலின் மேல் திரும்பியது. இதே வேளை கப்பலின் மாலுமிகள் விமானப்படை விமானியுடன் தொடர்பு கொண்டு தாம் கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக கூறியுள்ளனர். ஆனால் கொழும்பின் துறைமுக அதிகாரசபையோ தங்களது பட்டியலில் இக் கப்பலின் பெயர் இல்லை என்றும் விமானப்படைக்கு கூறியுள்ளது. (இதுவும் பாதுகாப்பு அமைச்சு கூறியதே).

புக்காரா விமானங்கள் கப்பலின் மேல் தாக்குதலை ஆரம்பித்துள்ளன. தொடர் ராக்கட் தாக்குதல்களினால் கப்பலின் ஒரு பகுதி தீப்பிடித்து எரியத் தொடங்கியுள்ளது. ஆனால் அதிர்ஸ்டவசமாக மாலுமிகள் எவரும் காயமடையவில்லை. விமானப்படை தங்களது தாக்குதலை நிறுத்தியவுடன் மாலுமிகளால் தீ அணைக்கப்பட்டுள்ளது. இதேவேளை சிறீலங்காக் கடற்படையின் டோராப் படகுகளும் அவ்விடத்திற்கு விரைந்துள்ளன. இவற்றின் பாதுகாப்புடன் கப்பல் திருகோணமலைத் துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டது. கப்பல் துறைமுகத்தில் நின்ற சமயம் கப்பல் கொழும்பிற்குத்தான் வந்தது என்பதை கடற்படையினரும், விமானப்படையினரும் உறுதி செய்திருந்தாலும் சம்பவம் நடைபெற்ற மறுநாள் திங்கட்கிழமை காலை ஆயுதபாணிகளான கடற்படையினர் கப்பலுக்குள் பிரவேசித்து கப்பலுக்குள் ஆயுதம்தேடத் தொடங்கினார்கள். இறுதியாக கப்பலுக்குள் ஒன்றும் இல்லை எனக்கூறி கப்பல் விவகாரத்தை 'முடிவுக்குக் கொண்டுவந்தனர்.

உண்மையில் முதலில் விமானப்படையால் மூழ்கடிக்கப்பட்ட 60 அடி நீளமான படகானது திருகோணமலை சிங்கள மீனவர்களுக்குச் சொந்தமானது. அப் படகில் ஐந்துபேர் இருந்துள்ளனர், முல்லைத்தீவிலிருந்து நாற்பது கிலோ மீற்றர் தூரத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போதே விமானப்படை விமானம் தாக்கியுள்ளது. அப் படகு மூழ்கியபோது அதிலிருந்த மூன்று மீனவர் பலியாகியுள்ளனர். 15 வயதுச் சிறுவன் உட்படமற்றைய இரு மீனவர்களும் பிறிதொரு மீன்பிடிப்படகில் வந்த மீனவர்களால் காப்பாற்றப்பட்டு திருகோணமலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.

கப்பல் 1674 தொன் எடை கொண்ட கியூபாவுக்குச் சொந்தமான சரக்குக் கப்பலாகும். இக் கப்பலில் 28 கியூபா மாலுமிகள் கடமையாற்றினர். சைப்பிரஸ் நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள இக் கப்பல், இந்தியா கல்கத்தா துறைமுகத்தில் கந்தகத்தை இறக்கிவிட்டு கொழும்புத் துறைமுகத்தினுடாக செல்லவிருந்தபோதே இத் தாக்குதல் சம்பவம் இடம் பெற்றுள்ளது. தற்போது இக் கப்பல் (கரீபியன் குயின்) கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டு திருத்த வேலைகள் செய்யப்படுகின்றன.

இக் கப்பல் தாக்கப்பட்டு திருகோணமலை கொண்டுவரப்பட்டவுடன் உடனடியாக அங்கு வருகைதந்த சிறீலங்காவிற்கான கியூபாத் தூதுவர் கப்பல் மாலுமிகளுடன் உரையாடிவிட்டு, தமது அரசு சிறீலங்காவுடன் நீண்ட கால உறவு கொண்டிருந்தாலும், இவ் விடயத்தில் தமது அரசு தனியான விசாரணை ஒன்றை மேற்கொள்ளும் என்று கூறியுள்ளார்.

இக் கப்பல் தாக்குதல் சம்பவமானது சிறீலங்காவை அண்மித்த சர்வதேசக் கடற்பரப்பில் பயணம் செய்யும் கப்பல்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. இந் நிலையானது சர்வதேச நாட்டுக் கப்பல்கள் இப்பகுதியூடான தமது கப்பல் சேவைகளை தவிர்க்கும் அதே வேளை கொழும்புத் துறைமுகத்தையும் பல சர்வதேச நிறுவனங்கள் பகிஸ்கரிக்கும் நிலைக்கு கொண்டுவந்துள்ளது. ஏற்கனவே உல்லாசப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சியைக் கண்டிருக்கும் சிறீலங்கா, புதிதாக சரக்குக் கப்பலை சர்வதேசக் கடற்பரப்பில் தாக்கி தன் முகத்தில் கரிபூசிக்கொண்டுள்ளது.

**- பண்ணையார்**


**லக்ஸ்மி ஏசியன் சோப்**

**LUXMY ASIAN SHOP**
BAU STR-22
47137 DUIS BURG
TEL: 0203. 439214
FAX: 0203. 439214

**LUXMY ASIAN SHOP**
WIEDENHOF STR-03
47798 KREFELD
TEL: 02151. 608726
FAX: 02151. 608726

DUISBURG கடைக்கு செல்லும்வழி:
(A.59 DUSSELDOR F - DINSLAKEN AUSFART - UNTER MEIDERICH)
உரிமையாளர்: கா. மகேந்திரம் (H.P.01729553332)

**மாபெரும் மலிவு விற்பனை**

| | | |
|---|---|---|
| சர்க்கரை 500g | _ | .89pf |
| கடலைப் பருப்பு 500g | _ | .99pf |
| மைசூர் பருப்பு 500g | _ | .99pf |
| ஜூஸ் வகை அனைத்தும் | _ | .99pf |
| புளி | _ | .99pf |
| மிளகு 100g | _ | .99pf |
| வெந்தயம் 100g | _ | .39pf |
| பெ.சீரகம் 100g | _ | .49pf |
| அரிசிமா | _ | 2.69Dm |
| 5 Kg U.S.A. அரிசி | _ | 9.00Dm |
| 20 kg BROKEN அரிசி | _ | 23.90Dm |

அத்துடன் தொழில் நுட்ப முறையில் வீடியோ படம் எடுத்தல், மணவறை, மாலை, சாப்பாடு, றைஸ்குக்கர், அடுப்புகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானியில்லாத மற்றொரு விமானமும் வீழ்ந்தது

**கொழும்பிலிருந்து தமிழரசன்**

இந்து சமுத்திரத்தில் சர்வதேச கடல் பாதையில் செல்லும் வெளி நாட்டுக் கப்பல்களுக்கு இலங்கை விமானப் படை, கடற் படையினரால் நடத்தப்பட்டுவரும் தாக்குதல்கள் தொடர்பாக சர்வதேச கப்பல் போக்குவரத்து நிறுவனத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை சர்வதேச கடற்பாதையில் சென்று கொண்டிருந்த கியூபா கப்பலான கரிபியன் குயின் சரக்கு கப்பல் மீது விமானத்தாக்குதல் நடத்தப்பட்டு கடற்படையினரால் திருகோணமலைக்கு கொண்டுவரப் பட்ட சமாச்சாரம் சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ளது. இந்த கப்பலில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் கொண்டு வருவதாக சந்தேகிக்கப்பட்டே இந்த மூர்க்கத்தனமான நடவடிக்கை எடுக்கப்பட்டது. முதலில் விமானப்படையினர் இந்தக் கப்பல் மீது தாக்குதல் நடாத்தினர். இதனால் கப்பலின் மேல் தளத்தில் தீப்பிடிக்க ஆரம்பித்தது. கப்பல் சிப்பந்திகள் மிகவும் சிரமத்தின் மத்தியில் தீயை அணைத்தனர்.

பின்னர் அது இலங்கை கடற் படையினரால் பலாத்காரமாக திருகோணமலை துறை முகத்திற்கு இழுத்து வரப்பட்டு துருவித்துருவி சோதனையிடப் பட்டது. ஆனால் கப்பலில் ஆயுதங்களோ, வெடிமருந்துகளோ இருக்கவில்லை.

கரிபியன் குயின் கப்பலில் கியூபா நாட்டைச் சேர்ந்த 28 மாலுமிகள் இருந்தனர். கப்பலின் கப்டனான மிகல் ஆர் அமரால் இலங்கை படையினர் நடந்துகொண்ட முறை பற்றி கொழும்பிலுள்ள கியூபா தூதுவருக்கு முறைபாடு செய்துள்ளார். கரிபியன் குயின் கப்பலுக்கு அருகில் ரோலர் ஒன்று காணப்பட்டதே தாக்குதலுக்கு காரணமாகும். விடுதலைப் புலிகளின் படகு என்ற சந்தேகத்தில் அந்த ரோலர் முதலில் மூழ் கடிக்கப்பட்டது. இந்த ரோலர் சிங்களவருக்கு சொந்தமானதாகும். விமானத்தாக்குதலில் இதில் இருந்த மூன்று சிங்கள மீனவர்கள் கொல்லப்பட்டார்கள். இருவர் தப்பி வந்து திருகோணமலை பொலிசில் முறையிட்டதை அடுத்தே உண்மை வெளிவந்தது. கரிபியன் குயின் இன்று செவ்வாய்கிழமை கொழும்பு துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. கப்பல் மீது நடாத்தப் பட்ட தாக்குதல் தொடர்பாக அக்கப்பலின் கொழும்பு முகவர்கள் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய்ந்து வருகிறார்கள்.

கரிபியன் குயின் விவகாரம் இலங்கை படையினருக்கு சர்வதேச ரீதியில் ஒரு கரும்புள்ளியை ஏற்படுத்தி விட்டது.

* * * * *

கப்பல் நாடகம் அரங்கேறுவதற்கு முதல்நாள் அதாவது திங்கட்கிழமை பத்தாம் திகதி பொலனறுவை மாவட்டத்தில் உள்ள சுங்காவில் பொலிஸ் காவல் நிலையம் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் 18 பொலிசார் கொல்லப்பட்டனர். பத்து பேர் படுகாயமடைந்தனர். பலருக்கு நேர்-ந்த கதி பற்றித் தெரியாது. 45 நிமிட நேரத்திற்குப் பொலிஸ் காவல் நிலையத்தை கைப்பற்றிய விடுதலைப் புலிகள் அங்கிருந்த பல லட்ச ரூபா பெறுமதியான ஆயுதங்களை கைப்பற்றிக் கொண்டு காவல் நிலையத்திற்கு தீ வைத்து துவம்சம் செய்தனர். இம் மாதத்தில் நடந்த பாரிய தாக்குதல் என இது பாதுகாப்பு படை பதிவேட்டில் பதிவாகிவிட்டது.

* * * * *


வவுனியாவையும் மன்னாரையும் இணைக்க வைப்பதற்காக இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட எடிபல (அச்சமின்மை) இராணுவ நடவடிக்கையின் பெறுபேறுகள் மிகவும் இரகசியமாக பேணப் பட்டு வருகிறது. 22 கிலோ மீற்றர் தூரம் முன்னேறி நிலை கொண்டிருப்பதாக கூறப்படுகிறது. எது எப்படியாயினும் விடுதலைப் புலிகளின் மௌனம் தொடர்ந்து நீடிக்கப் போவதில்லை என பாதுகாப்பு வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது. விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றிற்கு தயாராகி வருவதாக புலனாய்வுப் பிரிவினருக்கு இறுதியாக கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றது. இரத்தினபுரி மாவட்ட பாரளுமன்ற உறுப்பினர் நாலந்த எல்லாவல சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து ஜெம்சிட்டி என்று அழைக்கப்படும் இரத்தினபுரி பகுதி பிழம்பாக மாறி இருக்கிறது. தினமும் இரவு நேரத்தில் ஊரடங்கு பிறப்பிக் கப்பட்டு வருகிறது. கடந்த சனிக்கிழமை நடந்த வன்செயல்களினால் 27 பொலிஸ் வாகனங்கள் உட்பட நூற்றுக்கு அதிகமான வாகனங்கள் சேதமடைந்தன. பொலிசார் மீது ஆத்திரமடைந்த ஜனக்கும்பல்கள் பொலிசாரை தாக்கியதும் நிலமையை கட்டுப் படுத்த இராணுவம் அழைக்கப்பட்டது. உடமைகளை பாதுகாக்குமுன்னர் பொலிசாரை பாதுகாக்க வேண்டிய பணியை இராணுவம் செய்து வருகிறது.

* * * * *

இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருந்த வேளையில் இலங்கையின் வடபகுதி யாழ்ப் பாண தீபகற்பத்திற்கு மேலாக பறந்து கொண்டிருந்த விமானி இல்லாமல் இயங்கும் உளவு விமானம் காணமல் போய் விட்ட தகவல் கிடைத்திருக்கிறது. இதே ரக உளவு விமானம் கடந்த ஜனவரி மாதம் 16ம் திகதி யாழ்ப்பாணத்திற்கு மேலாக பறந்து கொண்டிருந்த வேளையில் காணாமல்போனது குறிப்பிடத்தக்கது, இது இரண்டாவது உளவு விமானம். பல கோடி ரூபா பெறுமதியான இந்த விமானம் இஸ்ரேலிய தயாரிப்பாகும். இந்த ரகத்தில் இன்னும் ஒரு விமானம் மட்டுமே இலங்கைப் விமானப்படையிடம் இருக்கிறது. மூன்றாம் கட்ட ஈழப்போரில் இல-ங்கை விமானப் படையினரை சனியன் பிடித்து ஆட்டுகிறது, இரண்டரை வருட காலத்தில் பதினைந்துக்கு மேற்பட்ட விமானங்களை விமானப்படை இழந்துவிட்டது.

## கரீபியன் குயின் ஏற்படுத்திய கரும்புள்ளி

**விடுதலைப் புலிகளின் மௌனம் தொடர்ந்து நீடிக்கப் போவதில்லை என பாதுகாப்பு வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது. விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றிற்கு தயாராகி வருவதாக புலனாய்வுப் பிரிவினருக்கு இறுதியாக கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன**



ஜேர்மனியில்: அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும்மொருமுறை முன்சன் கிளப்பாக்கில்!
முல்லைச்சமர் உயிர்ப்பு
காலம்: 24.02.97 திங்கட்கிழமை 17.30 மணி
இடம்: Kino Universum
Am Bahnhof, Rheydt, Monchengladbach.

மேற்கு இலண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
Nº: 199, The BROADWAY, Southall, Middx.
T.P: 0181 / 813 9126
(ADV)

லண்டன் மாநகரில்
ஸ்ரீ லட்சுமி என்ரபிறைசஸ்
கன்னியர் முதல் சிறுவர் வரை
முதல் தர புடவை மாளிகை
SREE LAKSHMI ENTERPRISES
IMPORTER & EXPORTER, WHOLESALER & RETAILER
Large Collection of Wedding Sarees, Silk Sarees & Barathanatya Costumes
50 THE BROADWAY, SOUTHALL, MIDDLESEX, UBI 1QB
TEL: 0181-843 9495 / 01831-662 824
FAX: 0181-606 [illegible]
(ADV)

இலண்டனில் நகைத் தெரிவுகளுக்கு...
ராஜுஸ்ரீ பட்னி அன் சன்
PATTNI HOUSE
58-60 EALING ROAD WEMBLEY, MIDDX HAO 4TQ
TEL: 0181-903 6677 / 2859, 0181-902 0577
FAX: 0181- 903 4887
(ADV)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளதைக் கொஞ்சம் ஒழுங்காக் கதைப்பம்

# இப்பத்தான் 'சூடு'பிடிக்கத் தொடங்கியிருக்குது!

சிறீலங்காவில... சனநாயகத் தேர்தல் நல்லாச் சூடு பிடிக்கத் தொடங்கிவிட்டுது. ஒரு பாராளுமன்ற உறுப்பினர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்.... அவரோட அவரின்ர பொடிகாட்டும் கொல்லப்பட்டிருக்கிறார்.... இன்றும் ஆறு சனங்களுக்கு சன்னம்பட்ட காயம். சுட்டுக்கொல்லப்பட்டது பொதுசன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர். சுட்டது ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும், முன்னாள் மேஜர் ஒருவரும் அவரோட சேர்ந்த ஆக்களும்தான் எண்டு அரசாங்கம் சொல்லுது. குற்றஞ்சாட்டப்பட்டவை ஓடி ஒழிஞ்சிட்டினம். தேடுதல் நடக்குது... பிடிபடுகினம் இல்லையாம். குற்றவாளியள் சரணடையவேணும் எண்டு அரசாங்கம் அறிவிச்சிருக்குது. பாராளுமன்ற உறுப்பினர் ஒரு பதிலும் இல்லாமல் மறைஞ்சிருக்கிறார்.

இதிலை இன்னொரு முசுப்பாத்தி என்னண்டா, சிங்களப்பிள்ளையளின்ர ஆங்கிலப்பத்திரிகை ஒண்டு கவலையோட ஒரு நகைச்சுவை காட்டுன் ஒண்டை உந்த வெடிபாடுகளுக்குப் பிறகு போட்டிருக்குது. என்னண்டால்... இரண்டு பிரதான சிங்களக் கட்சியளும் எனக்குத்தான் வோட்டு... எனக்குத்தான் வோட்டு எண்டு... ஆளாளுக்கு வேட்டுத் தீர்த்துக் கொண்டு குண்டுவெடிச்சுப் புகைகிளம்ப அதுக்க... கட்டிப்பிடிச்சு உருண்டு பிரளுற மாதிரியும்.... கீழ ஒரு புலி வாயை அகலத் திறந்து... ஆவண்டுபிடிச்சபடி... இவையளில இருந்து சொட்டுற இரத்தத்தை வாயில ஏந்தி ருசிக்கிறதுமாதிரியும் காட்டுன் போட்டிருக்குது.

இப்பிடிப்போடேக்க... அடிப்படையில ஒரு கவலையொண்டு வெளிப்படுகுது. இப்பிடி நீங்கள் சண்டைபிடிச்சால் புலியளுக்குத்தான் இலாபம். நீங்கள் ஒத்துமையா வோட்டுக்கேட்கவேணும்... இப்பிடி வேட்டுத்தீர்த்துக்கொண்டு வோட்டுக் கேட்காதீங்கோ... எதிரிக்குத்தான் இதால இலாபம் எண்டது கணக்கா... கவலையோட அட்வைஸ் பண்ணுற மாதிரி இருக்குது.

ம்... அதுசரி.... இப்பிடி வோட்டுக் காண்டி இரண்டு பிரதான கட்சியளும் சண்டை பிடிக்காதீங்கோ எண்டு அப்ப இந்த அட்வைஸ் குடுத்திருந்தா... இந்த இனப்பிரச்சினை வந்திருக்காதெல்லோ. என்ன... சொல்லுறது சரிதானே...? ஆளாளுக்கு பதவிக்காச்சல் வந்து... தங்களுக்க தாங்கள் மோதாமல் எங்களில மோதினதாலதானே... இனப்பிரச்சினை உருவாகினது ஒருபக்கம் இருக்க அவைக்கு ஆட்சிக்கதிரையும் கிடைச்சது. அந்த நேரத்தில தமிழ்மக்கள் எண்டால்.... தேர்தல் சுவரொட்டியள் ஒட்டுற தெருச் சுவர் மாதிரி. தமிழனில பசைபூசிச் சாத்தினாத்தானே தேர்தல் விளம்பரம். இப்ப திருப்பிச் சாத்திறதால வில்லங்கமாய் கிடக்குது. இப்பத்தான் சரியான தேர்தல் மோதல் நடக்குது. நானா... நீயா... இரண்டில ஒண்டு காணுவம் எண்டு நியாயமான சண்டை நடக்குது.

**அந்த நேரத்தில தமிழ்மக்கள் எண்டால்.... தேர்தல் சுவரொட்டியள் ஒட்டுற தெருச் சுவர் மாதிரி. தமிழனில பசைபூசிச் சாத்தினாத்தானே தேர்தல் விளம்பரம். இப்ப திருப்பிச் சாத்திறதால வில்ல்ங்கமாய் கிடக்குது. இப்பத்தான் சரியான தேர்தல் மோதல் நடக்குது. நானா... நீயா... இரண்டில ஒண்டு காணுவம் எண்டு நியாயமான சண்டை நடக்குது.**

தங்கட அரிப்பை எங்களில தீர்க்க வெளிக்கிட்டதிலதான் தீவையே குட்டிச்சுவராக்கி... எருமைமாடு முதுகு சொறியிற நிலைக்கு கொண்டுவந்த பெரும் யுத்தத்தை அனுபவிக்கவேண்டியதாய் இருக்கு.

தனக்குத் தனக்கு வந்தால்தான் சுழகு படக்குபடக்கெண்டு அடிக்கிறது மாதிரி.... இப்ப கவலைப் பட்டுப்பிரயோசனம் இல்லை. இரண்டு கட்சியளும் தான் தான் வெல்லவேணும் மற்றக்கட்சி அழிஞ்சுபோகவேணும் எண்ட கோட்பாட்டில தான் இருக்கும். அப்ப என்ன செய்யிறது சுடுபடத்தானே வேணும்.

இன்னொரு செய்தி.... கேள்விப்பட்டியளே...? இவை... அந்தக்காலத்து ராசாமார். இவைதான்.... ஈபி கோஸ்டி... இப்ப யாழ்ப்பாணம் போயிருக்கினமாம். அரசாங்கம் ஆயதங்கள் குடுத்து அனுப்பியிருக்குது... அங்கை போய் அரசியல்

**சடையர்**

நடத்துங்கோ எண்டு. என்ன...! அரசியலோ...? அப்பிடியெண்டு கேட்கப்படாது..! ஏன்... இந்திய ஆமி காலத்தில அவை நடத்தாத அரசியலா...? இப்ப நடத்த வந்திருக்கினம். ஈ.பி.டி.பி ஓட ஒத்துப்போகாது... அப்ப என்னண்டு... அப்பிடியெண்டு கேட்பியள். ஆனால்... அரசாங்கத்தோட ஒத்துப்போகுதெல்லே... பிறகென்ன. அது சரி... ஏன்... உதெல்லாம் நடக்குது அப்பிடியெண்டு சந்தேகம் வரும்தான். நியாயம். ஏனெண்டால் இவர் டக்கிளஸ் இந்தியாவுக்குப்போய்... பெரிய பெரிய ஆக்களை எல்லாம் சந்திச்சு... உங்களுக்கு விசுவாசமாயும் நடப்பன் எண்டு சொன்னதோட... ஈ.பி யைவிட்டிட்டு ஈ.பி.டி.பி யை அணைச்சால் என்னஎண்ட யோசனையில இந்திய அரசாங்கம் இருந்ததாம். எப்பன் தடவிக்'குடுத்து' அனுபபினதெண்டும் கேள்வி. வந்த கையோட இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அமுல் நடத்தவேணும் இல்லாதுபோனா வழக்குப்போடுவன் எண்டு டக்கிளஸ் எம்பிக் குதிச்சது அறிஞ்சிருப்பியள்.

...என்ன... எசமான் கைகழுவி விடப் போறாரோ.... அப்பிடியெண்டு ஈ.பிக்குக் கவலை. அதால... முக்கியமான இந்தியத் தலைவர்களை தொடர்புகொண்டு... பிரேமச்சந்திரம் ஒருபாட்டம் அழுது ஓய்ஞ்சதாகவும் கேள்வி. இதுக்குப்பிறகு... என்னன்ன கசமுசாவோ நடந்து... சந்திரிகா அம்மையார் வக்கன்சுக்குப்போய்.... வரதராஜப் பெருமாளை டிசம்பரில ராஜஸ்தானில இரகசிகமாகச் சந்திச்சுப் பேசினவர். அறிஞ்சிருப்பியள். என்ன.... இரகசிகம். இரண்டுபேரும்... சேர்ந்து இன்ரநசினல் பொலிற்றிக்ஸ்சே பேசியிருப்பினம்...? எல்லாம் இன்ரேனல் பொலிற்றிக்ஸ்தான். என்ன... உங்க நிண்டு என்ன செய்யப் போறியள்...? ஊருக்குவந்து அரசியல் நடத்துங்கோவன் எண்டு கேட்டவாவாம். விருப்பந்தான்... வழியைத்தேடுறன் எண்டு அவர் சொல்ல... நான் காட்டுறன் எண்டு சொல்லிப்போட்டுவந்தவா எண்டு கேள்வி. இப்ப வெள்ளோட்டமா... கொஞ்சப்பேர் ஆமிக்காரரோட ஆயுதங்களோட திரியினம்.

மற்றது... இன்னுமொருமூட்டைப்பூச்சி... அதுதான் ஆளில்லாத தன்னியக்க வேவு விமானம் அநுராதபுரத்தில •விழுந்து நொருங்கியிருக்குது. 97 பிறந்து ஒண்டரை மாதத்துக்குள்ள நாலு விமானத்தை துலைச்சுப்போட்டினம் எண்டால்.... சிறீலங்கா வெற்றியை நோக்கி எவ்வளவு வேகமாய் முன்னேறுது எண்டு பாருங்கோவன். நாலாவது விழுந்து நாலுநாளுக்குப் பிறகுதான் செய்தியே வந்திருக்குது. இதிலதான் அரசாங்கம் எப்பன் சுணக்கம். சனவரி 16இல வேவுவிமானம் பூநகரியில விழுந்து நொருங்கிச்சுது. பிறகு... புலியளின்ர ஆயதங்கப்பலை நாலுபேரோட தேடிப்போன சீனத்து வை.12 காணாமல் போச்சுது. அட அதுக்கிடையில அடுத்த நாள்... சண்டை விமானம் கீபிர் விழுந்து நொருங்கிச்சுது. என்ன... ஒண்டையும் காணேல்ல... அப்பிடியெண்டு பொச்சடிக்கிறதுக்கிடையில.... பேந்தும்பார்... இன்னொண்டாம்.

புலியள் சுடேல்ல இயந்திரக்கோளாறு எண்டு சொல்லுகினம்.... விமானக் கொம்பனி எல்லாம் வந்து பாத்து ஆராய்ச்சி எல்லாம்பண்ணினவை... அப்பிடியிருந்தும்

## ஓர் அலசல்

அடிக்கொருக்கா விழுகுதெண்டால்.... புலியள் ஏதும் செய்வினை சூனியம் ஏதும் செய்திருப்பினமோ....? எட்டி அம்மையாற்றையோ.. அல்லது அம்மான்ர காதிலையோ லைற்றாப் போட்டுவிடுங்கோ... பெரிய யாகமே நடத்துவினம்.

லாச்சப்பலில்... உங்களின் தேவைக்காக எங்களின் சேவையினை ஆரம்பித்துள்ளோம்

நியூ சப்பல் ஸ்ரோர்ஸ்

"மளிகைப் பொருட்களின் மாளிகை"

உங்களுக்குத் தேவையான மளிகைப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள இன்றே விரையுங்கள்.

NEW CHAPELLE STORES

214, RUE DU Fbg. St DENIS, 75010 PARIS - TEL: 01 40 36 20 35 / FAX: 01 40 36 20 36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போஃபர்ஸ்: சுந்தர்ஜியிடம் 8 மணிநேரம் விசாரணை

போஃபர்ஸ் துப்பாக்கிப் பேரம் குறித்து சர்ச்சைக்குரிய அறிக்கைகள் வெளியிட்ட ஓய்வு பெற்ற இராணுவ முன்னாள் தலைவர் ஜெனரல் கே. சுந்தர்ஜியிடம் திங்கட்கிழமை சிபிஐயின் சிறப்பு விசாரணைக் குழு சுமார் எட்டு மணி நேரம் துருவித் துருவி விசாரணை மேற்கொண்டது.

இவருடன் போஃபர்ஸ் துப்பாக்கி பேரம் தொடர்பாக விசாரனை மேற்கொண்டபோது இராணுவ சாதனங்கள் பிரிவின் தலைவராக பதவி வகித்த ஓய்வுபெற்ற லெப்டினன் மாயா தாசிடமும் விசாரணைக் குழுவினர் 2 மணி நேரம் விசாரணை நடத்தினர்.

சிறப்பு விசாரணைக் குழுவினர் இருவரிடமும் ஒரே நேரத்தில் விசாரணை மேற்கொண்டனரா அல்லது தனித்தனியாக விசாரணை மேற்கொண்டனரா என்பது தெரியவில்லை.

12 பேர் கொண்ட சிறப்பு விசாரணைக் குழு மிக விரிவான அளவில் கேள்விகளைத் தயார் செய்திருந்தது. விசாரணை நடந்த சிபிஐ அலுவலகத்திற்கு ஜெனரல் சுந்தர்ஜி காலை 11 மணிக்கு சில மணித்துளிகளுக்கு முன்பு வந்தார்.

ஸ்வீடன் நாட்டு துப்பாக்கி தயாரிப்பு நிறுவன்த்துடனான ரூ.1400 கோடி பேரம் ஜெனரல் கே. சுந்தர்ஜியின் பதவிக்காலத்தில்தான் மேற்கொள்ளப்பட்டது.

### தேவகௌடாவின் கருத்துக்கு பா.ஜ.க. எதிர்ப்பு

போஃபர்ஸ் துப்பாக்கிப் பேரத்தில் லஞ்சம் வாங்கியவர்கள் குறித்த விவரத்தை அறிய மக்கள் இன்னும் சிறிது காலம் காத்திருப்பர் என்று பிரதமர் எச். டி. தேவகௌடா ஞாயிற்றுக்கிழமை கூறினார். இதற்கு பாரதீய ஜனதா கட்சி கடுமையான எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

திங்கட்கிழமை புது டில்லியில் நடந்த பா.ஜ.கவின் மத்திய நிர்வாகிகள் கமிட்டிக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் கொண்டுவரப்பட்டது. போஃபர்ஸ் லஞ்ச ஊழல் வழக்கை ஐக்கிய முன்னணி அரசு கையாளும் விதம் அதன் பொறுப்பற்ற தன்மையைக் காட்டுகிறது. திருப்திகரமாக இல்லை என்று தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பேரத்தில் லஞ்சம் வாங்கியவர்களை தெரிந்து கொள்வதற்கு 10 ஆண்டுகள் நாடு காத்திருந்தது. இதற்காக இன்னும் சில காலம் காத்திருக்கவும் தயார் என்று கட்சி தெரிவித்துள்ளது.

பிரதமர் இது குறித்த தனது கருத்தை மிகச் சாதாரணமாக கூறியுள்ளார். இந்த பேரத்தில் லஞ்சம் வாங்கியவர்களின் பெயர்களைத் தெரிந்து கொள்ள நாடு இனிமேலும் காத்திராது என்று மற்றொரு தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

## விமானத்தில் வெடி குண்டு: புரளி கிளப்பியவர் சிறையிலில்

கல்கத்தா செல்லவேண்டிய விமானத்தை தவற விட்ட பங்குத் தரகர் ஒருவர் பறந்து சென்ற விமானத்தில் வெடி குண்டு இருப்பதாக புரளி கிளப்பி தரை இறங்க வைத்தார். ஆனால், அவர் சென்றது விமானத்தில் அல்ல. சிறைக்காவலுக்கு. இச்சம்பவம் திங்கட்கிழமை மும்பை விமான நிலையத்தில் நடந்தது.

கல்கத்தா விமானத்தில் வெடி குண்டு இருப்பதாகச் சொன்னவர் தனது செல் போனை அணைக்காமல் இருந்து விட்டார். இதனால் அவரது போனைக் கொண்டே யார் அவர் என்பதை பொலிசார் உடனடியாகக் கண்டு பிடித்து விட்டனர் என்று விமான நிலைய இயக்குனர் பி. எஸ் நாயர் கூறினார்.

# இந்தியாவும் ரஷ்யாவும் 3 உடன்பாடுகளில் கையெழுத்து

இந்தியா, ரஷ்யாவுக்கு இடையேயான தொழில் மற்றும் வர்த்தகம் குறித்த இருதரப்பு ஒத்துழைப்புக்கான 3 ஒப்பந்தங்கள் செவ்வாய்க்கிழமை மாஸ்கோவில் கையெழுத்தாகும்.

இரட்டை வரிவிதிப்பு முறையை தவிர்ப்பதற்கான கொள்கைகளுக்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டு வருகிறது. இதற்கான ஒப்பந்தத்தில் அடுத்த மாதம் பிரதமர் எச். டி. தேவகௌடா மாஸ்கோ செல்லும் போது கையெழுத்திடுவார்.

இந்திய, ரஷ்ய கூட்டுக் கமிஷனின் இரண்டு நாள் கூட்டத்திற்கு பிறகு இதற்கான ஒப்பந்தம் செவ்வாய்க்கிழமை கையெழுத்தாகும். இந்தியக் குழுவிற்கு வெளியுறவுத்துறை அமைச்சர் ஐ.கே. குஜ்ராலும், ரஷ்யக் குழுவிற்கு அந்நாட்டு துணைப்பிரதமர் விக்டர் இலியுஷின் ஆகியோரும் தலைமை வகித்தனர்.

## ஜெ. க்கு 3 லட்சம் டொலர்: வெளிநாட்டில் சிபிஐ விசாரணை

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 3 லட்சம் டொலர் பெற்றது தொடர்பாக வெளிநாடுகளில் விசாரிக்க சிபிஐ க்கு விரைவில் அனுமதி கிடைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

புது டில்லியில் மத்திய நிதி அமைச்சகம் அனுமதி அளித்தவுடன், இது குறித்த விபரங்களை சென்னையில் முதன்மை செஷன்ஸ் நீதிமன்றத்தில் சிபிஐ அதிகாரிகள் தெரிவிப்பர். அமெரிக்கா, துபாய், சானல் தீவுகள் ஆகிய இடங்களுக்குச் சென்று அவர்கள் விசாரணை நடத்தவுள்ளனர். கட்சிப் பிரமுகர்களிடமிருந்து ரூ.4 கோடி மதிப்புள்ள பரிசுப் பொருட்களை ஜெயலலிதா வாங்கியது பற்றியும் சிபிஐ விசாரித்து வருகின்றது.

### யார் தேசத் துரோகி, விவாதிப்போமா ?

# த.மா.கா.மீது ராமதாஸ் கடும் தாக்கு

## பெயரை மாற்றிக்கொண்டு தமிழகத்தை கெடுக்கிறார்கள்

பெயரை மாற்றிக்கொண்டு தமிழகத்திற்கு கெடுதல் செய்கிறார்கள். யார் தேசத்துரோகி என்று விவாதிப்போமா என த.மா.கா.வுக்கு டாக்டர் ராமதாஸ் சவால் விடுத்தார்.

பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் 'ஈழத்தமிழர் பாதுகாப்பு பொதுமாநாடு' சென்னை மெரினா கடற்கரை சீரணி அரங்கில் 02.02.97 ஞாயிறு இரவு நடந்தது.

### சந்தேகம்

மாநாட்டு மேடைக்கு 'தமிழீழம் ஒளிபெற தணலில் திரியான அப்துல் ரவூப் நினைவரங்கம்' என பெயரிடப்பட்டிருந்தது. டாக்டர் ராமதாஸ் அதிகாலை 2.25 மணிக்கு பேச்சைத் தொடங்கினார். அவர் பேசியதாவது:

இந்த மாநாடு நடக்குமா என்று பலருக்கு சந்தேகம். நடத்தவிடுவார்களா என்று சந்தேகம். நடத்தவிடக்கூடாது என்றும் சிலர் விரும்பினார்கள். சில பத்திரிகைகளில் இந்த மாநாட்டை நடத்தக்கூடாது என்றே எழுதினார்கள். தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது என்ற அச்சுறுத்தலும் வந்தது. தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பதால், இந்த தமிழ் நாட்டில் நாங்கள் இருந்தால் இந்தியாவுக்கு பாதுகாப்பாக இருக்காது என நினைத்து இருக்கிறார்கள். அதனால் எங்களை தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்ய சொல்கிறார்கள்.

### கைது செய்க!

சில பத்திரிகைகள் உடனே கைது செய்ய வேண்டும். இரும்புக் கரம் கொண்டு நசுக்க வேண்டும் என்றும் ஒரு புலிப்படத்தை போட்டு அதை நான் தடவிக் கொடுத்து 'இது ஒன்றும் செய்யாது பரமசாது' என்று சொல்வது போல காட்டூன் போட்டார்கள். பா.ம.க.வை ஒடுக்க வேண்டும் என்றார்கள். நாங்கள் தயாராக இருக்கிறோம். எங்களால் தமிழ் நாட்டுக்கு, தேசியத்திற்கு ஆபத்து என்று சிலர் கூறுவதால் நான் தமிழக அரசை கேட்டுக்கொள்கிறேன். அந்த சட்டத்திலேயே எங்களைக் கைது செய்யுங்கள். அதற்காக பயப்படுறவர்கள் நாங்கள் அல்ல.

கனடா, சுவிட்ஸர்லாந்து, இங்கிலாந்து சென்ற போது அங்கே பணம் வாங்கி வந்து மாநாடு நடத்துவதாக சொன்னார்கள். கூலிக்கு மாரடிப்பது என்று கிராமத்தில் சொல்வார்கள். கூலிக்கு மாரடிக்கிற பழக்கம் எங்களிடம் கிடையாது. எங்கள் இரத்தத்திலும் கிடையாது.

### காங். சாதனை என்ன?

சட்ட சபையில் காங்கிரசார் எகிறி குதித்து இருக்கிறார்கள்.



ராமதாஸ்

திராவிடக் கட்சிகளின் தோளில் ஏறிக் கொண்டு தமிழகத்திற்கு கெடுதல்தான் செய்கிறார்கள். இவர்கள் தமிழ் நாட்டுக்கு செய்த சாதனை என்ன சொல்லுங்கள்? சேது சமுத்திர திட்டத்தை இலங்கை சொன்னதால் நேரு விட்டுவிட்டார். கச்சத் தீவை விட்டுக் கொடுத்தார்கள். நேருவிலிருந்து கௌடா வரை ஈழத்தமிழர் உரிமையை பணயம் வைப்பதற்கு, பலி கொடுப்பதற்குத்தான் வெளிவிவகாரத்துறை பயன்பட்டுள்ளது.

வன்முறை வந்துவிடும் என்று சொல்கிறார்களே, திரி சூலத்தையும், கடப்பாரையும் எடுத்துச்சென்று பாபர் மசூதியை இடிப்பதை ஒவ்வொரு நிமிடமும் கண்காணித்த நரசிம்மராவை தலைவராக ஏற்றிருந்தவர்கள் வன்முறை பற்றிப் பேசுவதா?

திரிபுராவில் குடியரசு தின விழாவே கொண்டாட முடியவில்லை. வடகிழக்கு மாநிலங்களில் பகல் 5.00 மணிக்கு கூட வெளியில் நடக்க முடியவில்லை. ஐந்தாண்டுத் திட்டங்கள் தீட்டி அந்தப் பணத்தை எல்லாம் தங்கள் வீட்டில் அடுக்கிக் கொண்டார்கள். சுக்ராம் விவகாரத்தில் 15 நாளாக பாராளுமன்றமே நடக்க முடியாமல் ஸ்தம்பித்து போனதே. ஒன்றும் நடக்கவில்லை என்று அடித்து பேசினார்கள். பிறகு சுக்ராம் வீட்டில் மூட்டை மூட்டையாக பணம் எடுக்கிறார்களே, பேசுவதற்கு யோக்கியதை உள்ளதா?

### அஸ்தமனம்

காந்தியைக் கொன்றது சரிதான் என்று கோட்சேயின் தம்பி வினாயக் கோட்சே எழுதினானே என்ன பண்ணி கிழித்தார்கள் காங்கிரசார்? திராவிடக் கட்சிகளின் தோளில் தாங்குத் தயாராக இல்லை என்றால் தமிழ் நாட்டில் காங்கிரஸ் அஸ்தமனமாகி இருக்கும். தென்இந்தியாவில் நாலு மாநிலத்தில் காங்கிரஸ் அஸ்தமனமாகி விட்டது. இங்கு பெயரை மாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். யார் தேசத் துரோகி, யார் தேசஅபிமானி என்று ஒரே மேடையில் பேசவும் நாங்கள் தயார். விவாதிப்போமா? தமிழகம் அமைதிப் பூங்காவாக இருக்க வேண்டும் என்று காங்கிசார் சொல்கிறார்கள், நாங்களும் அதைத்தான் சொல்கிறோம்.

### அடிமையா?

தமிழ் நாட்டுக்காரன் டெல்லிக்காரனுக்கு அடிமையா? அடிமைச் சேவகம் செய்ய வேண்டுமா? பைல் நகரவில்லை என்கிறார்கள். நகராத பைலை கொழுத்த வேண்டியது தானே. பஞ்ச நிவாரணம், வெள்ள நிவாரணம் என்று பிச்சை எடுப்பது போல டெல்லிக்கு கர்வடி தூக்க வேண்டுமா? 8 மந்திரிகள் தமிழகத்திற்கு இருந்தும் நகரசபைக்கு உள்ள அதிகாரம் கூட தமிழ் நாட்டுக்கு இல்லை. ஒரு உரிமை கூட இல்லை.

இதைப் பேசக்கூடாது, அதைப் பேசக்கூடாது என்று கூறுகிறார்கள். ஈழத்தமிழர் பற்று மட்டும் பேசலாம் என்கிறார்கள். அப்படியானல் நீங்கள் பேரணி நடத்துங்கள் மாநாடு போடுங்கள் நாங்களும் வருகின்றோம். ஆனால் அந்த உணர்வு உங்களுக்கு இல்லை.

### மத்திய அரசு கொள்கை

8 கோடி தமிழர்களின் தலைவர், தமிழாய்ந்த தலைவர் கலைஞர் இந்தப் பிரச்சனைக்கு

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**02.02.1997 அன்று சென்னையில் பாட்டாளி மக்கள் கட்சியினர் நடத்திய பேரணியில் இருந்து சில காட்சிகள்....**





# ஜெயலலிதா மீது நடவடிக்கை தொடரும்

## கருணாநிதி அறிவிப்பு

ஊழல் குற்றச்சாட்டு கூறப்பட்டுள்ள முன்னாள் முதலமைச்சர் மீதான நடவடிக்கை தொடரும் என்று முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

முதல்வர் கருணாநிதி கடந்த வாரம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

**கேள்வி:** ஊழல் ஒழிப்பு நடவடிக்கை தொடர்ந்து தீவிரமாக இருக்குமா?

**பதில்:** அது நடந்துகொண்டே இருக்கும்.

### சர்வாதிகாரி அல்ல

**கேள்வி:** ஜெயலலிதா மீதான நடவடிக்கைகளை துரிதப்படுத்தாததுதான் ஓட்டு எண்ணிக்கை குறைவுக்கு காரணமாகுமா?

**பதில்:** நான் சர்வாதிகாரியாக இருந்தால் தர்பாரைகூட்டி உடனடியாக தண்டனை வழங்க முடியும். இத் ஜனநாயக நாடு, சட்டப் பிரச்சினை, நீதி மன்றம், புலன்விசாரணை என்று படிப்படியாக நிறைவேற்ற வேண்டியுள்ளது.

**கேள்வி:** புலன் விசாரணை மற்றும் என் மீதான நடவடிக்கையை மக்கள் விரும்பவில்லை என்று ஜெயலலிதா கூறியிருக்கிறாரே?

**பதில்:** ஜெயித்து விட்டுத்தான் இதை கூறவேண்டும். இவர் பயந்து கொண்டு தேர்தல் பிரச்சாரத்திற்கு போகாமல் உட்கார்ந்தார். அவருக்கு வந்த நோய் 30 ஆண்டுகளாக உள்ள நோய் என்று அவரே கூறியிருக்கிறார். பிறப்பிலேயே ஒரு எலும்பு தேய்-ந்து இருப்பதாக மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

30 ஆண்டுகளாக இருந்த இந்த நோய் இப்போது திடீரென்று முற்றவில்லை. நாங்கள் வெற்றி பெற்றிருக்கிறோம். தொடர்ந்து வெற்றி பெறுவோம். ஜெயலலிதா கட்சியினரையும், மக்களையும் ஏமாற்றிவிட முடியாது. தன் மீதான லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை மறந்துவிட முடியாது.

### "இருவர்" படம்

**கேள்வி:** "இருவர்" படம் பார்த்தீர்களா?

**பதில்:** பார்க்கவில்லை. மணிரத்தினமும், சுஹாசினியும் என்னை வந்து பார்க்கச் சொன்னார்கள். நான் பார்க்கவில்லை. இது அவருக்கும் தெரியும். தெரியாது என்று கூறியிருக்கிறார். படம் வெளியான பிறகு அவர் எனக்கு 2 முறை கடிதம் எழுதியிருக்கிறார். (அந்த கடிதங்களை படி-த்து காட்டினார்)

இந்தப்படம் வெளியிட முடிந்ததற்கு தங்களது பரந்த மனம் தான் காரணம். அந்த இடத்தில் வேறு ஒருவர் இருந்திருந்தால் இந்த படத்தின் எதிர்காலம் வேறாகப் போயிருக்கும். எனவே தங்களுக்கு நன்றி, வணக்கத்தை சமர்ப்பிக்கிறேன்.

முன்பிருந்த ஆட்சியாளர்களிடம் இந்த படத்தை ஒப்படைத்து இருந்தால் இந்த படத்தின் விதி, ஏன்... ஜனநாயகத்தின் விதி என்ன ஆயிருக்கும் என்பதை நினைத்தால் கலக்கமாக உள்ளது.

தாங்கள் பெருந்தன்மையுடன் எங்களை தங்கள் குடும்பத்தின் ஒருவரைப் போல்பாவித்து சென்சார் அதிகாரிகளுக்கு தங்கள் கடமையை உணர்த்தியதற்காக மீண்டும் ஒரு முறை நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த கடிதத்தில் இருந்தது

"பம்பாய்" படத்தைப்போல் பிரச்சினை வந்துவிடக்கூடாது என்பதால்தான் இந்தப் படத்தை உள் துறையினர் பார்த்தனர்.

**கேள்வி:** மேலவை தொடங்கி 75 ஆண்டுகள் ஆகிறது. இதை கருத்தில் கொண்டாவது மீண்டும் மேலவையை தொடங்க பாராளுமன்ற கூட்டத்தில் மசோதா நிறைவேற்ற மத்திய அரசை கேட்டுக் கொள்வீர்களா?

**பதில்:** உங்கள் முன் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் உட்கார்ந்து இருக்கிறார். (முரசொலி மாறனை பார்த்து சிரித்தபடியே) அவர் மூலம் இந்த கோரிக்கையை மத்திய அரசு நிறைவேற்ற கேட்டுக் கொள்கிறேன்.

### வக்கீல் மரணம்

**கேள்வி:** அமலாக்கப்பிரிவு வக்கீல் பிரகாஷ் மரணம் மர்மமாக உள்ளதே?

**பதில்:** இது விபத்தா அல்லது சதியா என்பது பற்றி தீவிரமாக விசாரிக்கப்படும். இந்தப் பிரச்சினையில் இப்போது எதுவும் கூற முடியாது.

**கேள்வி:** பெரியாறு அணையை பலப்படுத்தும் முயற்சியில் தமிழக அதிகாரிகளும், வனத்துறை ஊழியர்களும் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அவர்களை விரட்டி அடித்துவிட்டு வாகனங்களை கேரள அரசு பறிமுதல் செய்துள்ளதே?

**பதில்:** அதுபற்றித் தலைமைச் செயலாளர் விசாரித்துக் கொண்டிருக்கிறார்.

**கேள்வி:** விலைவாசி உயர்வால்தான் தேர்தலில் ஓட்டுக் குறைந்துள்ளதா?

**பதில்:** விலைவாசி உயர்வே இல்லையென்று நான் கூறியதாக சில பத்திரிகைகள் கற்பனையாக செய்தி வெளியிட்டுள்ளன. இதையே சில அரசியல் வாதிகளும் கூறுகிறார்கள். இது அரசியல் நாகரிகம் அல்ல. தமிழக சட்டசபையில் கடந்த ஆண்டு விலைவாசி ஏறி மீண்டும் குறைந்துள்ளது என்ற பட்டியலை படித்தேன்.

திருச்சி, கந்தர்வக்கோட்டை கும்பகோணம், சென்னை ஆகிய இடங்களில் இருந்துவந்த விலைவாசி பட்டியலைத்தான் படித்தேன்.

### அரிசி இறக்குமதி

**கேள்வி:** அரிசி இறக்குமதி செய்யப்படுமா?

**பதில்:** மத்திய தொகுப்பில் இருந்து நமக்கு ஒதுக்கும் அரிசியை குறைக்கக்கூடாது என்று மத்திய அரசை வலியுறுத்தி வருகிறோம். பஞ்சாபிலிருந்து அரிசி வாங்கப் போகிறோம்.

**கேள்வி:** சர்க்கரை விலையை மத்திய அரசு உயர்த்தியுள்ளதே?

**பதில்:** இதனால் ஏற்படும் சங்கடத்தை எப்படி சமாளிப்பது என்று மத்திய அரசிடம் கேட்போம்.

**கேள்வி:** மத்திய அரசின் விலை உயர்வை மகாராஷ்டிர அரசு ஏற்றுக் கொள்வது போல் ஏன் தமிழக அரசும் ஏற்றுக் கொள்ளக்கூடாது?

**பதில்:** அவர்களைப் போல் திடீர், திடீரென்று சொல்லிவிட முடியாது. இதில் கலந்து பேசித்தான் முடிவெடுக்க முடியும்.

---

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

### யார் தேசத்துரோகி.....

தீர்வு காண்பார் என்றுதான் உலகத் தமிழர்கள் எல்லாம் நினைக்கிறார்கள்.

இந்த வரலாறு கலைஞரை விட யாருக்குத் தெரியும். தமிழ் இனம், தமிழ் மொழி பற்றி அவருக்குத் தெரிந்தது எனக்குத் தெரியாது. யாருக்கும் தெரியாது. எட்டுக்கோடி தமிழர்களின் தலைவராக இருக்கிற கலைஞர் தீர்வு காண்பார் என்று நினைத்தால் இந்திய அரசின் கொள்கைதான் என் கொள்கை என்று கூறுகிறாரே.

ஈழத் தமிழர்கள் அழிய வேண்டும் என்பதுதான் இந்திய அரசின் கொள்கை என்றால், கலைஞரே இதுதான் உங்கள் கொள்கையா? கலைஞர் அவர்களே பிரச்சனையைச் சொல்லி உங்கள் ஆட்சியைக் கவிழ்த்து விடுவார்கள் என்று தயவு செய்து அஞ்சாதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முட்டையடிப் பெருநாளில் இருவர் சுட்டுக் கொலை

கிறிஸ்தவர்களின் முட்டையடிப் பெருநாளின்போது முட்டையடியில் ஈடுபட்டு ஓடிவிளையாடிய இரு தமிழ் இளைஞர்கள் கடந்த 11.02.97 செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு இருதயப்புரம் பகுதியில் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் குறித்து மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அக் கடிதத்தில் கிறிஸ்தவர்களின் புனிதத் தவக்காலம் கடந்த புதன்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளது. இதன் முன்னோடியாக அதன் முதல்நாளான செவ்வாய்க்கிழமை கிறிஸ்தவர்கள் முட்டையடிப் பெருநாளை கொண்டாடுவது வழக்கம்.

முட்டை விளையாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கணபதிப்பிள்ளை உதயசேகரம் (18), இராமகிருஷ்ணன் (20) ஆகிய இருவரும் இருதயபுரம் மேற்குப் பகுதியில்வைத்து பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்துள்ளனர். இவ் இருவரும் அப்பாவி இளைஞர்களாவர். இவர்கள் எந்த ஒரு இயக்கத்திலும் ஈடுபாடில்லாத அப்பாவிகளாவர். இவர்களை புலி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று நாமம் சூட்டுவது பொலிஸ் தமது குற்றத்தை மறைக்கும் ஒரு செயலாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜே. வி. பி உறுப்பினர்கள் அரசகுண்டர் படையால் தாக்குதல்

சந்திரிகாவின் மக்கள் முன்னணி கட்சியின் குண்டர் படையினரால் தமது உறுப்பினர்கள் இரு வெவ்வேறான சம்பவங்களில் தாக்கப்பட்டுள்ளதாக ஜனதா விமுக்திப் பெரமுனவின் (ஜே.வி.பி) பொதுச் செயலாளர் தில்வின் டி. சில்வா குற்றஞ் சாட்டியுள்ளார்.

மாத்தறைப் பிரதேசத்திலுள்ள தேவந்திரா கிராமத்தில் உள்ள ஜே. வி. பி உறுப்பினர்கள் மக்கள் முன்னணியின் குண்டர் படையினரால் கடந்த நான்காம் திகதி தாக்கப்பட்டுள்ளார். தாக்குதலுக்கு இலக்கானவர்கள் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இத்தாக்குதலுக்கு தேவந்தர பொலிசாரும் மறைமுகமாக உதவி செய்துள்ளனர்.

மற்றைய சம்பவம் ஊவா பரணகம் என்ற இடத்தில் நடைபெற்றுள்ளது. எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஜே. வி. பி உறுப்பினர்கள் மீது அரச குண்டர் படை தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

மேற்படி இரு சம்பவங்களையும் சுட்டிக்காட்டி ஜே. வி. பி. செயலாளர் ஐக்கிய தேசியக் கட்சியின் குண்டர் கலாச்சாரத்தினையே மக்கள் முன்னணியினரும் தொடர்வதாக குற்றஞ் சாட்டியுள்ளார்.

இதேவேளை ஜே. வி. பி சார்பில் உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிட நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்தவர்களில் பலருடைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

# ஆயிரம் விவசாயிகளை சுற்றிவளைத்து விசாரணை

அம்பாறை மாவட்தின் திருக்கோவில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த சாகாமம், தோணிக்கல், கல்காரை, கீத்துப்பத்து, பொத்தாளை, கொட்டம், டிப்போமடு, மாந்தோட்டம் பகுதிகளில் விசேட அதிரடிப்படையினரும், பொலிசாரும் சுற்றிவளைத்துத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். சுமார் ஆயிரத்திற்கும் அதிகமான விவசாயிகள் கைது செய்யப்பட்டு நீண்ட விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது, கடந்த வெள்ளிக்கிழமை 14.02.97, 6.00 மணியளவில் முகமாலை, மாந்தோட்டம் இராணுவ முகாங்களிலிருந்து புறப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான படையினர் மேற்படி சுற்றிவளைப்பினை மேற்கொண்டதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டதாக தெரியவருகிறது. காலை வேளையில் நெல் அறுவடை, சூடு அடிப்பு, வயல் கண்காணிப்பு வேலைகளில் மும்மரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த விவசாயிகளை ஒன்று திரளுமாறு இராணுவம் உத்தரவிட்டதாகத் தெரியவருகின்றது.

அனைவரும் 8 மைல் தொலைவிலுள்ள மாந்தோட்டம் இராணுவமுகாமிற்கு கால் நடையாக அழைத்துவரப்பட்டு, அங்கு கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். விசாரணையின் பின்னர் பலர் விடுதலை செய்யப்பட்ட போதிலும் பலர் இன்னும் விடுவிக்கப் படவில்லை எனத் தெரியவருகிறது.

# ஐ.தே.க. தலைமை செயலகத்தில் பொலிஸ் முற்றுகை

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைச் செயலகமான சிறிகோத்தாவில் பொலிசார் பாரிய தேடுதல் வேட்டை ஒன்றினை நடாத்தியுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான நந்தா எல்லாவெலவின் கொலை தொடர்பாகவே இந்தத் தேடுதல் வேட்டை நடாத்தப்பட்டது. கொலை சந்தேக நபரான ஐ. தே. கட்சியின் உறுப்பினர் சுசாந்த புஞ்சி நிலமேயையும் அவரது இன்னொரு சகாவையும் தேடிக் கண்டு பிடிப்பது தொடர்பாகவே இத்தேடுதல் மேற்கொள்ளப்பட்ட போதிலும், பொலிசாருடன் புலனாய்வுத் துறையினரும் இணைந்து ஐ.தே. கட்சியின் நிர்வாக பதிவுப் புத்தகங்கள் சிலவற்றை இரகசியமாக பார்வையிட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

முன்னதாக ஐ.தே. கட்சியின் பிரமுகர் அநுரா பண்டாரநாயக்காவின் றொஸ்மிட் பிளேஸ் வதிவிடமும் பொலிசாரின் முற்றுகைக்கு இலக்கானது. தனது வதிவிடத்தில் நடாத்தப்பட்ட தேடுதலுக்கு எதிராக அநுரா அடிப்படை உரிமை மீறல் வழக்கொன்றினை தாக்கல் செய்யப் போவதாகவும் அறிவித்துள்ளார். தற்போது அநுரா சத்திய சாயி பாபாவை பார்ப்பதற்காக பெங்களூருக்குச் சென்றுள்ளார்.

சிறி கோத்தாவில் தேடுதலை நடாத்திய பொலிஸார் கொலைச் சந்தேக நபர் எவரும் அங்கு காணப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இதே வேளை இக்கொலையில் பொலிஸ் அதிகாரிகள் பலரும் சம்பந்தப்பட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

# சட்டபீட மாணவர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டம்

கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீட மாணவர்கள் தமது சட்டமாணிப் பட்டப்படிப்பை முடித்தவுடன் தம்மை நேரடியாக நீதிமன்றத்தில் வழக்குரைக்க அனுமதிக்க வேண்டும் எனக் கோரி தொடர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்திவருகிறார்கள். கடந்த வெள்ளிக்கிழமை கொழும்புக் கோட்டை புகையிரத நிலையத்தின் முன்பாக கூடிய பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் பல்வேறு சுலோகங்களை எழுப்பிய வண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ் ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவாக களனி பல்கலைக்கழக மாணவர்களும், ஜெயவர்த்தனபுர, ரகுஸ்கல பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த மாணவர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

கடந்த இருவாரங்களாக இவ்விதமான ஆர்ப்பாட்டங்களை நடத்திவரும் மாணவர்கள், தங்களது கோரிக்கைகளை அரசாங்கமோ, அல்லது அமைச்சர்களோ கவனத்தில் கொள்ளவில்லை என்றும் இவ் விடயம் ஒரு சிறிய பிரச்சினை என அவர்கள் அலட்சியம் செய்கின்றனர் என்றும், அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாகவே தாம் இப் போராட்டத்தை நடத்திவருவதாகவும், இதற்கு தீர்வு காணப்படும் வரை தாம் இப் போரட்டத்தை தொடரப் போவதாகவும் தெரிவித்துள்ளனர்.

# க.பொ. த. பரீட்சை முடிவுகள் தாமதம்

கல்விப் பொது தராதரப் (உ.த) பரீட்சை முடிவுகள் யாவும் திட்டமிட்டபடி மாசி மாதம் 15-ம் திகதி வெளியிடப்பட மாட்டாதென பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பரீட்சை முடிவுகளை தரவு நிரைப்படுத்தும் கணணிகளில் ஏற்பட்ட கோளாறுகள் காரணமாகவே இத்தாமதம் ஏற்பட்டுள்ளது. ஆனாலும், இம்மாத முடிவில் முடிவுகளை வெளியிடக் கூடியதாக இருக்குமென வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# றோஸ் ஏஜன்சி

Eco Agency என்ற பெயரில் இயங்கிவந்த எம் நிறுவனம் கடந்த 15.10.1996 முதல் Rose Agency எனப் பெயர் மாற்றம் அடைந்துள்ளது. எம் சேவை முன்பு போல் 100 சதவீதமும் உங்கள் திருப்திக்காகவே தொடர்ந்திருக்கும். எம் நிறுவனம் பல வங்கிகளுடன் கூட்டாக இயங்குவதன் மூலம் இன்றுவரை பல தமிழர்களின் பணத்தேவைகளை நிறைவு செய்துள்ளது.
மேலும் இலகுவர்ன முறையிலும், நியாயமான வட்டிவீதத்திலும், கூடிய விரைவிலும் எவ்வித சேவைக் கட்டணமும் இல்லாமல் உங்கள் பணத்தேவைகளைப் பூர்த்தி செய்யத் காத்திருக்கிறோம். உதாரணமாக இங்குள்ள பட்டியலைக் கவனிக்கவும்.

*No.1 for Money Super Plus Fast Bankcredit for Tamils in Switzerland.*

இங்கு தரப்பட்ட தொகைகளைவிட தேவையான மேலதிக தொகைக்கு விபரம் எம்மிடம் கோரவும். சுவிஸ் விசா B அல்லது C பத்திரமுள்ளவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி - இலக்கத்துடன் தொடர்பு கொண்டால் நாம் மேலதிக விபரங்கள் வீரிவாகவும், விளக்கமாகவும் உங்களுக்குத் தருவோம்.

SOMASUNDARAM RAMALINGAM
METTLENSTRASSE 1
4554 ETZIKEN (SO)
SWITZERLAND.
Tel: 032 614 40 51
Natel: 077 46 16 94
Fax: 032 614 40 51



| கடன் தொகை | 12 மாதங்கள் | | 18 மாதங்கள் | | 24 மாதங்கள் | | 36 மாதங்கள் | | 48 மாதங்கள் | | 60 மாதங்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் |
| 10.000 | 726.80 | 893.90 | 1071.80 | 615.10 | 1422.80 | 475.90 | 2148.20 | 337.45 | 2902.40 | 268.80 | 3683.00 | 228.05 |
| 15.000 | 1090.20 | 1340.85 | 1607.70 | 922.65 | 2134.80 | 713.95 | 3223.20 | 506.20 | 4353.60 | 403.20 | 5523.00 | 342.05 |
| 20.000 | 1453.60 | 1787.80 | 2143.60 | 1230.20 | 2846.80 | 951.95 | 4298.20 | 674.95 | 5804.80 | 537.60 | 7366.00 | 456.10 |
| 25.000 | 1817.00 | 2234.75 | 2679.50 | 1537.75 | 3558.80 | 1189.95 | 5371.40 | 843.65 | 7256.00 | 672.00 | 9206.00 | 570.10 |
| 30.000 | 2180.40 | 2681.70 | 3215.40 | 1845.30 | 4270.80 | 1427.95 | 6446.40 | 1012.40 | 8707.20 | 806.40 | 11049.00 | 684.15 |
| 35.000 | 2543.80 | 3128.65 | 3751.30 | 2152.85 | 4982.80 | 1665.95 | 7521.40 | 1181.15 | 10158.40 | 940.80 | 12889.00 | 798.15 |
| 40.000 | 2907.20 | 3575.60 | 4287.20 | 2460.40 | 5694.80 | 1903.95 | 8596.40 | 1349.90 | 11609.60 | 1075.20 | 14732.00 | 912.20 |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகளாவிய தொலைபேசிச் சேவை

**உங்கள் வீட்டு, காரியாலய, நடமாடும் தொலைபேசி ஆகியவற்றில் இருந்து உலகின் சகல பாகங்களுக்கும் 24 மணி நேரமும் (ஒரேயளவான) குறைந்த கட்டணத்தில் தொடர்பு கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்**

* வரி இல்லை
* இணைப்புக் கட்டணம் இல்லை
* கதைக்கும் நேரத்துக்கு மட்டும் கட்டணம்

** சகல நாடுகட்கும் விநியோகஸ்தர்கள் தேவை **

*** உடனடியாக 2.5% வருமானம் பெறலாம் ***

| | Srilank | India | Pakistan | Malaysia | Singapore | Europe | U.K | Canada | Hongkong |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Germany | 0.65 | 0.65 | 0.65 | 0.65 | 0.45 | 0.38 | 0.23 | 0.31 | 0.53 |
| Swiss | 0.65 | 0.65 | 0.65 | 0.65 | 0.45 | 0.38 | 0.23 | 0.31 | 0.53 |
| France | 0.65 | 0.65 | 0.65 | 0.65 | 0.45 | 0.38 | 0.23 | 0.31 | 0.53 |
| Italy | 0.71 | 0.71 | 0.71 | 0.71 | 0.51 | 0.44 | 0.29 | 0.37 | 0.59 |
| Holland | 0.65 | 0.65 | 0.65 | 0.65 | 0.45 | 0.38 | 0.23 | 0.31 | 0.53 |
| U.K | 0.50 | 0.50 | 0.50 | 0.50 | 0.30 | 0.23 | 0.08 | 0.16 | 0.38 |
| Norway | 0.65 | 0.65 | 0.65 | 0.65 | 0.45 | 0.38 | 0.23 | 0.31 | 0.53 |
| Sweeden | 0.65 | 0.65 | 0.65 | 0.65 | 0.45 | 0.38 | 0.23 | 0.31 | 0.53 |
| Dermark | 0.65 | 0.65 | 0.65 | 0.65 | 0.45 | 0.38 | 0.23 | 0,31 | 0,53 |

*கட்டணங்கள் யாவும் Sterling Pounds இல் உள்ளன. ஒரு நிமிடத்திற்கு (தாங்கள் வாழும் நாட்டிலுள்ள வங்கி நாணய மாற்று விகிதப்படி தாங்கள் வாழும் நாட்டின் நாணயத்தில் கட்டணங்களை மதிப்பிடவும்)*

தொடர்புகட்கு: **K.SRI**
Tel: 02301 - 13149 (ஜேர்மனி)
Fax: 02301 - 3998
Mobil: 0171- 2490131

K.SRIKANDARAJAH, HAUPT STR-16
59439 HOLZWICKEDE, GERMANY

# காயத்திரியின் தொடரும் சேவையில்....

மிகவும் உயர்ந்த தரமுடைய ஒட்டி, ஓரா, விளைமீன், சுறா போன்றவற்றை பாரிசில் நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிக்கின்றோம்

SAMUDRA
SEA FOODS

மாதங்கி கறிப்பவுடர் மற்றும் மாதங்கி தயாரிப்புப் பொருட்கள் யாவற்றையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்!




## New GAYATHIRY
*Enterprise S.A.R.L.*

**210, Rue du Fbg. St.Denis, 75010 Paris.**
**Tel: 01 42 09 22 43 / Fax: 01 46 07 90 34**

வர்த்தகர்கள் மொத்தமாகப் பெற்றுக்கொள்ள எம்முடன் தொடர்புகொள்ளவும்

மாதங்கி

இலண்டனுக்கான இறக்குமதியாளர்களும் விநியோகஸ்தர்களும்:

## Spiceway
21.23 Kingston Road,
South Wimbledon,
London SW19 1JX.
Tel: 0181-540 5526, 0181-540 3481 Fax: 0181-544 0697

இங்கு மாதங்கி தயாரிப்புக்களும், SAMUDRA கடல் உணவு வகைகளும் பெற்றுக்கொள்ளலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடற்ற தர்மபாலாவின் இனவாதம்

பகுதி II

4

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்திற்கான அடிப்படை கி.பி 1839 லேயே இடப்பட்டு விட்டது. வலன்சிறீ சித்தானந்த தேரோ என்பவர் 1839 -ல் கிறிஸ்தவப் பாதிப்பிலிருந்து பௌத்தத்தைக் காப்பாற்றுவதற்காக பரமதம்ம நசேத்திய என்னும் அமைப்பை ஆரம்பித்தார். இவ் அமைப்பு பௌத்தம், சிங்களம், பாளி என்பவற்றின் தனித்துவத்தையும், பௌத்த சிங்களவர்கள், பௌத்த சிங்கள இலக்கியங்களையும் படிக்கவேண்டிய தேவையையும் பௌத்த சிங்களப் பண்பாட்டை கட்டிக்காக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியது.


இந்த அமைப்பின் வழியில் பிற்காலத்தில் வந்த மிகுந்துவத்த குணானந்த தேரோ, ஹிக்கடுவ சிறி அமங்கல நாயக்க தேரோ ஆகியோர், பௌத்த சிங்கள மறுமலர்ச்சி இயக்கத்தை ஆரம்பித்து வைத்தனர்.

1873-ம் ஆண்டு பாணந்துறையில் மிகுந்துவத்த குணானந்த தேரோ வணபிதா டேவிட்.டி .சில்வா என்ற கிறிஸ்தவ மத குருவுடன் பௌத்தமா, கிறிஸ்தவமா சிறந்தது என்ற ஒரு பகிரங்க விவாதத்தை நடத்தினார். ஆங்கிலம், சிங்களம் என்ற இரு மொழிகளிலும் புலமையும், கிறிஸ்தவ மதம் பற்றி குறிப்பாக பைபிள் பற்றி நல்ல அறிவும் பெற்றிருந்த குணானந்ததேரோ தனது வாதத்திறமையால் கிறிஸ்துவத்தை விட பௌத்தமே உயர்ந்தது எனவும் கிறிஸ்தவர்களுடைய பிரச்சாரங்கள் அனைத்தும் பொய் என்றும் நிரூபித்திருந்தார்.



இப் புகைப்படத்தில் இருக்கும் தொழிலாளர்கள் கண்டியில் இருந்து கல்லோயாவுக்கு அனுப்பப் பட்டதாக 1908-ம் ஆண்டில் வெளியான ஒரு நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பகிரங்க விவாதத்தினால் கவரப்பட்ட அமெரிக்கரான கோர்னல் ஒல்கொட் என்பவர், இலங்கைக்குச் சென்று தன்னை ஒரு பௌத்தத் தொண்டனாக மாற்றிக் கொண்டார். இது, அக்காலத்தில் வெள்ளையர்களே உயர்ந்தவர்கள் என்று நம்பிக்கொண்டிருந்த சிங்களவர்களுக்கு தங்களது சிங்கள மொழியும் பௌத்த மதமும் உயர்ந்தது என்ற எண்ணத்தைத் தோற்றுவித்தது.



இப் படம் கோப்பிக் காலத்தைச் சித்தரிக்கும் படம். கோப்பி பதப்படுத்தப்படும் ஆலையும் தொழிலாளர்களும்

கண்டியச் சிங்களவர்கள், கரையோரச் சிங்களவர்கள் என்று பிளவுபட்டுக் கொண்டு, ஒருவருடன் ஒருவர் சண்டை பிடித்துக் கொண்டிருந்த சிங்களவர் இனத்தை இந்த சம்பவங்கள் ஒன்றிணைய வைத்தன. பௌத்த மதத்தையும் பௌத்த நாடான இலங்கையையும் (தம்மதுபீபம்) பாதுகாக்கும் பொறு-ப்பு ஆரிய சிங்கள மக்களுக்கு புத்த பெருமானால் அளிக்கப்பட்டது என்ற கருத்து உருவாக்கப்பட்டது.

பத்திரிகைகள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்களில். பௌத்த சிங்களவர்களை கதாநாயகர்களாகவும், கிறிஸ்தவர்களையும் மற்றவர்களையும் வில்லன்களாக சித்தரிக்கும் நாவல்களும், சிறுகதைகளும் வெளியிடப்பட்டிருந்தன.

தொடக்ககாலத்தில் பௌத்த மறுமலர்ச்சி இயக்கம், கிறிஸ்தவர்களுக்கு, அதுவும் கிறிஸ்தவர்களாக மாறிய சிங்களவர்களுக்கு மட்டுமே எதிராக இருந்தது. அதை தமிழர்களுக்கு எதிரான இயக்கமாக மாற்றியதில் முக்கிய பங்கு வகித்தவர் அநகாரிக தர்மபாலா.

கொழும்பு புறக்கோட்டையில் இருந்த வீட்டுத்தளபாட வியாபாரி ஒருவரின் மகனாகப் பிறந்த 'தர்மபாலா' முதலில் ஆங்கிலேயப் பாணியிலேயே வளர்க்கப்பட்டு, ஆங்கிலப் பாடசாலைக்கே கல்வி கற்க அனுப்பப்பட்டார். மேலைத் தேயப் பாணியில் டொன் டேவிட் ஹேவவிதாரண என்றே அவருக்கு பெற்றோர் பெயர் வைத்திருந்தனர். ஆனால், பின்னால் பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் மீது கொண்ட ஈடுபாடு காரணமாக அநகாரிக தர்மபாலா என்று தன்னுடைய பெயரை மாற்றிக் கொண்டார். அநகாரிக என்றால் வீடற்றவன் என்று அர்த்தமாகும்.

சிங்கள பௌத்த தேசியவாதத்தை வளர்ப்பதற்கு பெரிதும் பாடுபட்ட அநகாரிக தர்மபாலா, சிங்களவர்களை தவிர மற்ற அனைவருமே இலங்கைக்கு வந்தேறுகுடிகள் என்ற கருத்தை முன்வைத்து, 'மண்ணின் மைந்தர்கள்' பிரச்சாரத்தை முடுக்கிவிட்டார். துட்டகைமுனுவுக்கு புத்துயிரூட்டி, அவனை சிங்கள பௌத்தர்களின் இலட்சிய புருஷனாகக் காட்டி அவர்களை எழுச்சி கொள்ள வைக்க முயற்சி செய்தார்.

இவருடைய பேச்சுக்களும், எழுத்துக்களும் முழுக்க

முழுக்க சிங்களவர்கள் அல்லாதவர்களுக்கு எதிராக இருந்தது.

ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். நாங்கள் சிங்கத்தின் இனம் என்பதை மறந்து விட வேண்டாம். எமது மதத்திற்கும், எமது குழந்தைகளுக்கும், குழந்தைகளின் குழந்தைகளுக்கும் பெரும் பணியாற்ற வேண்டிய பொறுப்பு எமக்குண்டு. எமது புனித நாட்டை இந்துமதப் பிரியர்களும், விஸ்கி வியாபாரிகளும் சீரழிப்பதற்கு இடமளிக்கக்கூடாது. வரலாற்றுப் பெருமை

**கிறிஸ்தவ மதம் பற்றி குறிப்பாக பைபிள் பற்றி நல்ல அறிவும் பெற்றிருந்த குணானந்ததேரோ தனது வாதத்திறமையால் கிறிஸ்துவத்தை விட பௌத்தமே உயர்ந்தது எனவும் கிறிஸ்தவர்களுடைய பிரச்சாரங்கள் அனைத்தும் பொய் என்றும் நிரூபித்திருந்தார்.**

மிக்க இனமான ஆரிய இனத்தின் இனிமை மேன்மையான கௌரவம் மிக்க எங்கள் குழந்தைகள் இன்று மதுப்பிரியர்களுக்கும், மாட்டிறைச்சி உண்பவர்களுக்கும் பௌத்த விரோதிகளான அந்நியர்களுக்கும் அடிமையாவதா? என்றெல்லாம் அவரது பேச்சுக்களும் எழுத்துக்களும், வெளிப்படையாகவே பௌத்த சிங்கள இனவாதத்தை கக்கித்தள்ளின.

மலையகத் தொழிலாளர்களைப் பற்றி அவர் குறிப்பிடுகையில் ஆங்கிலேயர்கள் தென்னிந்தியாவின் கீழ் சாதித் தமிழர்களை எமது பெருமைமிக்க தீவில் கொண்டுவந்து குடியேற்றி விட்டனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

அநகாரிக தர்மபாலாவின் இத்தகைய பேச்சுக்களைக் கேட்டும் எழுத்துக்களைப் படித்தும் பியதாசா சிறிசேனா, 'வாலிசிங்க ஹரிச்சந்திரா உட்பட ஏராளமானோர், காவிஉடை தரித்து பௌத்த சிங்கள மறுமலர்ச்சி இயக்கத்தில் சேர்ந்து கொண்டனர்.

இக்கால கட்டத்தில், ஆங்கிலப்பாடசாலைகளுக்கு இணையாக கொழும்பு, கண்டி மற்றும் தென்பகுதி நகரங்களில் பௌத்த சிங்களக் கல்வி போதிப்பதாக ஆனந்த, நாலந்த கல்லூரிகள் நிறுவப்பட்டன.

இவ்வாறு வளர்ச்சி பெற்ற பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் செயற்பாடுகள் காரணமாக 1883-ம் ஆண்டு கொழும்பு கொட்டாஞ்சேனை பகுதியில் முதன்முதலாக கிறிஸ்தவர்களுக்கும் பௌத்தர்களுக்குமிடையிலான கலவரம் மூண்டது.

1883-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் கொட்டாஞ்சேனை புனித லூசியா தேவாலயத்தில் ஈஸ்டர் பண்டிகைக் கொண்டாட்டங்கள் நடை பெற்றுக் கொண்டிருந்த போது, அருகிலிருந்த புத்தவிகாரையில் மிகுத்துவத்தை குணானந்ததேரோ என்ற பிக்கு சில சடங்குகளை ஏற்பாடு செய்திருந்தார். இது தமக்கு எதிரான செயல் என்று கிறிஸ்தவர்கள் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர். பௌத்தர்கள், 'இல்லை இந்த மதச் சடங்கை நடத்துவது எமது உரிமை' என்று அடம்பிடிக்க ஈற்றில் கிறிஸ்தவர்களுக்கும், பௌத்தர்களுக்கும் இடையேயான பெரிய மதக்கலவரம் ஒன்று ஏற்பட்டது. இதில் ஒருவர் கொல்லப்பட 12 பொலீஸ்காரர் உட்பட 30 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தக் கலவரம் தொடர்பாக விசாரணை நடத்திய விசாரணைக்குழு, குணானந்ததேரோவையும் கண்டித்த போதும், பௌத்தர்களின் கிறிஸ்தவ எதிர்-ப்பு இயக்கத்தையே அதிகம் குற்றம் சாட்டியிருந்தது. இது சிங்கள பௌத்தர்களை ஆத்திரப்படவைத்தது.

- நக்கீரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

# ஆனந்தி



நின்றிருக்கலாம்.

ஒன்றையும் பற்றி யோசிக்காமலே நின்றிருக்கலாம். கண்கள் கண்டு கொண்டது உண்மைதான். கண்களிலிருந்து வந்த ஏக்கம் கலந்த பார்வை கூட, எப்படி என்னை நிறுத்தமுடியாது போயிற்று? அன்பை, பாசத்தை, பரிவை, ஏக்கத்தை, உதவிகோரும் கண்களை... புரியாத வெறும் இயந்திர மிருகமாய் நான் எப்போது மாறினேன்?

மாற்றப்பட்டு விட்டேன்.

என்னால் முடியாது போயிற்று.

இதயத்தின் அடிவாரத்திலிருந்து, ஆத்மாவுக்கும் இயந்திரத்திற்கும் இடையிலான ஒரு போட்டி. ஆத்மீகம் லௌகீகம் இரண்டுக்கும் இடையிலான ஒரு சர்ச்சை.

இந்தப் போட்டியும் சர்ச்சையும் ஓயப்போவதில்லை. 'நான்' வாழும் வரை வாழத்தான் போகின்றன.

'நான்' என்பது புலம்பெயர்ந்த நானாய், மாறிக்கொண்டிருக்கிறது.

புலம்பெயரா 'நான்' கொஞ்சம் நல்ல 'நான்' போலத் தோற்றமளிக்கிறது.

எல்லா 'நான்' உம் ஒரே மாதிரித்தான் என்றும் எண்ணத் தோன்றுகிறது.

எது எப்படியிருந்தாலும் – இன்று நான் நின்றிருக்கலாம்.

எனது 'காரை' (car) நிறுத்தியிருக்கலாம்

அவளுக்காக... அந்த ஏக்கம் கலந்த பார்வைக்காக...!

அவள்கூட,

என்னைப் போல் சில சிக்கலுக்குள் சிக்கித் தவித்திருக்கலாம்.

அவரவர் 'நான்' களை அவரவரே உணர முடியும்.

ஆனால்–

அவளது உதவி கோரும் பார்வையை என்னால் உதற முடியாதிருந்தது.

உதவி கோருகிற பார்வையை புரிந்து கொள்ள முடியாதளவு சுத்தமடையனாய் நான் இன்னமும் மாறிவிடவில்லை என்பது ஒரு நற்செய்தி!

இனியும் நான் இந்த விஷயத்தை எனக்குள் வைச்சுப் புழுங்கிக்கொண்டு இருக்கப் போறதில்லை.

ஆருக்காவது சொன்னாத்தான் மனம் ஆறுதலடையும்.

ஆனந்தியின்ரை விஷயம்தான் அது.

ஆனந்தியைப் பற்றி உங்களுக்கெல்லாருக்கும் நல்லாத் தெரியும்.

ஆனந்தியைப் பற்றித் தெரியாமல் புலம் பெயர் நாடொன்றிலை நீங்கள் வாழுறியள் எண்டால் அது வெட்கக்கேடு

ஆனந்தி பாவம்.

ஆனந்தியைப் பற்றி பலவாறான விமர்சனங்கள் இருக்குது.

1. அவள் ஒரு 'மாதிரி'
2. அவளின்ரை 'கரெக்ரர்' (Charecter) சரியில்லை
3. கலாச்சாரத்தைக் கெடுக்கிறாள்.
4. அதி தீவிர பெண் நிலைவாதி
5. ஒரு நல்ல நடிகை (அதாவது போலியானவள்)
6. அவளும் ஒரு பெண்தானே!

இந்த ஆறு வகையான பார்வைகளும் பலரால் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டவை. இன்னும் இன்னும் எத்தனை பார்வைகள் உண்டோ யானறியேன்.

ஆனந்தியின் கதையை இப்படி இவ்வாறு ஆரம்பிக்கலாம்.

கிராமம்.

சாதியில் குறைந்தவள்.

முன்பின் தெரியாத ஒருவனுக்குக் கழுத்தை நீட்டியவள்.

கலியாணத்துக்கு முந்தி ஆங்காங்கே சில 'ரீன் ஏஜ்' குழப்படிகள். குழப்படிகளைக் கட்டுப்படுத்துவதற்காக 'கால்கட்டு'ப் போடப்பட்டு, வெளிநாடுவாழ் புருஷனிடம் ஓடோடிவர ஐந்து லட்சம் யாரோ ஒரு 'ஏஜன்சி' யிடம் கட்டியவள்.

வந்துவிட்டாள்

வாழ்க்கை ஓடுகிறது.

கணவன் என்பவர் சாதியில் அவளைவிட 1 1/2 அங்குலம் உயர்ந்தவர் என்று பேசிக்கொள்கிறார்கள்.

அவர் 4 வருடங்கள் அவளுக்கு முன்பே வந்து விட்டாராம்.

புலம் பெயர் 'சீனியோறிற்றி' யை காப்பதில் பெருமையுள்ளவர்.

'டீசன்ராய்' அப்பப்ப குடித்துக்கொள்வார்.

பிறந்தநாள்.. 'வெடிங்' ... கோவில் நிர்வாகசபை... தமிழ் கலாச்சாரக்காப்பகம்.... போன்றவற்றில் அவரை விட்டால் வேறை ஆளில்லை.

ஆரம்பத்தில் ஆனந்தியை மொழிகற்கும் பாடசாலைக்கு அவர் அனுப்பவில்லை.

கேட்கும் நண்பரிடமெல்லாம் "நான் அவாவுக்கு ரீச் பண்ணுவன்தானே! அதோடை ஸ்கூலும் சரியான தூரம்" என்று சொல்லிக் கொண்டார்.

வாழ்க்கை வெகு வேகமாக ஓடுகிறது.

ஆனந்தி தானே கற்றாள்.

தனது காலில் நிற்கப் பழகினாள்.

கடை தெருவுக்குப் போய் வந்தாள்.

கணவன் புழுகுகளைத் தனக்குள் சிரித்துக்கொண்டாள்.

தாங்கிக் கொண்டாள். எப்படியோ... நாளடைவில் ஆனந்திக்கும் அவருக்கும் ஒத்துவராது போனது. அவர் பல வழிகளைக் கையாண்டாலும் அவரால் அவளை அடக்கமுடியாது போயிற்று. என்று சொல்லிக் கொள்கிறார்கள்.

அவர் கையாண்ட வழிகளில் 'வன்முறையும்' அடங்குகிறது எனப் பின்னாளில் வந்த சரித்திர உளவியலாளர்கள் பேசிக் கொண்டார்கள்.

(இந்த இடத்தில்– ஒரு முக்கியமான குறிப்பாக... மிகவும் நுணுக்கமான விஷயமாக... புலம்பெயர் தொலைபேசிக்குள் குசுகுசுக்கப்பட்ட விஷயமாக... ஒன்றைச் சொல்ல வேண்டும். அதுஎன்னவென்றால்– ஆனந்திக்கு இரண்டு முறை கருக்கலைப்பு 'ஒப்பிறேஷன்' நடந்ததாம்.)

அடக்குவது என்றால்....

அவள் பிறருடன் கதைக்கமுடியாது. அவர் வேலைக்குப் போகும்போது ரெலிபோனை மூடி வைத்துவிட்டுப்போவார். வரும் பொழுது, அவள் சிரித்தபடி இருக்க வேணும். இல்லையென்றால், அவள் ஏதோ ஒன்றை யோசிக்க கொண்டிருக்கிறாள் என அவர் முடிவெடுத்துப் பின்னர் என்ன யோசிச்சவள் எண்டதைச் சொல்லு என அரித்துக்கொண்டிருப்பார். அவள் கொஞ்சம் அளவுக்கு அதிகமாய்ச் சிரித்தால்– யாரை? எதை? எண்ணிச் சிரிச்சாள் எண்டு சொல்லவேணும். இப்படியாக அவர் அவளை அடக்கிக்கொண்டிருந்தார்.

ஆனந்தி கொஞ்சம் கொஞ்சமாக அந்த நகரத்தில் வாழும் தமிழர்களினால் அந்நியப்படுத்தப்பட்டாள்.

இதற்கிடையில்– வேறு ஒரு நகரத்தில் வசித்த ஒரு உறவினன், இவள் வைத்தியசாலையில் இருக்கும் பொழுது உதவிக்கு வந்தான்.

அது–' புலம் பெயர் தொலைபேசிகளுக்குள் புகுந்து விளையாடியது'

ஆனந்திக்கும் அவனுக்கும் ஏதோ ஏதோ என்றார்கள்.

இப்பொழுது ஆனந்தி முற்றாகவே அகதிக்குள் அகதியானாள்.

பிறந்தநாள்... கலியாணம்... சாமத்திய வீடு... இந்தமாதிரியான விழாக்களுக்கு அவள் போனாலும் மூலையில் இருக்க வேண்டியதாயிற்று.

தன்னை அவற்றுள் ஈடுபடுத்தினால் அவள் போன பின்னர், அவளைப் பற்றிக் கட்டாயம் ஏனைய பெண்கள் குசுகுசுப்பார்கள் என்று அவள் உறுதியாக நம்பினாள்.

அவள் எல்லாவற்றுக்கும் பயந்தாள். எல்லாருக்கும் பயந்தாள்.

தன்னை அலங்கரிக்கக்கூடப் பயந்தாள். அவளது எல்லாவற்றிலும் அவளையறியாமலே எதுவோ கலந்திருந்தது.

தெரிந்தோ தெரியாமலோ அவள்மீது என்னவோ ஒட்டிக்கொண்டிருந்தது.

ஊத்தை...

அழுக்கு....

இதை கழுவுவதற்கு எந்த 'சம்பூ' (Shamboo) வைப் பாவிக்கலாம்?

தெரிவு செய்கிற சம்பூ (Shamboo) கூட அழுக்காய் இருக்கிறது.

அவளுக்குச் சில வேளைகளில் வெள்ளை ஆடை பிடிக்கிறது.

தூய வெண்மை நிறத்தை ஏன்தான் விதவைகளுக்குப் பரிந்துரைக்கிறது இந்தச் சமூகம்? 'விதவை' என்பது என்ன?

மலர் விழியும், கௌரி அன்ரியும் எவ்வளவு சிறப்பாகத் தங்கள் 'றிஜிஸ்ரேஷன்' (Registration) ஐக் கொண்டாடினார்கள்?

'நான் இவரை இறுதிவரை மணவாளனாய்த் தேர்ந்தெடுக்கிறேன்' என்ற உறுதிமொழிப் பத்திரத்தில் கையெழுத்திட்ட கௌரிஅன்ரியின் 'வீடியோவை' எத்தனைதரம் எனக்குப் போட்டுக் காட்டியிருப்பா. இப்ப அவா இஞ்சை அதே 'பேப்புரை' (Paper) சாட்சியாய் வைத்து 'இத்துடன் இவருடனான எனது வாழ்வை முடித்துக்கொள்கிறேன்' எனக் கையெழுத்திடவில்லையா?

கௌரி அன்ரி, இப்பிடிக் கையெழுத்துப் போட்டதாலைதான் அவையளுக்கு மேலதிகமாக காசு கிடைக்குதாம்.

புருஷனை இழந்தவள் விதவையெண்டால் கௌரி அன்ரியும் விதவைதானே!

'பிரிந்துவாழுற' காசிலதானே கௌரி அன்ரி சிவப்புக்கூறைச் சீலை வாங்கினவா.

அண்டைக்கு ஏதோ ஒரு விழாவிலை, நான் வெள்ளைச்சீலை கட்டிக் கொண்டு போகேக்கை என்னைப்பார்த்து

"இந்தமாதிரி 'பங்ஷன்னுக்'கு (Funtion) வெள்ளை சாறி (Sarry) உடுத்தப்படாது" எண்டு சொல்லுறா.

சீ...

நாயள்!

போலியள்!!

காசுக்கும்... கௌரவத்துக்கும் புருஷனை கலாச்சாரத்தை விக்கிற வேஷதாரிகள்,

ஆம்!

ஆனந்தி அந்நியப்பட்டே விட்டாள்.

அவளுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை

யாரைப் பார்த்தாலும் ஒரு வித நடுக்கம் உருவானது.

வேண்டாம். ஒன்றும் வேண்டாம்.

வீடு!

TV!

சமையலறை!

Bathroom ல் வேணுமெண்டால் குளிக்கும் போது 'சின்னச்சின்ன ஆசை' முணுமுணுப்பு!

போதும். எல்லாம் போதும்.

கண்தெரியாத ஒருவனுக்கு...

செவி கேளாத ஒருவனுக்கு...

மணக்கத் தெரியாத ஒருவனுக்கு...

கழுத்தை நீட்டி உடலையும் நீட்டிய எனக்கு வேணும்.

நல்லாய் வேணும்.


அவள் தன்னைத்தானே தண்டிக்க ஆரம்பித்தாள்.

(தொடர்ச்சி 20-ம் பக்கம்)

க. ஆதவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகலிட வாழ்வின் முரண்பாடுகள்



## உள்வீட்டுத் திருடர்கள்

பாரிசிலுள்ள புதுவைத் தமிழர்களுக்கும் ஆபிரிக்க கறுப்பினத்தவர்களுக்கும் இடையில் கூட முரண்பாடு உள்ளது. ஆனால் ஈழத்தமிழர்களுக்கும், ஆபிரிக்க இனத்தவர்களுக்குமுள்ள முரண்பாட்டைப் போல் அது அவ்வளவு கூர்மையடைந்ததல்ல.

ஈழத் தமிழர்களும், புதுவைத் தமிழர்களும் தங்களுள் ஒத்துப் போகாதவர்களாக இருந்தாலும், இந்த ஆபிரிக்க கறுப்பினத்தவர்களை மதிப்பீடு செய்வதில் ஒரே மாதிரியான அளவு கோலையே வைத்திருக்கிறார்கள், இருவருமே ஒத்துப் போகிறார்கள்.

'கறுவல்' இவர்கள் அவர்களுக்குக் கொடுத்திருக்கக்கூடிய அடை மொழி என்பது, வெளிப்படையாகப் பார்க்கும்போது அவர்களது நிறத்தை அடிப்படையாகக் கொண்டது என்று கருதத் தோன்றலாம்., அதற்கு அப்பால் 'ஒரு இழிவுத்தன்மை' மேலோங்கி நிற்பதைக் காணமுடியும்.

சில மாதங்களுக்கு முன் பாரிசில் புகலிடச் சூழலில் நமது குழந்தைகளை ஆரோக்கியமாக வளர்ப்பது எப்படி என்று ஒரு கலந்துரையாடல் நடந்தது. பாரிஸ் நகரத்தில் புதுவைத் தமிழர்கள் ஈழத் தமிழர்கள் உட்பட ஒரு லட்சத்திற்கு அதிகமானவர்கள் வாழ்ந்த போதும், ஒரு 50 பேர் வரையிலேயே அந்தக் கலந்துரையாடலுக்கு வந்திருக்கிறார்கள்.

அங்கு தன்னுடைய கருத்துக்களை முன் வைத்த ஒரு புதுவைத் தமிழர், தன்னுடைய குழந்தைகளை, தான் ஆபிரிக்க நாட்டுக்குழந்தைகளுடன் சேர விடுவதில்லை என்றும், அவர்களுடைய வீடுகளுக்குச் செல்ல அனுமதிப்பதில்லை என்றும் சொன்னார். அதற்கு அவர் சொன்ன விளக்கம், ஆபிரிக்கர்கள் மோசமானவர்கள், எல்லாவிதமான தீய பழக்கங்களுக்கும் சொந்தக்காரர்கள், சுத்தம் என்பது அவர்களிடம் கிடையாது, ஆபிரிக்க நாட்டுப் பெற்றோர்களே தமது பிள்ளைகளுக்கு எப்படி ஒழுங்கீனங்களைச் செய்து காரியத்தை சாதிக்கலாம் என்பதைக் கற்றுத்தருகிறார்கள் என்பதாகும்.

அவரது கருத்துக்கு எதிர்க்கருத்து ஒரு ஈழத்தமிழர் அந்த புதுவை அன்பரது கூற்று ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றும், அவர் சொல்வது போல் ஆபிரிக்க இனத்தைச் சேர்ந்த அனைவரும் ஒட்டுமொத்தமாக மோசமானவர்களோ, சீரழிந்து போனவர்களோ அல்ல. அவர்களிலும் அதிகளவுக்கு நல்லவர்களும் நேர்மையானவர்களும் இருக்கிறார்கள். ஏன் தமிழர்களுள்ளும், திருடர்கள், மோசடிப்பேர்வழிகள் இல்லையா? என்று கேட்க கலந்துரையாடல் சூடு பிடித்தது.

எனக்கு அருகில் அமர்ந்திருந்த ஒரு ஈழத்து 'கலா ரசிகர்' கறுவல்கள் என்று அழைப்பதில் ஒன்றும் தவறில்லை. பாரிசிலே பெரும்பாலான குற்றச் செயல்கள் அவர்களால்தான் செய்யப்படுகிறது. கறுவல் பிள்ளைகளின் பழக்க வழக்கங்கள் மோசமானவை, எங்களுடைய பிள்ளைகளை அவர்களுடன் சேர வேண்டாம் என்று சொல்வதற்கு பெற்றோரான எங்களுக்கு உரிமையுண்டு, என்று விளாசித் தள்ளினார்.

அதன் பின்னர், பலர் இந்த முடிவு தவறு என்று விளக்கம் கொடுத்த போதும் முதலில் கருத்துச் சொன்னவரும் ஈழத்து கலா ரசிகரும், கடைசிவரை தங்கள் கருத்துக்களை மாற்றிக் கொள்ளவேயில்லை. தங்கள் தரப்பு நியாயங்களையே தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தனர்.

உண்மையில் இந்த இருவரும் தெரிவித்த கருத்துக்களும் இந்தியாவிலும் போராட்டத்துக்கு முந்திய கால இலங்கையிலும், மேட்டுக் குடியினரால் சாதி குறைந்தவர்களைப் பார்த்து திருடர்கள், நம்பிக்கையற்றவர்கள், அழுக்கானவர்கள், தீண்டத்தகாதவர்கள் என்று சொல்லப்பட்டு வந்த கருத்துக்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை.

ஆபிரிக்க சமூகத்தில் வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுவதற்குக் காரணம் பாரிஸ் நகரத்தின் வேலையில்லாப் பிரச்சினைகளும், காலாகாலமாக நிற அடிப்படையில் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள், கொடுமைகளின் விளைவாக ஏற்பட்ட விரக்தியும், அவர்களது, பண்பாட்டு வடிவங்களும், கலாச்சார விழுமியங்களும் காலணித்துவ வாதிகளால் சிதைக்கப்பட்டதால் ஏற்பட்ட அந்நியமாதலுமேயாகுமன்றி அவர்களது சமூக அமைப்பின் பாரம்பரிய குணாம்சங்கள் அல்ல.

நம்முடைய புகலிடத் தமிழர்களிலேயே சேர்ந்திருந்து விட்டு தருணம் பார்த்து களவெடுத்துக் கொண்டு போகிறவர்களும், வழிப்பறி செய்பவர்களும், கொலை செய்பவர்களும், கொள்ளையடிப்பவர்களும், ஏமாற்றுப் பேர்வழிகளும் இல்லாமல் இல்லை. இதை நமது சனத்தொகை விகிதாசார, அடிப்படையில் வைத்துப் பார்த்தால் ஆபிரிக்க நாட்டவரின் சனத்தொகை விகிதாசாரத்துக்கு ஒன்றும் குறைந்தது அல்ல என்பது தெரியவரும்.

கடந்த வருட தொடக்கத்தில் பாரிசில் எனக்குத் தெரிந்த ஒருவரது திருமணம் நடந்தது. அந்தத் திருமணத்தில் ஓடியாடி வேலை செய்த அவரது சகோதரி மணமக்களுக்கு அன்பளிப்பு செய்வதற்காக 20 பவுண் நகையையும் 5 ஆயிரம் பிராங்க் காசையும் தனது கைப் பையில் வைத்து எடுத்து வந்திருந்தார். திருமண வேலை மும்முரத்தில் தனது கைப்பையை திருமண மண்டபத்திலிருந்த பாதுகாப்பான அறை ஒன்றில் வைத்துவிட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். அந்த அறைக்குள், மணமகளினதும், மணமகனினதும் மிக நெருங்கிய உறவினர்கள் மட்டுமே, போய் வந்தனர். அந்த நம்பிக்கையிலே மணமகனின் சகோதரி தனது கைப்பையை அங்கே ஒரு மறைவிடத்தில் வைத்திருந்தார்.

தாலிகட்டி முடிந்து, பந்தி பரிமாறி அன்பளிப்புக்கள் கொடுக்கத் தொடங்கிய நேரத்தில் போய்ப் பார்த்த போது கைப்பை வைத்தது வைத்தபடி இருந்த நகையையும் பணத்தையும் காணவில்லை. விசயம் உடனே வெளியில் தெரிந்தால் திருமண வீட்டில் குழப்பம் ஏற்பட்டு விடும் என்று எண்ணிய அந்தப் பெண்ணும் அவரது கணவரும், அந்த அறைக்குள் யார் சென்று வந்தது என்பதை இரகசியமாக விசாரித்துப் பார்த்தார்கள். நெருங்கிய உறவினர்களைத் தவிர வேறு யாரும் செல்லவில்லை என்று தெரியவந்தது.

நெருங்கிய உறவினர்களில் யார் மீது சந்தேகப்படுவது, பலர் வந்து போகும் பொது இடத்தில் கைப்பையை வைத்தது தங்கள் பிழையே என்று மனம் நொந்து கொண்டு அவர்கள் அந்தவிடயத்தை அப்படியே விட்டுவிட்டனர்.

ஆனால், இது நடந்து ஆறு மாத காலத்தின் பின், அந்தப் 'பொருளை' எடுத்தவர் ஒரு நகைக் கடையில் சென்று அதை விற்க முற்பட்டபோது மாட்டுப்பட்டு விட்டார். அந்த நகைகள் அந்தக் குறிப்பிட்ட நகைக் கடைக்காரரால் செய்து கொடுக்கப்பட்டவை. ஏற்கனவே விசயத்தை அறிந்திருந்த அவர் விசயத்தை களவு கொடுத்தவர்களுக்கு சொல்லி விட்டார்.

பின்பு விசாரித்துப் பார்த்தால் அந்தத் திருட்டு நபர், ஆறுமாத காலமாக அவர்களுடன் மிக் நெருக்கமாகப் பழகியிருந்தார். அவர்களுடைய நிதி நிலைமை பற்றியெல்லாம் தெரிந்தும் வைத்திருக்கிறார். இவ்வாறு பல வீடுகளில் பழகி அதன்பின் சந்தர்ப்பம் பார்த்து அவர் பல திருட்டுக்களைச் செய்திருக்கிறார் என்றும் தெரியவந்தது.

இவரைப் போன்றவர்களின் நடவடிக்கைகளை வைத்துக் கொண்டு, முழு ஈழத் தமிழர்களும் திருடர்கள் ஏமாற்றுப் பேர்வழிகள் என்று சொல்ல முடியுமா? (தொடரும்)

**நக்கீரன்**

# தமிழீழச் செய்திகள்

## மீனவர்கள் மீது கடற்படை தாக்குதல்

முல்லை மாதளம் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது சிறீலங்கா கடற்படையினர் நடாத்திய தாக்குதல்களினால் அம் மீனவர்கள் தமது படகுகளையும், மீன்பிடி உபகரணங்களையும் விட்டுவிட்டு கடலில் குதித்து நீந்தித்தப்பினர். அவர்களின் படகுகளையும், உபகரணங்களையும் கடற்படையினர் சேதப்படுத்தி அழித்ததுடன் கரையோரப் பகுதிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர்.

## பதுங்கியிருந்து பலியெடுத்த சிப்பாய்கள்

திருமலை மாவட்ட மூதூர் பகுதியில் வீதியோரத்தில் பதுங்கியிருந்த சிங்களச் சிப்பாய்கள் வேலை முடிந்து வீடுதிரும்பிக் கொண்டிருந்த அப்பாவித் தமிழ் இளைஞனொருவரை சுட்டுக் கொலைசெய்துள்ளனர். கணபதிப்பிள்ளை நித்தியானந்தன் என்ற 22 வயதான இளைஞரே இவ்வாறு அநியாயமாக பலியானவராவார்.

## பெரிய மடுவில் விமானக் குண்டுவீச்சு

மன்னார் மாவட்டத்திலுள்ள பெரிய மடு கிராமத்தில் சிறீலங்கா விமானப்படையினரின் போர் விமானங்கள் குண்டுத் தாக்குதல்களை மக்கள் குடியிருப்புகளை இலக்காக வைத்து நடத்தின. கடந்த 14 ஆம் திகதி மதியம் நடைபெற்ற அகோரமான குண்டு வீச்சினால் உடமைகளுக்கு பெரும் சேதம் ஏற்பட்டது. மக்கள் பதுங்கு குழிகளில் பாதுகாப்புத் தேடியதால் உயிரிழப்புக்கள் ஏற்படவில்லை.

## வன்னியில் தபாற் சேவை இல்லை

சிறீலங்கா இராணுவத்தின் 'எடிபல' நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதையடுத்து வன்னியில் தபாற்சேவைகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன. மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டிய ஏராளமான தபாற் பொதிகள் வவுனியாவில் தேங்கிக் கிடக்கின்றன.

## மற்றொரு தாண்டிக்குளமாக கற்பிட்டி

மன்னார் பகுதிக்குள் உட்புகுவதோ அன்றி வெளியேறுவதோ கற்பிட்டிப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினால் ம்ட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கற்பிட்டியில் அமைக்கப்பட்ட தடைமுகாம்களில் மன்னார் பிரதேசத்திற்குள் செல்பவர்கள் தடுத்து வைக்கப்பட்டு கடுமையாக விசாரிக்கப்படுகின்றனர். இந்த விசாரணைகளின் போது மக்களது அடையாள அட்டைகள் வாங்கப்பட்டு அவர்களுக்கு ஒருவித நீல அட்டைகள் வழங்கப் படுகின்றன. இந்த அட்டைகள் இல்லாமல் மன்னார் பகுதிக்குள் பிரவேசிப்பது படையினரால் தடைசெய்யப்பட்டுள்ளது.

## நெற் செய்கைக்கு பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் உதவி

வன்னிப் பிரதேசத்திலுள்ள 349 நெற்செய்கையாளருக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் கடனுதவி வழங்கியுள்ளது. ஒவ்வொருவருக்கும் தலா எண்ணாயிரம் ரூபாவினை இக் கடனுதவித் திட்டத்தின் கீழ் பெற்றுள்ளார்கள். துணுக்காய், பாண்டியன்குளம், நானாட்டான், அடம்பன், பாலமடு ஆகிய இடங்களிலுள்ள விவசாயிகளுக்கே இக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

## வெளிச்சத்தின் 50 ஆவது இதழ்

தமிழீழத்திலிருந்து வெளிவரும் "வெளிச்சம்" கலை கலாச்சார இதழ் தனது 50-வது இதழினை வெளியிட்டுள்ளது. விடுதலைப் புலிகள் கலை கலாச்சாரப் பிரிவினால் வெளியிடப்படும் இச் சஞ்சிகைக்கு தமிழீழ தேசியத் தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்கள் சிறப்புச் செய்தி ஒன்றினையும் வழங்கியுள்ளார்.

## மன்னார் தீவில் தினசரி தேடுதல் வேட்டை

மன்னார் தீவுப் பகுதியில் இராணுவத்தினரின் தீவிர அடக்குமுறைக்குள் தமிழ் மக்கள் சிக்கி பெரும் வேதனையை அனுபவிக்கின்றனர். சுற்றிவளைப்புகளும், கைது செய்யும் நிகழ்வுகளும், ஆட்கடத்தல்களும் அங்கு தினசரி நிகழ்வாக மாறியுள்ளது. கடந்த வாரத்தில் இராணுவச் சுற்றிவளைப்பு ஒன்றின் போது கைது செய்யப்பட்ட இரு அப்பாவி இளைஞர்கள் மக்கள் முன்னிலையில் வைத்தே கடுமையாக சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர்.

## மாங்குளத்தில் "முதல் எதிரி"

மாங்குளத்தில் "முதல் எதிரி" என்ற தெருக் கூத்து நிகழ்வொன்று நிகழ்த்தப்பட்டு வருகிறது. மக்களால் மிகவும் விரும்பி இரசிக்கப்படும் இந்தக் கலைநிகழ்வு பரவலாக நடாத்தப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.


## ஈ.பி.ஆர்.எல்.எவ்.க்கு படையினரால் ஆயுதங்கள்

யாழ்குடா நாட்டுக்குள் ஈ.பி.ஆர்.எல்.எவ் கும்பலும் நுழைந்துள்ளது. இராணுவப் பாதுகாப்புடன் அடாவடித்தனங்கள் செய்வதற்காக வந்துள்ள மூன்றாவது குழுவினர் இவர்களாவர். இவர்களுக்குரிய ஆயுத தளபாடங்களை சிறீலங்காப் படையினரே விநியோகித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிஸ் லாசப்பலில்....

# தர்ஷனா உணவகம்



நீங்கள் விரும்பிய சுத்தமான, சுவையான இலங்கை, இந்திய அறுசுவை உணவு வகைகளை சுவைத்து மகிழ்ந்திடவும், அனைத்துவிதமான உணவு வகைகளையும் ஓடருக்குப் பெற்றுக்கொள்ளவும் இன்றே நாடுங்கள்.

23, Rue Perdonnet, 75010 Paris.
Tel: 01 40 05 08 36 / 06 80 02 93 41



தமிழர் புனர்வாழ்வுக் கழக பிரான்ஸ் கிளை வழங்கும்

# நாடகவேளை

தமிழகத்தின் தலைசிறந்த நடிக நடிகையர் பங்கேற்கும் நிகழ்ச்சி

**இடம்:**
AMORC
199Bis Rue St. Martin
75003 Paris.
M°: Etienne Marcel

**காலம்:**
09.03.1997
ஞாயிற்றுக்கிழமை
பி.ப. 04.00 மணி

தலைக்கோல்-பாண்டிச்சேரி நாடகக் கலைஞர்கள் முதன்முறையாக ஐரோப்பாவில்

## தெருக்கூத்து

அலங்காரமும் அபிநய விளக்கமும்

## கருஞ்சுழி

நாடகம்

ஆக்கமும் இயக்கமும்: பாண்டிச்சேரி வ. ஆறுமுகம்



PYRAMID

**Video Release**




**K.J. JESUDAS**
*Nenjil Nirainthavai*
36 SUPER HIT SONGS
In Original Video Cassette

**நெஞ்சில் நிறைந்தவை - K.J. ஜேசுதாஸ்**

| | | |
|---|---|---|
| 1. அதிசய ராகம் | - அபூர்வ ராகங்கள் | 1975 |
| 2. கண்ணன் ஒரு கை | - பத்ரகாளி | 1977 |
| 3. மனைவி அமைவதெல்லாம் | - மன்மத லீலை | 1976 |
| 4. செந்தாழம் பூவில் | - முள்ளும் மலரும் | 1978 |
| 5. அக்கரைச் சீமை | - ப்ரியா | 1978 |
| 6. திருமாலின் | - திரிசூலம் | 1979 |
| 7. தாம் தரிகிட | - டிக் டிக் டிக் | 1981 |
| 8. ஊரே வாரே வா | - புதுக்கவிதை | 1982 |
| 9. பாட வந்ததோ | - இளமைக் காலங்கள் | 1983 |
| 10. வச்சக்கவா | - நல்லவனுக்கு நல்லவன் | 1984 |
| 11. கஸ்தூரி மானே | - புதுமைப் பெண் | 1984 |
| 12. இங்கு எல்லோருக்கும் | - ஓசை | 1984 |
| 13. நினைத்தால் மணக்கும் | - அவள் சுமங்கலி தான் | 1985 |
| 14. தண்ணீத்தொட்டி | - சிந்து பைரவி | 1985 |
| 15. எங்கே என் ஜீவனே | - உயர்ந்த உள்ளம் | 1985 |
| 16. உன் பார்வையில் | - அம்மன் கோவில் கிழக்காலே | 1986 |
| 17. வங்காள கடலே | - மனதில் உறுதி வேண்டும் | 1987 |
| 18. அட காணாங் | - பூந்தோட்ட காவல்காரன் | 1988 |
| 19. வா வா அன்பே | - அக்னி நட்சத்திரம் | 1988 |
| 20. முத்தமிழ் கவியே | - தர்மத்தின் தலைவன் | 1988 |
| 21. மானிட சேவை | - உன்னால் முடியும் தம்பி | 1988 |
| 22. பழமுதிர்ச் சோலை | - வருஷம் 16 | 1989 |
| 23. அப்பா யாரு அம்மா யாரு | - புதிய பாதை | 1989 |
| 24. நீ பாதி நான் பாதி | - கேளடி கண்மணி | 1990 |
| 25. மழை வருது | - ராஜா கைய வெச்சா | 1990 |
| 26. கல்யாண தேனிலா | - மௌனம் சம்மதம் | 1990 |
| 27. நாதம் எழுந்ததடி | - கோபுர வாசலிலே | 1991 |
| 28. பார்த்த விழி பார்த்த | - குணா | 1991 |
| 29. காலை மாலை | - ஞானப்பறவை | 1991 |
| 30. காட்டு குயிலு | - தளபதி | 1991 |
| 31. கல்யாண | - மில் தொழிலாளி | 1991 |
| 32. மாசி மாசம் | - தர்ம துரை | 1991 |
| 33. இள நெஞ்சே வா | - வண்ண வண்ண பூக்கள் | 1995 |
| 34. சோலை மலரே | - பாட்டு வாத்தியார் | 1995 |
| 35. கமலம் | - மோகமுள் | 1995 |
| 36. தங்கமகனின்று | - பாட்சா | 1995 |

*Coming Soon...*
*On Original Pyramid Video*

Pyramid ன் Original Video படங்களை மிகக் குறைந்த விலையில் சகல ஐரோப்பிய நாடுகளிலும் பெற்றுக்கொள்ளலாம். வீடியோ படங்களை நீங்கள் வாங்கும்போது Pyramid பிரதிகளைக் கேட்டு வாங்குங்கள். அவை தரமானவை!
Pyramid ஸ்தாபனத்தார் மேலும் பல, புதிய படங்களை வீடியோவில் தொடர்ந்து வெளியிடுவார்கள் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றார்கள்.
(All titles are recorded on Macrovison and Fully Packed)

ATTRACTIVE SONG BOOK FREE

நீங்கள் வாங்கும் Pyramid Videoக்கள் Original Pyramid Video தானா என்று பார்த்து வாங்குங்கள். அவை ஒவ்வொன்றிற்கும் Original Pyramid Hologram பொறிக்கப்பட்டுள்ளது. பார்த்து வாங்குங்கள்

PYRAMID
PYRAMID INTERNATIONAL LTD
1, Martindale Road, 2nd Floor,
Pyramid House, Hounslow West,
Middlesex, TW4 7EW,
United Kingdom
Tel: 0181-572 2070/0181-737 2070
Fax: 0181-572 5560


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவை நோக்கி

# அகதிகளாய்

- ஸ்ரீலங்கா அரச பயங்கரவாதத்தால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய இனத்தின் அவலத்தை அகிலத்திற்கு எடுத்துரைக்க;
- அனைத்துலக நாடுகளிலும் வதியும் தமிழீழ மக்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும், தமிழீழ மக்களுக்கும் ஆற்றும் உதவிகளின் தார்மீகத் தன்மையை எடுத்துரைக்க;
- ஸ்ரீலங்காவின் போர்க்காலச் சூழலே தமிழீழ மக்களைப் புலம் பெயர்ந்த நாடுகளில் அரசியல் அகதிகளாக்கிற்று என்பதை எடுத்துரைக்க

## 17.03.1997 திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு

**ஜெனிவா புகையிரத நிலையத்திலிருந்து ஆரம்பித்து ஐக்கிய நாடுகள் சபை வரை அமைதிப் பேரணி நடைபெறும்.**

பிரான்சில் இருந்து எம் மக்கள் கலந்து கொள்வதற்காக விசேட போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு: 01 43 58 11 42

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

*தமிழீழ விடுதலைப் புலிகள் - பிரான்ஸ் கிளை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கலியாணங்கள்.... கலாட்டாக் கலியாணங்கள்

## ஆ....ஜிகு... ஜிகு... ஜிங்காலே... ஜிகு... ஜிகு... ஜிங்காலே

அட! அட !! வர வர இந்தச் சனங்களுக்கு வலுவாய் இங்கிதங்கள் குறைஞ்சு வருகுது கண்டியளோ !

றோட்டாலை ஒரு வயது போனது போகுதெண்டதுகூடத் தெரியாமலுக்கு இடிச்சுத் தள்ளுமாப் போலயெல்லே.... போய் வருகுதுகள்.

அதுகளின்ர.... அவசரங்கள் அதுகளோடை. என்னைப் போலை வயது போனதுகள் எல்லோ ஒரு எப்பன் ஒதுக்கா இருக்கப் பழகவேணும் எண்டு சொல்லப் போறியளாக்கும் ..... ம்.......... ம்!

அவசரம்.... அந்தரத்துக்கு ஆத்துப் பறந்து போறது பாதகமில்லை எண்டாலும் லொட்டோ ரிக்கற்று வெட்டுறதுக்காக கடைசி நேரத்திலை விழுந்தடிச்சு........ லொட்டோ போடாத சனத்தையும் இடிச்சுத் தள்ளிக் கொண்டு ஓடுறது அவ்வளவு நல்லதில்லையுங்கோ !

போன கிழமை ஏதோ நூறு மில்லியன் பிராங்கு பரிசுக்கு லொட்டோ போட்டி இருக்குதெண்டு சொல்லி எங்கடைசனங்கள் கடைசி நேரத்திலை உந்த தபாக்கு கடையளுக்கு ஓடின ஓட்டம் இருக்குதே.... உண்ணாணை நான் என்ரை கண்ணாலை கண்டனான் எண்டுறன். லொட்டோ வெட்டிறதும்..... அதிலை பரிசு விழும் எண்டு கனாக் காணுறதும், அவையவையின்ர சொந்த விசயங்கள் எண்டாலும், யாழ்ப்பாணத்துக்க பூந்த ஆமிக்காரரை கெதியிலை பெடியள் துரத்திப் போடுவாங்கள்....... எண்டு சொன்னா மட்டும், லொட்டோவில விழுற நூறு மில்லியனும் எனக்குத்தான் விழும் எண்டு நம்புறவை சத்தியமா இதை நம்ப மாட்டம் எண்டெல்லே அடம்பிடிக்கினம்.

அந்தக் காலத்து இராசாமார் நகர் வலம் போனதுமாதிரி நானும் உந்த லொட்டோக் காச்சல் எங்கடை சனத்தை எப்பிடி ஆட்டுவிக்குது எண்டுறதை அறிய மம்மல் பொழுதுக்குள்ள மெல்லக் கிளம்பினன். லொட்டோ ரிக்கற்றை வெட்டிப்போட்டு ஒவ்வொருத்தரும் வெறுவாய்சப்பி உதிர்த்த 'லொட்டோ மொழியளை' கேக்க ரெண்டு காது பத்தாதுங்கோ !

ஒருத்தர் சொன்னார் தனக்கு பரிசு விழுந்தால் முக்காவாசியை பெடியளுக்குக் குடுப்பாராம். அட அடடே..... அடடே.... உப்பிடித்தான் ரெண்டொரு வருஷத்துக்கு முந்தி பெடியளுக்கு வலு சப்போட்டாய் கதைக்கிற ஒருத்தருக்கு, சுரண்டல் சுவீப்பு ரிக்கற்றிலை கொஞ்சக்காசு விழுந்திச்சு. ஆள் என்னடாவெண்டா திருவிளையாடல் படத்திலை வாற சிவபெருமான் மறைஞ்சது போலை திடீரென..... மறைஞ்சிட்டார். காசு குடுக்காம இருக்கிறதுக்காக அவர் செய்த திருவிளையாடல்கள் என்னே! என்னே! கூடுவிட்டுக் கூடு பாயாக் குறைதான்........!

நாங்கள் செய்யவேண்டியதை நேரகாலத்துக்குச் செய்திருந்தால் எங்கடை நாட்டின்ரை நிலைமை இப்ப எங்கேயோ எல்லோ வந்திருக்கும் ம்..... ம்ம்...... இப்பவும் 'லேற்றாகேல்லை'......

ஒவ்வொரு தனிமனிசரின்ரை பழக்க வழக்கங்கள் தான் ஒரு குடும்பத்தின்ரை விழுமியத்திலை பங்கெடுக்கும். குடும்பங்களுக்குள்ளாலை போய் சமூகங்களைச் சேரும். அந்தச் சமூகங்கள் எல்லாம் சேர்ந்து ஒரு இனத்தின்ரை விழுமியத்தை தீர்மானிக்கும். ஆரம்பத்திலையே கணக்குப் பிழைச்சால் பிறகுவாற கதை கந்தல்தான்.

உப்பிடித்தான் அண்டைக்கொரு கலியாண வீட்டை போய் சும்மா இருக்கேலாமலுக்கு ஒரு விசயத்தை கேட்டதுக்கு பக்கத்திலை இருந்தவர் பார்த்த பார்வையில நான் இடத்தை மாத்த வேண்டியதாப்போச்சு.

கலியாணங்கள் நடக்குறது மிச்சம் சந்தோசமான காரியங்கள் எண்டாலும் அங்கை நடக்கிற விசயங்கள்

## ஆருக்குச் சொல்லி அழ?

உலகத்திலை பாருங்கோ..... ஒரு நங்கிணி அளவுள்ள கியூபா நாட்டிலை தானாம் உலகத்திலையே கூடின டாக்குத்தர்கள் உருவாகினமாம். அங்காலை கொஞ்சம் தள்ளி இருக்கிற பெரிய நாடொண்டிலை தானாம் உலகத்திலையே கூடின மறியல் வீடுகளும் இருக்குதாம்......

> "...இஞ்சை கலியாணங்களிலை சம்பெயின் உடைச்சு தெளிக்கிறவை ஊரிலை இருந்தா கள்ளுப் போத்திலை எடுத்து குலுக்கித் தெளிப்பினமோ?"...

இதெல்லாம் எப்பிடி எனக்குத் தெரியுமெண்டு கேக்கிறியளே..... ஊரிலை நான் இருக்கேக்கை பின்னேரத்திலை நரிவாய்க்காலடி வாசிகசாலைக்கு என்ரை கூட்டாளி சொதிவாய் ஆறுமுகத்தோடை ஒவ்வொரு நாளும் போறதாலை பொறுக்கின விசயங்கள்தான்.

இப்பத்தைய ஆக்கள் எல்லாம் கிலிசுகெட்ட சினிமாப் புத்தகங்களையெல்லோ விழுந்து விழுந்து படிக்கினம். அண்டைக்கு ஒருநாள் றெயினிலை போகேக்கை.... பக்கத்திலை இருந்த எங்கடையாள் ஒருத்தர் கொழும்பில இருந்துவாற பேப்பரின்ரை சினிமாப் பக்கத்தைமட்டும் வீட்டிலிருந்து கொண்டுவந்து வலு அக்கறையோடை வாசிச்சுக் கொண்டிருந்தார். அட.... கிடைக்கிற ஒரு எப்பன் நேரத்திலையாவது கொஞ்சம் உருப்படியான விசயங்களை வாசிக்கலாமெல்லே?

இதுகளைச் சொன்னால் நாட்டுவிளப்பம் தெரியாத நைன்ரி எண்டு சொல்லுங்கள். என்னத்துக்கு வீண் சோலி.......

அப்பிடியில்லையே...? வீண் தம்பட்டங்களுக்காக அநியாயமாய் காசைக் கரியாக்குறதுதான் கண்ட மிச்சம். காசு ஒரு பக்கத்தாலை கரியானாலும் மற்றப் பக்கத்தாலை மொய்வடிவத்தில வருகுதுதானே எண்டு நீங்கள் முணுமுணுக்கிறதும் கேக்குது கண்டியளோ !

நான் போன கலியாணம் நடந்த மண்டபத்தை போறவாற வெள்ளைத் தோலுகளிட்டை என்ரை பிரெஞ்சிலை அபிநயங்களைக் காட்டி கேட்டு ஒரு மாதிரி தேடிப்பிடிச்சு பொம்பிளை மாப்பிளை கால்மாத்த போகாத குறையையும் நானே ஊரெல்லாம் சுத்தியடிச்சு தீத்துவைச்சன். அங்கை போனா... எல்லாரும் றெடியாம் ஐயரைக் காணேல்லையாம். அந்தாளும் என்ன மாதிரி வழிதெரியாமல் மாட்டுப்பட்டுப் போச்சோ எண்டு யோசிச்சுக் கொண்டிருக்கேக்க ஐயரும் வந்து சேர்ந்தார். வேறோரு கலியாணத்துக்குப் போனதாலைதானாம் நேரம் போச்சுதாம் எண்டு மண்டபத்திலை பறைஞ்சிச்சினம்.

பிறகென்ன கலியாணம் களைகட்டிச்சுது. ஐயர் முழங்க.... வீடியோக்காரர் ஓடியோடி எடுக்க, எங்கள் தரவளியளை எங்கை எடுக்கிறாங்கள். றோசுப்பவுடர் பூசின பொடிச்சியளை எல்லோ.... சுத்தி சுத்தி எடுக்கிறாங்கள். இனிமேல் நானும் கொஞ்சம் றோசுப் பவுடர் பூசிக்கொண்டு போகலாமோ எண்டு பார்க்கிறன்.

நேரம் காணாதெண்டு சொல்லி கூறைச்சீலையை பொம்பிளையின்ரை தோளிலை சாத்தி ஒருமாதிரி தாலி கட்டி முடிஞ்சுது. பிறகென்ன சாப்பாடு போடுற விசயம்தானே! வந்தவுடனை பலகாரங்களை அடைஞ்ச....... சனங்களுக்கு எங்கை சாப்பாடு ஒழுங்காப் போச்சுது. ஏதோ சாட்டுக்கு குருவி கொறிச்சது போலை ஒரு எப்பன் கிள்ளித் திண்டிட்டு (அதிலையும் ஒரு ஸ்ரைல் தான்!) மிச்சத்தைக் குப்பைக் கூடையுக்கதான் சங்கமமாக்கிச்சினம். இந்தப் பாதகத்தைச் செய்ய முன்னம் வன்னியிலை கயிட்டப்படுற எங்கடை சனத்தை ஒரு ஏப்பனாவது நினைச்சுப் பாத்துகளே.

பேந்து ரிசப்சனோ.... கிசப்சனோ எண்டு ஒண்டை வைச்சிச்சினம்.

பொம்பிளை மாப்பிளை கேக்கு வெட்டிற நேரத்திலை ரெண்டு பக்கத்திலையும் கோபுரந் தாங்கிகள் போல நிண்ட ரெண்டுபேர் சம்பெயின் போத்தல்களை உடைச்ச விதம்..... இருக்கே அப்பப்பா. அதை வீடியோக்காரரிட்டைதான் கேக்கவேணும்.......

போத்தில்களின்ரை மூடியள் அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் கோயில் திருவிழாவிலை கொழுத்தின அவுட்டு வெடியள் போலை பறக்க, அவையள் சம்பெயின் போத்திலுகளை குலுக்கி முன்னாலை நிண்டவைக்கு அபிஷேகம் செய்ய..... தாய்க்குலங்கள் தங்கடை காஞ்சிபுரம்' சாறியள் நனைஞ்சு போகக் கூடாதெண்ட பயத்திலை பின்னோக்கிப் பாய.....

.....உந்த விண்ணாணங்களைப் பாத்த நான் சும்மா கிடக்காமலுக்கு பக்கத்திலை இருந்தாளிட்ட, "ஏன் தம்பி இஞ்சை கலியாணங்களிலை சம்பெயின் உடைச்சு தெளிக்கிறவை ஊரிலை இருந்தா கள்ளுப் போத்திலை எடுத்து குலுக்கி தெளிப்பினமோ?" எண்டு கேட்டுவைச்சன். அந்தாள் பார்த்த பார்வை இருக்கே...... வந்தமா... திண்டமா... மொய்யைக் குடுத்தமா எண்டு இரும் காணும் எண்டு சொன்னது போலை கிடந்துது. ஏ்தோ அவருக்கும் கெதியிலை.... ஏதோ தெளிக்கிற அலுவல் ஒண்டு வரப்போகுதாக்கும் பிறகென்ன....? இடத்தை மாத்துறதுதானே என்னைப்போல வயது போனதுகளுக்கு அழகு.....

நான் போன கலியாணமாவது பரவலாயில்லைப்போலை... இன்னொரு க்லியாணத்திலை நடந்த விசயத்தை கேள்விப்பட்டால் ஆடிப்போயிடுவியள்... கலியாணத்துக்கு வந்த பொடியொண்டு கையோடை தாலிக் கயித்தைக் கொண்டுவந்து அங்கை வந்திருந்த இன்னொரு பொடிச்சியின்ரை கழுத்திலை கட்டிப்போட்டுதாம்.

உப்பிடித்தான் இந்தியாவிலை செய்த ஒருத்தரின்ரை ரெண்டு கையளையும் பொம்பிளை பகுதி ஆக்கள் இழுத்து வைச்சு வெட்டிப் போட்டினமாம். அடக் கடவுளே.......

போற போக்கைப் பாத்தா, இங்கை நடக்கிற கலியாண வீடுகளுக்கும் பொலிசுக் காவல் தேவைப்படுமோ.... எண்டுதான் யோசிக்க வேண்டிக்கிடக்குது.

ஆ..... ஆ....... என்ன என்னத்துக்கு பொலிசோ....? அப்பிடியெண்டால்....? வழக்கம்போலை அவையும் தாலி கட்டி முடிஞ்சாப் பிறகுதான் (?) வருவினம் எண்டு சொல்லாமல் சொல்லுறியளாக்கும்.

என்ர வீரபத்திரா.... நீதான் இனி வெளிக்கிடவேணும் உன்ர... சூலம்... வில்லு வேல்.... வாளுகளோட காவலுக்கு....!

**அருமைத்தம்பி**


The best in quality
the very best in price

M.R. MODE collection

தரமான உங்கள் ஆடைத் தேர்வுக்கு Frankfurt நகரில்
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

எம்.ஆர். மொட்
கொலெக்ஷன்

பட்டு, பாவாடை, புது விதமான பஞ்சாபி சூட், குழந்தைகளுக்கான நீட்டுப்பாவாடை, பாட்டி சூட் கொலெக்ஷன் ஆட்பனாரன், கொட்டன் சில்க், சொந்தத் தயாரிப்பில் உருவாக்கிய புதுவிதமான பனாரஸ், முத்து பனாரஸ், கூறை ஆகியவற்றை நீங்கள் விரும்பிய வண்ணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

Taunus Str.52-60
60328, Frankfurt/M
Tel:/Fax: 069/251308





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோகுலத்தில் சீதை மற்றும் காதல் கோட்டை:




அகத்தியனின் கதை சொல்லலில் ஒரு முக்கியமான விஷயம் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

காதல் கோட்டை/ கோகுலத்தில் சீதை போன்ற படங்களில் கதை பெண்களின் பார்வை வழி சொல்லப்படுகிறது. தமிழகத்தில் பெண்கள் ஒப்பீட்டளவில் சுயாதீனமாகச் செயல்படுவதற்கான இடங்கள் காட்டப் பட்டுள்ளது. வீடு பெண்களைப் பொறுத்து பல்வேறு விதமான வரையறைகளை கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கிறது. வீட்டுக்கும் ஊருக்கும் வெளியில் தெரிந்த மனிதர்களை மதிப்பீடுகளுக்கும் அப்பால் வெகுதூரத்தில் யோசிக்க இடமாக இருப்பது உழைக்கும் பெண்கள் தங்கும் விடுதிகள். இவ்விடங்களில் பெண் குறித்த ஒரு கூட்டுப் பிரக்ஞையை (Collective Consciousness) அடைவதற்குமான இடம் இருக்கிறது.

இவ்விடங்களில் வாழ நேர்ந்தவர்கள் பெரும்பாலும் கீழ்-மத்தியதர வர்க்க/ மத்திய தர வர்க்கப் பெண்கள்தான்.

எதிர்காலம் குறித்த நிறையக் கேள்விகளைக் கொண்ட இப் பெண்களின் எதிர்கால ஆண்கள் தேர்வு குறித்த பிரச்சினைகளையும் இரண்டு படங்களும் எடுத்துக் கொள்கின்றன.

பொதுவாக இப்பெண்களின் கனவுகள் (இந்தியாவில் நிலவும் நாடு தழுவிய நடமாட்டம், தாராளவாத பொருளாதாரக் கொள்கை) இரு வகையான நோக்கங்களை கொண்டிருக்கிறது.

1. அரசியல் சாரா வெள்ளைக் காலர் உத்தியோகஸ்த இளைஞர்கள்.

கொஞ்சம் இரங்கத்த - பெண்களிடம் இழந்துவிடத் தக்க இளைஞர்கள்.

(அனாதை, அம்மா, தங்கை இல்லாதவன்).

இங்கு இந்தியப் பெண்களுக்கு பிரச்சினையாகவுள்ள இன்னொரு பெண் இல்லை.

2. ஒப்பீட்டளவிலான பொருளாதார உத்தரவாதம். மேல் மத்தியதர வர்க்க கணவன்கள்.

இவர்களின் கடந்த காலம் எப்படி இருந்தாலும் கல்யாணத்திற்குப் பிறகு சரியாக இருந்தால் சரி.

தமிழ்ப் பண்பாட்டையும், கற்பையும் என்ன செய்வது?

## அகத்தியனின் கதை சொல்லல் முறை பற்றி:

கோகுலத்தில் வாழ்ந்தாலும் சீதையென்று. புனிதப்படுத்தலாம், தேவாலய கன்னியாஸ்திரிகளை கடைசியில் ஸிஸ்டர் என்று பேசி ஒரு நீண்ட டயலாக் விடலாம். Good.

கமலி, கமலியின் தோழி, வீட்டை விட்டு வரும் சீதை எல்லோரும் மகளிர் விடுதியில் தங்குகிறார்கள். சுயாதீனமாக இருந்து எதிர்காலம் குறித்து யோசிக்க ஒரு இடம் படத்தில் திட்டமிட்டு, பார்வையாளரை உள்வாங்க உருவாக்கப்படுகிறது.

கோகுலத்தில் சீதை படத்தில் ஒரு மிகப் பெரிய 'முரண்' வெறும் வசனங்களால் கடந்து போகப்படுகிறது. முன்னொரு காட்சியில் 'தாங்களாகவே வரும், கெட்டுப்போக நினைக்கிற பெண்களை மட்டுமே தேடும்', கனவான் கார்த்திக் பிற்பாடு கிறிஸ்தவ ஸிஸ்டர்களிடம் 'தன -க்கு பெண்களை தங்கைகளாக, தாயாக பார்க்கக் கற்றுக் கொடுத்தது சீதைதான், அப்படி வரும் பெண்கள் சூழ்நிலைகளால் தான் வருகிறார்கள் என்று தெரிந்து கொண்டேன்' என டயலாக் விடுகிறான்.

சீதைக்கு இம்மாதிரி பிரக்ஞை இருந்ததாகவே காணோம். அவருக்கு கார்த்திக் Man of dignity, decent, bullshit என்று வசனம் பேசத்தான் முடிகிறது. மேலும், அப்படி வரும் பெண்கள் கூட மேனா மினுக்கிகளான சாதுர்யமுள்ள சாசகக்காரப் பெண்களாகவே சித்தரிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும், தாங்களாகவே கெட்டுப் போகத்தான் அம்மாதிரிப் பெண்கள் வருகிறார்கள் என்கிறார். ஏழை, அடித்தட்டுப் பெண்களின் கையறு நிலை குறித்த மத்தியதர வர்க்கத் தீர்ப்புத்தான் இது.

அகத்தியனின் நோக்கம், இத்தகைய பெண்களுக்குப் பிடித்தே இருக்கும் நிச்சயம். பொருளா




தார உத்தரவாதமுள்ள மேல் மத்திய தரவர்க்க ஜென்டில் மேன் தமக்குக் கிடைத்தால் பிரச்சினை முடிந்தது.

அஜீத், அப்பாஸ் (மீசை மழித்தவன். அநேகமாக வட நாட்டானாக, ஆங்கிலேயனாக, ஐரோப்பியனாக இருப்பான்) கார்த்திக் போன்றோருக்கு அதிகமான ரசிகைகள் கல்லூரி மாணவிகள்தான் என்பதற்கான காரணம் அகத்தியனுக்கு மிக நன்றாகத் தெரிந்திருக்கிறது.

கோகுலத்தில் சீதையில் வரும் கரண் பாத்திரம் மிகமிகக் கொச்சையான விவரணமுள்ள பாத்திரம். கீழ்மத்தியதர வர்க்க / மத்தியதர வர்க்க குடும்பங்களில் ஆணின் பொறுப்பு தலை முறை தலைமுறையாக வருவது. எத்தனை படித்த பெண்கள் தொடர்ந்தும் கல்யாணத்திற்குப் பின்பும் கணவனின் பெற்றோர், மனைவியின் பெற்றோர் போன்றவற்றுக்கு தொடர்ந்தும் பொறுப்பெடுக்க முனைகிறார்கள்? இங்கு மேற்கத்திய குடும்ப அமைப்பு முறைவேறு. நம்முடைய அமைப்பு முறை வேறு. ஒரே இரவில் மாற்ற முடிகிற விஷயமும் அல்ல இது. சரியான வேலையும், சம்பாத்தியமும் இல்லாதவன் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குள்ளேயே காதலை மனதிற்குள்ளேயே மூடிக் கொண்டவன் என நிறையக் கதைகள் நிறைந்த நாடு இந்தியா. இப்பிரச்சனையிலும் பொருளாதார உத்தரவாதம், ஜென்டில்மேன் கணவன் கனவு காணும் பெண்ணின் பார்வையிலேயே கரண் பாத்திரம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

என் அனுபவத்திலேயே கார் -த்திக், மோகன் போன்றவர்களாக தங்கள் கணவர்களைக் கனவு காண்கிற நிறையப் பெண்களைச் சந்தித்திருக்கிறேன். காரணம் எப்போதும் உருகி வழிகிற, அரசியல் பிரக்ஞையற்ற நாயகர்கள் அவர்களாக இருப்பதுதான்.

அகத்தியனின் காட்சிகள்/ மனிதர்கள் இயங்கிக் கொண்டிருக்கும் உலகத்துக்குள் தான் நுழைகிறது/ நுழைகிறார்கள்.

சாதாரணமாக நாம் அன்றாடம் சந்திக்கிற இடங்கள், மனிதர்கள், சாதனங்கள் போன்றன படத்தில் முக்கிய அம்சங்களாக இடம் பெறுகின்றன.

உதாரணமாக பஸ் ஸ்டான்ட். அங்கு நடக்கும் பச்சையான உரையாடல். இரயில் நிலையம் ஆட்டோ ஸ்டான்ட் அங்கு நடக்கும் பச்சையான உரையாடல். இயல்பான சப்தங்கள் நாம் தினசரியும் சந்திக்கும் மனிதர்களின் பிரளயங்கள் போன்றன உடனடியான நமக்கு நம்பகமான உலகத்துக்குள் நம்மை எடுத்துக் கொண்டு விடுகிறது.

அகத்தியனின் படத்துக்குள் நாம் விமர்சனங்களற்று சஞ்சரிப்பதற்கான சூழல் உருவாக்கப்பட்டு விடுகிறது. ஏனெனில், இத்தகைய படங்களின் பெரும்பாலான பார்வையாளர்கள் கீழ் மத்திய தரவர்க்க / மத்திய தரவர்க்க நகர்ப்புற பார்வையாளர்கள்தான்.






அகத்தியன் தனது படங்களில் காட்டுகிற ஆண்களும், பெண்களும் மேல் மத்திய தரவர்க்க மனிதர்கள்தான். காதல் கோட்டையில் கதாநாயகனின் அறையில் இருக்கிற சஞ்சிகைகளில் 'காலச்சுவடு' சஞ்சிகையும் ஒன்று. ஆக கதாநாயகன் புத்திஜீவியும் கூட. மனுச்ய புத்திரனும் கண்ணனும் இதையிட்டு சந்தோசப்பட மாட்டார்கள் என நினைக்கிறேன்.

அகத்தியனின் கதை சொல்லலில் வடிவ உத்தி எனும் அளவில் பலமான அம்சம் ஒன்று நாம் அவதானித்து யோசிக்க வேண்டியதொன்றும் உண்டு.

நிலவும் பிரச்சினைகள், அபிலாசைகளை நிறைவேற்றும் கதைத்தர்க்கம், நம்பகமான உடனடி உலகைத் தேர்வது, சரியான பார்வையாளர்களை இலக்காகத் தேர்வது போன்றவற்றில் தான் அகத்தியனின் படங்கள் முக்கியமான படங்களாகி விடுகின்றன.

அகத்தியனின் படங்கள் எல்லா வகையிலும் ஒடுக்கப்பட்ட, நிராகரிக்கப்பட்ட பெண்கள் பற்றிய படங்கள் அல்ல; மாறாக, கீழ் மத்திய தரவர்க்க/ மத்திய தரவர்க்க பெண்களின் கனவுகளை அபிலாசைகளை பிரதி நிதித்துவப்படுத்துபவை.

யமுனா ராஜேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

# ஆனந்தி

சாப்பிட மறுத்தாள்
மெலிந்தாள்.

சோபாவில் மூலைக்குள் முடங்கத் தொடங்கினாள்.

(இந்த இடத்திலையும் ஒரு முக்கிய விஷயம் நடந்தது. கணவர், தனது உளவியல் தேற்றங்களையெல்லாம் கூட்டிக்கழித்துப் பார்த்து; அவளுக்கு 'மனநோய்' என்று கண்டுபிடித்தார்.

தனது கண்டுபிடிப்பை அவர் முதன்முதலாக யாரிடம் சொன்னார் தெரியுமோ?

கௌரி அன்ரியிடம்.

பிறகென்ன?

அவளுக்கு அழகான முத்திரைகள் குத்தப்பட்டன.

முன்பொருமுறை

நல்ல 'சமர்' (Summer).

நான் நூல் நிலையத்திலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தேன்.

ஒரு வெள்ளை ஆடையுடன் ஒரு பெண் தயங்கித் தயங்கி நின்று கொண்டிருந்தாள்.

என்னிடம் ஏதோ உதவிகோரும் பாவனையில் அவள் பார்த்தாள்.

நானும் பார்த்தேன்.

"நீங்கள் தமிழோ?" என்றாள்.

"ஆம்"

"தமிழ் 'ஸ்ரோறிபுக்ஸ்' (Story Books) எங்கை இருக்கு?" என்றாள்.

"வாங்கோ காட்டுறன்– நீங்கள் ஆற்றை புத்தகங்கள் வாசிக்க விரும்புறியள்?"

"என்னெண்டாலும் பறவாயில்லை. தமிழ்ப் புத்தகமெண்டாச் சரி" என்றாள்.

இடத்தைக் காட்டிவிட்டேன்.

"தாங்ஸ்" என்றாள் சிரித்தபடி. அந்தச் சிரிப்பு முழுமையானதாய் இல்லாமல் ஏதோ இனம் புரியாத சோகம் தழுவியதாய் இருந்தது.

யார் இந்தப் பெண்? என்றறிந்ததில் ஆனந்தி என்றும் ஆனந்தியின் கதையையும் தெரிந்து கொண்டேன்.

அதன் பின்னர், அப்பப்ப எங்காவது விழாக்களில் கடை தெருவில் கண்டால், கண்களால் ஒரு ஸ்நேகம் கலந்த நன்றியைப் பரிமாறுவாள். அதனுடன் சேர்த்து, 'உங்களுடன் தனியாக நான் பேச வேண்டும் போலுள்ளது' என்ற பார்வையும் கலந்திருக்கும். ஆனால், நான் பயந்தவன். நான், இது எனது பிரமையென நினைத்து ஏதோ பெரிய 'பிஸி' யான ஆள்போல அவள் முன்னே நடந்து கொள்வேன்.

ஆனந்திதான் அந்த 'பஸ்ராண்டில்' கையில் சில –'பிளாஸ்ரிக்' பை நிறையச் சாமான்களுடன் நின்று கொண்டிருந்தாள். மெலிந்து போன அவளது உருவத்தைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது.சிவப்புச் 'சிக்னல் லைட்டு' க்காய் நான் காரை நிறுத்தியிருந்தபடியால், கொஞ்ச நேர அவகாசம் கிடைத்தது. அவள் என்னை ஏக்கத்துடன் ஏதோ உதவிகோரித்தான் பார்க்கிறாள். மழையும் புகாருமாய் கடுமையான குளிர். ஆனந்தியின் வீட்டுக்குப் போகவேண்டிய 'பஸ்ராண்டு'ம் அதுவல்ல. அவள் அந்த 'பஸ்ராண்டி'ல் நிற்பது ஒரு தற்காலிக ஒதுங்கிடந்தான் என்பதுவும் நன்கு தெரிகிறது.

கண்களில் நீர் கசிந்து காய்ந்திருப்பதுவும் துலக்கமாகத் தெரிகிறது.

அவளது தலை சுற்றி... மயக்கம் போட்டு உடனேயே அந்த இடத்தில் விழுந்து விடுவாள் போலவும் தெரிகிறது.

அவளுக்கு நிச்சயமாக உதவிதேவை!

எனது 'காரை' நிறுத்தி, வாங்கோ வீட்டை தானே போறியள். அதிலை விட்டுட்டு நான் போறன். எனக்கொண்டும் அவசரமில்லை" எண்டு சொல்லலாம்.

அவள் சிரிக்கிறாள்.

அதே வழமையான சிரிப்பு.

நான் 'லிவ்ற்' கொடுத்தா அவள் ஏற்பாளா?'இருக்கிற கரைச்சல் காணாதெண்டு, இவரோடை காரில் போனால் சனம் என்ன சொல்லும்?' என்று நினைக்கமாட்டார்களா?

அல்லது, 'போறான் பார், ஒரு கோழை. நான் எவ்வளவு அவஸ்தைப்படுகிறேன். என்னை அதிலை விட்டாக் குறைஞ்சே போடுவார்' என நினைப்பாளா?

ஊரில எவ்வளவு 'சோசலாப்' பழகின ஆண் பெண் உறவுமுறை, Freesex இருக்கிற இந்த நாட்டிலை கூட ஒரு 'காரில்' 'லிவ்ற்' குடுக்க முடியாதளவுக்கு திண்டாடுகிறது. ஏன்?

பச்சை லைற் வந்து விட்டது. ஆனந்தி, நீயாவது ஒரு காலடி முன்னே வைத்து, நில்லுங்கள் எனச் சொல்ல மாட்டாயா? எவ்வளவு காலத்திற்கு வெறும் ஏக்கங்களாலும் பார்வைகளாலும் முட்டாக்கிட்ட கண்களாலும் பெருமூச்சுக் கடலில் முத்தெடுக்க மூழ்கப் போகிறாள்? எவ்வளவு காலத்திற்கு கௌரி அன்ரியின் கட்டளைப்படி சேலை அணியப்போகிறாய்?

பலத்த சிந்தனையுடன் வீடு வந்து சேர்ந்தேன். வாசலிலேயே மனைவி காத்துக் கொண்டிருந்தாள். பதட்டப்பட்டாள்.

"என்னப்பா என்ன விஷயம்–"

"கெதியா, இப்பிடியே வாங்கோ ஆஸ்பத்திரிக்குப் பேவேணும்" என்றாள்.

"என்னது ஆஸ்ப்பத்திரிக்கோ?"

"ஓம். இப்பதான் 'ரெலிபோன்' வந்தது. ஆனந்தி, நிறைய நித்திரைக்குளிசை விழுங்கி, எங்கையோ பஸ்ராண்டிலை விழுந்திட்டாளாம். 'அம்புலன்ஸ்' சிலை கொண்டுபோய் அட்மிட் பண்ணியிருக்கினமாம்" என்றாள்.

நின்றிருக்கலாம்.

ஒன்றையும் பற்றி யோசிக்காமலேயே நின்றிருக்கலாம். கண்கள் கண்டு கொண்டது உண்மைதான். கண்களிலிருந்து வந்த ஏக்கம் கலந்த பார்வை கூட எப்படி என்னை நிறுத்தமுடியாது போயிற்று?

அன்பை... பாசத்தை.. பரிவை... ஏக்கத்தை...

உதவிகோரும் கண்களை... புரியாத ஒரு புலம்பெயர் இயந்திரமிருகமாய் நான் எப்போது மாறினேன்?

(ஒக்ரோபர் 1995 'எரிமலை' இதழில் 'அஞ்சு' என்ற சிறுகதை எழுதினேன். இப்பொழுது 'ஆனந்தி' யை எழுதியுள்ளேன். அஞ்சுவும், ஆனந்தியும் சேர்த்து வாசிக்கையில் ஒருவிதமான பார்வை தென்படுகிறது. இக் கதைகள் பற்றிய வாசகர்களின் திறந்த விமர்சனங்களை எதிர் பார்க்கின்றேன்.)

"கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சைபுகினும் கற்கை நன்றே"

# உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு கல்விச் சேவை நடாத்தும்

## வருடாந்த பொதுப் பரீட்சை_சித்திரை 1997

- ஆண்டு 1 முதல் 8 வரையான மாணவர்களுக்கு தமிழ். சைவசமய பாடப் பரீட்சைகளும். கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என பொதுஅறிவுப் பரீட்சையும் நடாத்தப்படும்.
- பரீட்சை சித்திரை மாதம் 13–ம் திகதி (13.04.97) ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும்.
- 01.01.1992 இற்குப் பின் பிறந்த மாணவர்கள் பரீட்சைக்கு பங்குபற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
- தமிழ்ச் சிறுவர் பாடசாலைகளில் கல்விகற்காத தனிப்பட்ட மாணவர்களும் பரீட்சைக்குத் தோற்றலாம்.
- மாணவர்களின் வயதினை அடிப்படையாக வைத்து பரீட்சைக்குத் தோற்றும் ஆண்டு பிரிக்கப்படமாட்டாது. மாறாக மாணவர்களின் திறமையினை அடிப்படையாக வைத்து பாடசாலை ஆசிரியர்கள் அல்லது தனிப்பட்ட மாணவர்களுக்கு பெற்றோர்களே பரீட்சைக்குத் தோற்றும் ஆண்டினை நிர்ணயிப்பார்கள்.
- பரீட்சார்த்திகள், தமிழ். சைவசமயம் ஆகிய இரு பாடங்களுக்கும் ஒரே ஆண்டில் பரீட்சைக்கு பங்குபற்றுதல் வேண்டும்.
- பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப ஒவ்வோர் மாநிலங்களிலும் பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும். அனைத்து பரீட்சை நிலையங்களிலும் காலை 9.30 மணிக்கு பரீட்சைகள் ஆரம்பமாகும்.
- விண்ணப்ப முடிவுத் திகதிக்கு அமைய விண்ணப்பித்த மாணவர்களுக்கான அனுமதியட்டை சுட்டெண் பரீட்சைநிலைய முகவரி போன்றன தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.
- மாணவர்களுக்கான சான்றிதழ்கள் அதிவிசேட சித்தி, விசேட சித்தி, திறமைச்சித்தி, சாதாரண சித்தி என நான்கு வகையாக வழங்கப்படும். (சாதாரண சித்தி 40–54 புள்ளிகள். திறமைச்சித்தி 55–69 புள்ளிகள். விசேட சித்தி 70–84 புள்ளிகள். அதிவிசேட சித்தி 85 புள்ளிகளுக்குமேல்)
- தமிழ்ச் சிறுவர் பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்களின் விண்ணப்பம். பரீட்சைக் கட்டணம் போன்றன பாடசாலைப் பொறுப்பாளர்களினூடாகவே அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
  பரீட்சைக் கட்டணம் 10SFr
- விண்ணப்ப முடிவுத் திகதி: 14.03.1997 வெள்ளிக்கிழமை.
- விண்ணப்பதாரர் 14.03.97 வெள்ளிக்கிழமைக்கு முன் விண்ணப்பப் படிவத்தினையும், பரீட்சைக் கட்டணத்தையும் அஞ்சல் அலுவலகத்தில் செலுத்துதல் வேண்டும்.
- பரீட்சைக் கட்டணம் பரீட்சார்த்தியின் முழுப் பெயரிலேயே செலுத்தப்படல் வேண்டும்.
- பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படவேண்டிய தபாற் கணக்கு இலக்கம்: 80.79201.7
- பரீட்சைக் கட்டணம், விண்ணப்பப்படிவம் அனுப்பவேண்டிய முகவரி:

பரீட்சைக்குழு – Saiva Thamil Sangam,
Wehntaler Str 293,8046 Zurich - Tel: 01.4621349, 01.3622755, 089.4052209

### தமிழ்

- ஆண்டு 1 முதல் 5 வரையான மாணவர்களுக்கு உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு கல்விச் சேவையினால் வெளியிடப்பட்ட பாட நூல்கள், பயிற்சிப் புத்தகம் என்பவற்றினை அடிப்படையாக வைத்து பரீட்சைக்கான வினாக்கள் தெரிவுசெய்யப்படும்.
- ஆண்டு 6 முதல் 8 வரையான மாணவர்களுக்கு யாழ்ப்பாணம் கு.வி. அச்சகத்தின் செயல்நூலை அடிப்படையாக வைத்து பரீட்சைக்கான வினாக்கள் தெரிவு செய்யப்படும்.

### சைவசமயம்

சைவசமய நூல்கள் அச்சில் உள்ளதன் காரணத்தினால் இம்முறையும் சைவத் தமிழ்ச் சங்கத்தின் வெளியீடான சைவ சமய வினா விடை எனும் நூல் பரீட்சைக்கான பாடநூலாகக் கொள்ளப்படும்.

ஆண்டு 1:– வினா இலக்கம் 1 முதல் வினா இலக்கம் 25 வரை
பரீட்சையின் போது மாணவர்கட்கு மூன்று விடைகள் வழங்கப்படும். அவற்றில் சரியான விடையின் கீழ் கோடிட வேண்டும்.

தேவாரம்:– சைவ சமயம் வினா விடையில் 33–ம் பக்கத்திலுள்ள முதல் இரண்டு தேவாரங்களான "சொற்றுணை வேதியன்", "மந்திரமாவது நீறு" போன்ற தேவாரங்களுக்கும் கீறிட்ட இடைவெளியினை நிரப்புவதற்கு மூன்று சொற்கள் கொடுக்கப்படும். அவற்றுள் சரியான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிட வேண்டும்.

ஆண்டு 2:– வினா இலக்கம் 1 முதல் வினா இலக்கம் 50 வரை
மூன்று விடைகள் வழங்கப்படும். அவற்றில் சரியான விடையின் கீழ் கோடிட வேண்டும்.

தேவாரம்:– சைவசமய வினா விடையிலுள்ள முதல் நான்கு தேவாரங்களான
"சொற்றுணை வேதியன்", "மந்திரமாவது நீறு", "மடையில் வாளை", "உண்ணாமுலை" போன்ற தேவாரங்களுக்கு கீறிட்ட இடைவெளியினை நிரப்புவதற்கு மூன்று சொற்கள் கொடுக்கப்படும். அவற்றுள் சரியான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிட வேண்டும்.

ஆண்டு 3:– வினா இலக்கம் 1 முதல் வினா இலக்கம் 90 வரை
மூன்று விடைகள் வழங்கப்படும். அவற்றில் சரியான விடையினை எழுதுதல் வேண்டும்.

தேவாரம்:– சைவசமய வினாவிடையிலுள்ள "சொற்றுணைவேதியன்" முதல் மண்ணினல்லவண்ணம் வரையான 6 தேவாரங்களுக்கு கீறிட்ட இடைவெளியினை நிரப்புவதற்கு கொடுக்கப்பட்டுள்ள மூன்று சொற்களில் சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுதல் வேண்டும்.

ஆண்டு 4:– வினா இலக்கம் 1 முதல் வினா இலக்கம் 130 வரை
மூன்று விடைகள் வழங்கப்படும். அவற்றில் சரியான விடையினை எழுதுதல் வேண்டும்.

தேவாரம்:– சைவசமய வினா விடையிலுள்ள "சொற்றுணை வேதியன்" தொடக்கம் "வேயுறு தோழிபங்கன்" வரையுள்ள 8 தேவாரங்களுக்கு கீறிட்ட இடைவெளியினை நிரப்புவதற்கு கொடுக்கப்பட்டுள்ள. மூன்று சொற்களில் சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுதல் வேண்டும்

ஆண்டு 5:– வினா இலக்கம் 1 முதல் வினா இலக்கம் 170 வரை
மூன்று விடைகள் வழங்கப்படும். அவற்றில் சரியரன விடையினை எழுதுதல் வேண்டும்.

தேவரம்:– சைவசமய வினாவிடையிலுள்ள "சொற்றுணைவேதியன் " தொடக்கம் "வேயுறுதோழிபங்கன்" வரையுள்ள 8 தேவாரங்களில் வினாத்தாளில் குறிக்கப்படும் தேவாரங்களுடன் பரீட்சார்த்திகள் விரும்பிய தேவாரம் ஒன்றினையும் எழுதுதல் வேண்டும்.

ஆண்டு 6:– வினா இலக்கம் 1 முதல் வினா இலக்கம் 210 வரை
விடைகள் வழங்கப்பட மாட்டாது. விடையினை பரீட்சார்த்திகள் எழுதுதல் வேண்டும்.

தேவாரம்:– சைவசமய வினாவிடையில் உள்ள "சொற்றுணைவேதியன்" தொடக்கம் "வேயுறு தோழிபங்கன்" வரையுள்ள 8 தேவாரங்களில் வினாத்தாளில் குறிக்கப்படும் தேவாரங்களை முழுமையாக எழுதுதல் வேண்டும்.

ஆண்டு 7:– வினா இலக்கம் 1 முதல் வினா இலக்கம் 250 வரை
விடைகள் வழங்கப்பட மாட்டாது. விடையினை பரீட்சார்த்திகள் எழுதுதல் வேண்டும்.

தேவாரம்:– சைவசமய வினாவிடையில் உள்ள "சொற்றுணைவேதியன்" தொடக்கம் "சங்கநிதி பதுமநிதி" வரையுள்ள 10 தேவாரங்களில் வினாத்தாளில் குறிக்கப்படும் தேவாரங்களை முழுமையாக எழுதி அவற்றினை அருளியவர் பெயர், பாடப்பெற்ற தலம் என்பனவும் எழுதுதல் வேண்டும்.

ஆண்டு 8:– வினா இலக்கம் 1 முதல் வினா இலக்கம் 285 வரை
விடைகள் வழங்கப்பட மாட்டாது. விடையினை பரீட்சார்த்திகள் எழுதுதல் வேண்டும்.

தேவாரம்:– சைவசமய வினாவிடையிலுள்ள "சொற்றுணை வேதியன்" தொடக்கம் "தாயினும் நல்ல தலைவரென்றடியார்" வரையுள்ள 14 தேவாரங்களில் வினாத்தாளில் குறிக்கப்படும் தேவாரங்களை முழுமையாக எழுதி அவற்றினை அருளியவர் பெயர், பாடப்பெற்ற தலம், பொருள் என்பனவும் எழுதுதல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# World Call Phone Card

**World Call ஸ்தாபனம் La Chapelle இல்!**

**உங்களுக்கு அறிமுகமானவர்களும் அனுபவமுள்ளவர்களும் ஒன்றிணைந்து செயற்படவிருக்கும் தொலைபேசி நிலையம்**

# W@rld C@ll Boutique



விரைவில்:

17, Rue Marx Dormoy
75018 Paris.
Mº: La Chapelle இல்



அன்று Mci Card
World Call Card
Holiday Phone Card

போன்ற தொலைபேசி அட்டைகளை அறிமுகப்படுத்தி உங்கள் மனங்களில் இடம்பிடித்து, இன்று Call Back மற்றும் தொலைபேசி சம்பந்தமான ஆலோசனைகளையும் வழங்கக் காத்திருக்கிறோம்

தொடர்புகளுக்கு: **S. முகுந்தன்**

Siège Social:

## W@rld C@ll

**20, Rue des Petites Ecuries, 75010 Paris.**
**Tel: 01 48 24 12 43 / Portable: 0608519054**

**நிலையத் திறப்புவிழாவன்று தொலைபேசி அட்டை வாங்குபவர்களுக்கு இன்னொரு அட்டை இலவசமாக வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகச் செய்திகள்



யூதக் குடியேற்றம் அமைப்பதற்காக மேற்குப் பள்ளத்தாக்குப் பகுதியில் இருந்து பாலஸ்தீனர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். பாலஸ்தீனர் ஒருவர் இஸ்ரேலியப் படையினரால் பலவந்தமாக வெளியேற்றப்படுவதையே படத்தில் காண்கின்றீர்கள்.



## எமது பிரச்சனைகளை நாமே தீர்ப்போம் வெளியில் பிதற்றுவது எமது நாட்டுப்பற்றல்ல

*50 வருட கால பிரித்தானிய காலனித்துவ ஆட்சியில் இருந்து இவ்வாண்டு சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் வர இருக்கும் ஹொங்கொங்கின் அரசியல் எதிர்காலம் குறித்து தீர்மானிக்க எமது மக்களுக்குத் தெரியும். அதற்கு அமெரிக்காவோ, ஐரோப்பாவோ ஆலோசனை தெரிவிக்கத் தேவையில்லை. எமது நாட்டின் மீது பற்றுக் கொண்டவர்கள் சீனாவின் ஆட்சி உருவான பின் என்ன நடக்கின்றது என்று பார்த்து விட்டு எதையும் எமக்குள் பேசி பிரச்சனைகளுக்கு தீர்வு காண முயற்சிக்கலாம். அதை விடுத்து முன் கூட்டியே மற்ற நாடுகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதும் எமது நிர்வாகம் பற்றி அச்சம் தெரிவிக்க ஆரம்பிப்பதும் அவர்கள் பக்கம் சார்ந்தவர்களாக உள்ளனர் என்பதையே குறிக்கின்றது என ஹொங்கொங்கின் புதிய நிர்வாக அதிகாரி இகுக்க தெரிவித்துள்ளார்.*

*இது ஒருபுறமிருக்க ஹொங்கொங்கில் உள்ளவர்கள் பெல்ஜியத்தில் குடியேற விரும்பின் அவர்களுக்கு விசா வழங்க பெல்ஜியம் முன் வந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.*



**சிறந்த பிரெஞ்சுப் பாடகருக்கான பரிசு அல்ஜீரியாவைச் சேர்ந்த Khaled இற்கு வழங்கப் பட்டுள்ளது.**

## மக்களினதும் அல்லாவினதும் சேவகனாக இருப்பேன்

*மக்களினதும் அல்லாவினதும் உண்மையான சேவகனாக இருப்பேன் எனக் கூறி தனது பதவி ஏற்பு சத்தியப் பிரமாணத்தை செச்செனியாவின் புதிய ஜனாதிபதி அஸ்லான் மஸ்கடோவ் எடுத்துள்ளார். 100 வருடங்களுக்கு மேலாக எமது மக்கள் சுதந்திரமாக வாழவில்லை. எரியூட்ட நினைத்தவர்களால் எரியூட்டப்பட்டும், கொல்ல நினைப்பவர்களால் கொல்லப்பட்டும், நாடுகடத்த நினைப்பவர்களால் நாடுகடத்தப்பட்டும் வந்த எமது மக்களின் சுதந்திரத்துக்காக நான் உழைப்பேன் எனவும் அவர் தனது சத்தியப் பிரமாண உரையில் தெரிவித்தார்.*

*ரஷ்யாவின் ஜார் மன்னனால் 100 ஆண்டுகளுக்கு முன் கைப்பற்றப்பட்ட செச்செனியா இன்னமும் ரஷ்யாவின் பகுதியாகவே உள்ளது. செச்செனியாவுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டால் ரஷ்யாவின் வேறு இனக் குழுக்களும் உடைந்து செல்ல முயற்சிக்கும் என்பதால் செச்செனிய தனிநாட்டுக் கோரிக்கையை 5 வருடங்களுக்கு பின் ஆராய்வது என்ற சமாதான உடன்படிக்கையை ரஷ்யாவின் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் அலெக்ஸ்சாண்டர் லெபெட் செய்து கொண்டார். பொறிஸ் ஜெல்சினால் பதவி நீக்கம் செய்யப்பட்ட இவரும் பதவியேற்பு வைபவத்திற்கு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்.*



செச்சேனிய ஜனாதிபதி (இடது), உப ஜனாதிபதி, அலெக்ஸாண்டர் லிபெட் (வலது)

## மடலின் அல்பிறைட் யூதப் பின்னணி இஸ்ரேலுக்கு முன்கூட்டியே தெரியும்

*அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளராகப் பதவியேற்றுள்ள திருமதி மடலின் அல்பிறைட் ஒரு யூதப் பெண் என்பதும் அவர் இரண்டாம் உலகப் போரில் அகதியாகப் புறப்பட்டவர் என்பது இஸ்ரேலிய உளவுத் துறையினரால் ஏற்கனவே அறியப்பட்ட ஒன்று என்பதும் அந்த விடயம் இஸ்ரேலின் முன்னாள் பிரதமர்கள் சிமொன் பெரெஸ், யிட்சாக் ரபின் ஆகியோருக்கும் தெரியும் என்பதுடன் அந்த விடயம் வெளிப்படுத்தப்படாமைக்கு பல அரசியல் காரணங்களே காரணம் என்பதையும் இஸ்ரேலிய இராஜதந்திரி , ஒருவர் வெளியிட்டுள்ளார்.*

*அமெரிக்காவின் முதலாவது பெண் இராஜாங்கச் செயலாளரகப் பதவியேற்றுள்ள திருமதி மடலின் அல்பிறைட்டினை இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெட்டன்யாகு சந்தித்தபோதே இச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. திருமதி மடலின் அல்பிறைட்டின் யூதப் பின்னணியும், அவரது குடும்பத்தைச் சேர்ந்த பலர் நாஜிப் படைகளால் கொல்லப்பட்டனர் என்ற செய்தியும் அண்மையில் பரப்பரப்புடன் பத்திரிகைகளில் வெளியாகியது.*


## சீனாவில் மதக் கலவரம்; கஸகஸ்தானில் இருந்து குழுத் தலைவர் பேட்டி

*சீனாவின் Xinjiang மாகாணத்தில் இஸ்லாமியர்கள் தமது உரிமைகளை மீட்பதற்காக ஆயுதம் தூக்கிவிட்டார்கள். அவர்கள் தமது உரிமைகள் கிடைக்கும் வரை தமது ஆயுதத்தைக் கீழே வைக்கமாட்டார்கள் என இஸ்லாமியர்களின் உரிமைகளுக்காக போராட்டம் நடாத்தும் இயக்கத்தின் தலைவர் கஸகஸ்தானில் இருந்து பேட்டியளித்துள்ளார்.*

*சோவியத் ரஷ்யாவில் இரு-ந்து பிரிந்து சென்ற கஸகஸ்தான் மாநிலம் சீன எல்லைப் பிரதேசத்தில் உள்ளது. இம் மாநிலத்துக்கு தப்பி ஓடிய United Revolutionary National Front என்ற இயக்கத்தின் தலைவரே இப் பேட்டியை பத்திரிகைகளுக்கு வழங்கியுள்ளார்.*

*இது குறித்து சீன அரசு விடுத்த அறிக்கையில் சீனாவை உடைக்க விரும்பும் தீய சக்திகளின் தூண்டுதலின் பேரில் உருவான இவ் ஆயுதக் கிளர்ச்சி உடனடியாகவே ஒடுக்கப்பட்டு விட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

KBM கே.பீ.எம் நகை மாளிகை KBM




அனைத்து நாடுகளுக்கான குறைந்த விலை தொலை பேசிச் சேவை

Telephone Cabine

53410863 53410865
53410864 53410855

தொலை பேசிச் சேவைத் தொடர்புகளுக்கு



தொலை பேசி: 01 42.59.31.74

5, Rue Labat, 75018 Paris
Métro: Marcadet Poissonniers

KBM நகை மாளிகை

உங்கள் விருப்பம்போல் தங்க நகைகளை வடிவமைத்துத் தருபவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொஸ்னியத் தலைவரை கவிழ்க்க அமெரிக்கா நிதி உதவி

1995-ம் ஆண்டு சேர்பியத் தலைவர்களான றட்கோ மிலாடிச், றடோவன் கரட்சிக் ஆகியோரை ஓரம் கட்டி விட்டு அமெரிக்காவின் டைய்ரன் விமானப் படைத் தளத்துக்குச் சென்று பொஸ்னிய சேர்பிய சமாதான ஒப்பந்தத்துக்கு கையெழுத்திட்டதன் மூலம் நேட்டோ படைகளை யூகோஸ்லாவியாவில் காலடி வைக்க அனுமதியளித்த சிலோபடன் மிலேச்சவிக்கின் ஆட்சியைக் கவிழ்க்க அமெரிக்கா பல வழிகளில் உதவ உள்ளதாக அமெரிக்கா உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

யூகோஸ்லாவியாவில் நிலைகொண்டுள்ள அமெரிக்க ஜனநாயக பாதுகாப்புக் குழுக்களான National Endowment for Democracy, National Democratic Institute, International Foundation For Electoral System போன்ற அமைப்புகளுக்கூடாகவே இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன.

பத்திரிகையாளர்களுக்கு பயிற்சி, பிரச்சாரத்துக்கான காகிதம், கணனிகள், பத்திரிகை அச்சிடுவதற்கான மை வகைகள் என்பன இதில் அடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு புறமிருக்க அமெரிக்க இராஜதந்திரிகள் யூகோஸ்லாவியாவுக்குள் வர தடைவிதிக்க உள்ளதாக யூகோஸ்லாவியா அறிவித்துள்ளது. யூகோஸ்லாவியாவில் மிலேச்சவிக்கிற்கு எதிரான உதவி அமெரிக்க தூதரகமூடாகவே வழங்கப்படவுள்ளது.

# பாகாப்புப் பணியில் ஜப்பானிய சிலைகள்

ஜப்பானிய சிலை உற்பத்தியாளர் ஒருவர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தக் கூடிய தரமுள்ள சிலைகளை ஐரோப்பாவுக்கு இறக்குமதி செய்ய உள்ளதாக அறிவித்துள்ளார். பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தக் கூடிய சிறந்த வடிவமைப்புக் கொண்ட இச் சிலைகள் பார்ப்பதற்கு உன்மையான மனிதர்களைப் போலவே இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரம் குறைந்த பல் வீனைல் (Poly Vinyl) மூலப் பொருட்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட இச் சிலைகள் ஐரோப்பாவில் பரபரப்புடன் விற்பனையாகலாம் என்றும் பலவீனமானவர்கள், பெண்கள், வயோதிபர்களுக்கு சிறந்த விசுவாசமான செலவு குறைந்த காவலாளியாக இது அமையாலாம் என்றும் விற்பனைப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

# பெண் குழந்தைகள் மீது பாலியல் வன்முறை கிறிஸ்தவ மத குரு மீது குற்றச் சாட்டு

தென் ஆபிரிக்காவில் கறுப்பினத்தவர்களுக்கு குடியியல் உரிமைகள் வழங்கப்பட்ட பின் பல சமூகவியல் பிரச்சனைகள் இன்னும் தீர்க்கப்படாமலே இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டும் வகையில் அண்மையில் வெளியான புள்ளிவிபரங்கள் உள்ளன.

கறுப்பினக் குழந்தைகள் மீது குறிப்பாக பெண் குழந்தைகள் மீது கிறிஸ்தவ மத குருமார் பாலியல் வன்முறை புரிகின்றனர் என்ற கொடுமையான உண்மையை அமெரிக்கப் பத்திரிகையான ஹெரால்ட் ரிபியூன் பேட்டி ஒன்றின் மூலம் அம்பலத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

1994-ம் ஆண்டு பெண்கள் மீதான பாலியல் வன்முறை 7559 ஆக இருந்தது. தற்போது இது 13859 ஆக உயர்ந்துள்ளது.



படத்தில் உள்ள 12 வயதுச் சிறுமியை கிறிஸ்தவ மத குரு ஒருவர் பாலியல் வன்முறைக்குள்ளாக்கியதாகவும் சம்பவத்தை வெளியில் சொன்னால் தாயாரைக் கொலை செய்து விடுவேன் என மிரட்டியதாகவும் குழந்தையின் தாயார் பத்திரிகைகளுக்கு பேட்டியளித்துள்ளார்.

# பர்மாவை ஆசியானில் இணைக்க ஐரோப்பா எதிர்ப்பு

இவ்வருட இறுதிக்குள் ASEAN எனப்படும் தென்கிழக்காசிய நாடுகளின் அணியில் பர்மாவை இணைத்துக் கொள்ள அதில் அங்கம் வகிக்கும் நாடுகளான மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்னாம், பிலிப்பைன்ஸ், வியட்னாம், இந்தோனேசியா, புரூனே ஆகிய நாடுகள் எடுத்த முடிவை தடுக்கும் முயற்சியில் ஐரோப்பிய ஒன்றியம் இறங்கியுள்ளது. கடந்த வாரம் சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசியான் ஐரோப்பிய ஒன்றியம் இணைந்த கலந்து கொள்ளலில் பேசிய ஐரோப்பிய அமைச்சர்கள் பர்மாவில் மனித உரிமைகள் பேணப்படவில்லை; அந்த நாட்டின் மீது ஆசியான் உறுப்பு நாடுகள் அழுத்தம் பிரயோகித்து மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து பத்திரிகைகளுக்கு பேட்டியளித்த பிலிப்பைன்ஸ் வெளிநாட்டமைச்சர் "அது எங்கள் பிரச்சனை எமக்குத் தெரியும்" என்ற தொனியில் பதிலளித்துள்ளார். சிங்கப்பூர் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் சண்முகம் ஜெயக்குமார் பேட்டியளிக்கையில் கடந்த 20 வருட காலத்தில் பர்மா தொடர்பான விடயம் ஆரோக்கியமாக ஆராயப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

இது ஒரு புறமிருக்க பர்மிய ஜனநாயக போராட்ட அமைப்பின் தலைவி அவு சான் சுகி மீதான கட்டுப்பாடுகள் மற்றும் மனித உரிமை மீறல்களைக் காரணம் காட்டி பர்மா மீது பொருளாதாரத் தடை ஒன்றை அமுல்படுத்தலாம் என 16.02.96 சனியன்று அமெரிக்கப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# அமெரிக்காவில் அரசியல் இயக்கத்திற்கு சீனா நிதி உதவி?

அமெரிக்காவில் இயங்கும் Democratic National Comittee என்னும் இயக்கத்திற்கு சீனாவிடம் இருந்து நிதிஉதவி கிடைப்பதாக வோஷிங்டன் போஸ்ட் என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இச்செய்தியை கேள்வியுற்ற அமெரிக்க ஜனாதிபதி அது குறித்து தனது கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளார். அவர் தனது கண்டனத்தில் எமது நாட்டு அரசியல் கட்சிகளுக்கு வேறு நாடு நிதி உதவி வழங்குவதை அனுமதிக்க முடியாது அது ஜனநாயக வழிமுறைகளுக்கு முரணானது எனத் தெரிவித்துள்ளார்.

1996 ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அமெரிக்காவில் உள்ள சீனத் தூதரகம் ஊடாக இந்த நிதி உதவி வழங்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# வாரக் குறிப்பு

### 09.02.97 ஞாயிற்றுக்கிழமை

- பிரான்சில் முதல் தடவையாக தீவிர வலதுசாரிக் கட்சியான இனவாதக் கட்சி மாநகரசபைத் தேர்தலில் அதிகப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றுள்ளது. இனவாதக் கட்சி வெற்றி பெற்ற நான்காவது நகரம் (Vitrolles) இதுவாகும். பிரெஞ்சுப் பாராளுமன்றத் தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெறும் போது இனவாதக் கட்சி அதிக ஆசனங்களைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
- அல்ஜீரியாவில் ஊழல் நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 2000 ஆயிரத்துக்கும் அதிகமான அரச ஊழியர்கள் கைது செய்யப்படுவர் என அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
- பாலஸ்தீனர்களுக்குச் சொந்தமான சிஸ்ஜோர்டானி பிரதேசத்தில் 30 ஆயிரம் பேரைக் குடியமர்த்தும் முயற்சியில் இஸ்ரேல் தீவிரம்.
- சோவியத் ரஷ்யாவின் உளவுப் படையான கே.ஜி.பி யின் முன்னாள் உயர் அதிகாரியும் பொறிஸ் ஜெல்சினின் முன்னாள் பாதுகாப்பு அதிகாரியுமான Korjakov பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு. இவர் ஜெனரல் அலெக்சாண்டர் லெபெட்டின் நெருங்கிய ஆதரவாளர்.

### 10.02.97 திங்கட்கிழமை

- பிரான்சில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள குடியேற்றக் காரர் தொடர்பான சட்ட விதிகளை பகிஸ்கரிப்பதாக 59 சினிமாத் தயாரிப்பாளர்கள் அறிக்கை விடுத்துள்ளனர்.
- சர்வதேச இராணுவச் சந்தையில் கால் பங்கினை பிரித்தானியா வைத்திருப்பதாக 1996-ம் ஆண்டுப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.
- ஜப்பானின் ஒக்கினவா தளத்தில் நிலை கொண்டுள்ள அமெரிக்கப் படைகள் அணுவீச்சுச் சக்தி கொண்ட யூரேனியம் படிவுகளை பூசிய துப்பாக்கி ரவைகளைப் பயிற்சியின் போது பாவித்தமை தவறுதலாக நடைபெற்றது என அமெரிக்கா தெரிவித்துள்ளதுடன் அதனால் ஜப்பானிய மக்களின் சுகாதாரம் பாதிக்கப்படாது எனத் தெரிவித்துள்ளது.

### 11.02.97 செவ்வாய்க்கிழமை

- நேட்டோவை கிழக்கு ஐரோப்பாவுக்கு விஸ்தரிப்பது நிரந்தரமான பதட்ட நிலையைத் தோற்றுவிக்கும் என அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் மடலின் அல்பிரைட் தெரிவித்துள்ளார்.
- தென் கொரியாவின் ஆளும் கட்சியைச் சேர்ந்த இருவர் ஊழல் குற்றத்திற்காக கைது செய்யப்பட்டுள்ளனர்.
- இரகசியமாக வடகொரியாவுக்குச் சென்று வந்த குற்றத்திற்காக தென்கொரியா எழுத்தாளர் Kim Hah Ki இற்கு மூன்றரை வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் வான் எல்லையில் பறக்கும் விமானங்களுக்கு மோதல் தவிர்ப்பு கருவி (Anti Collision Radar) பொருத்தப்பட்டிருக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்படுகின்றது.

### 12.02.97 புதன்கிழமை

- பிரான்சில் கொண்டுவரப்பட்டுள்ள குடியேற்றச் சட்டத்தை 155 எழுத்தாளர்கள் கண்டித்து அறிக்கை விடுத்துள்ளனர். இதே சட்டத்தை முன்னர் 59 படத் தயாரிப்பாளர்களும் கண்டித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.
- பிரான்சும், ஜேர்மனியும் தமது வரவு செலவுத் திட்டத்தில் உள்ள பற்றாக்குறையை குறைக்க முடியாமல் திண்டாடுவதாக பொருளாதாரக் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.
- பல்கேரிய பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 19-ம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடைபெறும் என ஜனாதிபதி அறிவித்துள்ளார். பதவியில் இருந்த முன்னாள் கம்யூனிஸ்டுக்களின் அரசை கடந்த வருடம் பதவிக்கு வந்த ஜனாதிபதி கலைத்துள்ளார்.

### 13.02.97 வியாழக்கிழமை

- பிரான்சில் அடுத்த வருடம் நடைபெற இருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் 200-க்கும் அதிகமான பாராளுமன்ற ஆசனங்கள் தீவிர வலதுசாரிக் கட்சியான இனவாதக் கட்சியின் செல்வாக்கு மிக்க பிரதேசங்களாக இருக்கும் என கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.
- சவூதி அரேபியாவுக்கு F16 வகைப் போர்விமானங்களை அமெரிக்கா விற்பனை செய்ய உள்ளதை இஸ்ரேல் வன்மையாகக் கண்டித்துள்ளது. இராணுவ பலச் சமநிலையைப் பாதிக்காத வகையில் இவ் விற்பனை ஒப்பந்தம் அமையும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.
- பிரித்தானிய இராணுவ வீரர் ஒருவர் ஐ.ஆர்.ஏ சினைப்பர் தாக்குதலுக்கு பலியான சம்பவம் அயர்லாந்து எல்லைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

### 14.02.97 வெள்ளிக்கிழமை

- ஐரோப்பாவுக்கு தனது முதலாவது உத்தியோக பூர்வ சுற்றுப்பயணத்தை ஆரம்பித்துள்ள அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மடலின் அல்பிரைட் பத்திரிகைகளுக்கு பேட்டியளிக்கையில் ஐரோப்பாவில் அமெரிக்காவின் கால்கள் பலமாக பதிக்கப்படவேண்டிய அவசியம் உள்ளது எனத் தெரிவித்துள்ளார். இவர் இரண்டாம் உலகப் போரால் பாதிக்கப்பட்டு அமெரிக்காவிற்கு அகதியாகச் சென்ற ஐரோப்பிய யூதக் குடும்பத்தைச் சேர்ந்தவர்.
- பிரான்சில் குடியேற்றக்காரர்கள் தொடர்பான விடயத்தில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே முரண்பாடு இருப்பது பத்திரிகைகளில் வெளியாகியுள்ளது.
- சீனத் தலைவர் டெங் சியாவோ பெங் ஆபத்தான நிலையில் இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பகுக் Apple Daily தெரிவித்துள்ளது.
- இத்தாலியில் உருவாக்கப்பட்டுள்ள புதிய சட்டமொன்றின் படி வெளிநாட்டவர்களும் உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

### 15.02.97 சனிக்கிழமை

- ஜெனிவாவில் கூடியுள்ள 79 நாடுகள் தொலைத் தொடர்பு சேவையை தனியார் மயமாக்கி சர்வதேச சந்தைக்கு திறந்து விடுவதுபற்றி ஆராய்கின்றன.
- கியூபாவில் சி.என்.என் எனப்படும் அமெரிக்கத் தொலைக்காட்சிப் பிரிவினர் தமது அலுவலக நிர்மாண வேலைகளை ஆரம்பித்துள்ள வேளையில் பத்திரிகையாளர் மீது கட்டுப்பாடுகள் அதிகரித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.
- பிரெஞ்சுப் பிரதமர் அலென் ஜுப்பேயின் ஆலோசகர் Guy Sorman தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் பேட்டியளிக்கையில் பிரெஞ்சு உள்நாட்டமைச்சரின் குடியேற்ற வாதிகள் தொடர்பான பிரேரணையில் ஒரு வரி "அதிகமாக உள்ளது" எனத் தெரிவித்துள்ளார். புதிய குடியேற்ற சட்டம் அறிஞர்கள், கலைஞர்கள், சட்ட நிபுணர்களின் கண்டனத்துக்குள்ளாகி வருகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புகலிட நிகழ்வுகள்

# த.பு.வா.க. அனைத்துலக ஒருங்கிணைப்பாளர் இத்தாலியில் சுற்றுப்பயணம்

சர்வதேசம் எங்கும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, கடந்த 30-ம் திகதி இத்தாலி பலேர்மோ நகரிற்கு வருகை தந்திருந்த தமிழர் புனர்வாழ்வுக்கழக அனைத்துலக ஒருங்கிணைப்பாளர் கலாநிதி. ஜெ. மகேஸ்வரன் அவர்கள் மூன்று நாட்கள் பல்வேறு சந்திப்புக்களில் கலந்து கொண்டார். இத்தாலி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் ஒழுங்கு செய்திருந்த செயற் திட்டத்தின்படி சிசிலித் தீவின் மாநில, மாவட்ட மாநகர முதல்வர்களையும், சில அரச அதிகாரிகளையும் சந்தித்த அவர், தமிழீழத்தில் சிறீலங்கா அரசின் பொருளாதார, மருந்துத் தடைகளாலும், சிறீலங்கா முப்படைகளினதும் வெறியாட்டத்தினாலும் அல்லலுறும் எமது மக்களின் துன்ப நிலைபற்றியும், இதற்காக நிவாரண உதவிகள் வழங்க வேண்டிய தேவை குறித்தும் எடுத்து விளக்கினார். முதல்வர்களது உதவியையும், ஆதரவையும் கேட்டார்.

30.01.97 அன்று மாலை 18..30 மணிக்கு மாவட்ட முதல்வர் கலாநிதி. பூச்சோ பியேத்திரோ (Dott.Pucco Pietro) அவர்களை அவரது செயலகத்தில் (Pallazzo Comitini) சந்தித்து மேற்படி நிலையைத் தெரிவித்தார். அதற்கான நடவடிக்கைகள் எடுப்பது பற்றி கவனத்தில் எடுப்பதாக முதல்வர் உறுதியளித்தார்.



பின்பு இரவு 21.00 மணியளவில் பலேர்மோ வாழ் தமிழ் மக்களுடன் கலந்துரையாடி தாயகத்தில் எமது மக்களுக்கான நிவாரணப் பணிக்கான நிதித்தேவையின் அவசியத்தையும், பங்களிப்பைப்பற்றியும் கேட்டுக்கொண்டதோடு, தற்போது வன்னி மண்ணில் தமிழர் புனர் வாழ்வுக் கழக செயற்பாடுகளையும் விளக்கினார். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் புதிய தலைவர் திரு. கணேசகுமாரன் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.

மறுநாள் 31.01.97 அன்று காலை 9.30 மணிக்கு மாநில முதல்வர் திரு.புறவின்சானோ யூசேப்பே (Provienzano Giusppe) அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தார்.

அன்றைய தினம் பி.ப 16.30 மணிக்கு பலேர்மோ மாநகரசபைத் தலைமைச் செயலகமான Palazzo Delle Aquilie இல் மாநகரச முதல்வர்திரு.லெய லூக்கா ஓர்லாந்தோ (Leo Lucea Orlando) அவர்கள் சபை மண்டபத்துள் ஒழுங்கு செய்து தந்த பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார். அங்கு வந்திருந்த பத்திரிகையாளர், பல்கலைக்கழக மாணவர்கள், அரச அதிகாரிகள் மற்றும் இத்தாலிய மக்களுக்கு தமிழீழத்தின் தற்போதைய நிலைபற்றி கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விளக்கம் அளித்ததுடன் வத்திக்கான் நகரில் ஒலிபரப்பப்படும் வானொலிச் சேவையின் தமிழ் பகுதிக்கு விசேட செவ்வி ஒன்றும் வழங்கினார்.

தமிழர் புனர்வாழ்வுக்
கழகம், இத்தாலி.

# பாரிஸ் உதைபந்தாட்ட கழகங்களின் கலந்துரையாடல்

பாரிசில் உள்ள தமிழ் உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையேயான கலந்துரையாடல் ஒன்று மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்க விளையாட்டுக் கழகத்தினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை (09.02.97) மாலை திரு. கணேசலிங்கம் தலைமையில் நடாத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பத்திற்கும் மேற்பட்ட விளையாட்டுக்கழகங்களின் சார்பில் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். விளையாட்டுக் கழகங்கள் தங்களுக்கு இடையே வளர்த்துக்கொள்ள வேண்டிய நட்புறவு, ஒத்துழைப்பு ஆகியனவே இக் கலந்துரையாடலின் சாராம்சமாக இருந்தது.

விளையாட்டுக் கழகங்களின் சார்பில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் ஒவ்வொருவரும் தத்தமது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் ஏனைய கழகங்களின் உறுப்பினர்களோடு கலந்து விவாதித்தனர்.

குறிப்பாக உதைபந்தாட்டப் போட்டிகளில் நடுவர்களின் தீர்ப்புகள் தொடர்பாக எழும் வாதப் பிரதிவாதங்கள் குறித்தும் ஆராயப்பட்டன. ஈழத் தமிழ் உதைபந்தாட்டச் சம்மேளனத் தலைவர் திருஅந்தோனிப்பிள்ளை அவர்கள் அவற்றிற்கான தமது விளக்கங்களை அளித்தார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட விடுதலைப் புலிகளின் பிரெஞ்சு பணியக பொறுப்பாளர் திரு.வே. மனோகரன் அவர்கள் இன்றைய விளையாட்டுக் கழகங்கள் எதிர்காலத்தில் எமது சமூகத்தின் ஒரு அடையாளமாக புகலிட நாடுகளில் செயற்படும் நிலை கூட எழலாம் என்பதால், நாம் இப்போதிருந்தே இளைய தலைமுறையினருக்கு ஆரோக்கியமான விளையாட்டு துறையை வழிகாட்ட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர்.

தேனீர் விருந்துபசாரத்துடன் கலந்துரையாடல் நிறைவுபெற்றது. இக் கலந்துரையாடலுக்கு வழி சமைத்துக் கொடுத்த மகாஜனாவின் முன் மாதிரியை அனைவரும் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வாழாத நாடே உலகிலில்லை ஆனால் தமிழருக்கென்றொரு நாடில்லை

வெகு தூரத்திலுள்ள சுவிற்சர்லாந்து நாட்டிலிருந்து நான் எமது வாழ்த்துக்களையும் உணர்வுகளையும் கொண்டு வந்துள்ளேன். தமிழ் ஈழத்திலுள்ள எமது சகோதரிகள் உணவு, உடை, மருத்துவ, கல்வி, இருப்பிடவசதி இல்லாமல் துன்புறுவதை நாங்கள் கவலையுடன் அவதானித்துக் கொண்டிருக்கிறோம். அங்கு நிகழும் கொலை, கற்பழிப்பு, ஆட்கடத்தல், காணாமல் போதல் போன்ற கொடுமைகள் எம்மை வேதனைக்குள்ளாக்குகின்றன. அதே வேளை இவர்கள் சிங்கள பௌத்த ஆட்சியின் பிடியிலிருந்து விடுபட தமிழீழ மக்கள் உறுதியுடன் போராடுவதைக் கண்டு வியப்புடன் பாராட்டுகிறோம். தங்கள் சகோதர சகோதரிகள் சுதந்திரமாக வாழ தம் இன்னுயிரைத் தியாகம் செய்து உயிர் நீத்த மாவீரர்களுக்கு நாம் தலை வணங்குகிறோம். இப்போது பாட்டாளி மக்கள் கட்சி சென்னையில் நடத்திய ஈழத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றி திருமதி மட்லின் மைக்கல் கூறினார். அவர் அங்கு மேலும் பேசுகையில்

கடுமையான தணிக்கை மூலம் வடகிழக்கில் என்ன நடக்கிறது என்பதை அறியமுடியாத சர்வதேச சமுதாயத்திற்கு நாம் உண்மைகளை தெரிவிக்க வேண்டும். இளம் பெண்கள் பிடிக்கப்பட்டு கற்பழிப்பு, கொலை செய்யப்படுகிறார்கள். இதற்கு கிருஷாந்தி குமாரசாமி என்னும் யுவதியின் கற்பழிப்பும் கொலையும் சமீபத்திய உதாரணமாகும். துரதிர்ஸ்டவசமாக இவர் ஒருவர் மட்டும்தான் படைகளின் அக்கிரமத்திற்கு ஆளானவரல்ல. வெளியே தெரியப்படாத வேறு பலருக்கு இவ்விதம் கொடுமைகள் நடந்ததுண்டு.

உலகெங்கும் உள்ள நாடுகளில் சுமார் 150,000 ஈழத் தமிழர்கள் வாழ்கிறார்கள். ஆனால் தமிழர்களுக்கென ஒரு சொந்த நாடு இல்லை.

தமிழீழ மக்களின் போராட்டம் நீதிக்கானதும் சமத்துவத்துக்கானதுமாகும். இது சிங்கள பௌத்த ஆட்சிக்கெதிரான ஒரு சட்டபூர்வமான போராட்டம். ஒரு பகுதி மக்கள் இன்னொரு பிரிவினையை ஆளமுடியாது என்று கூறும் போராட்டம்.

தமிழர்களைக் கொல்ல எடுத்துச் செல்லப்படும் ஆயுதங்களை பௌத்த பிக்குகள் ஆசீர்வதிப்பார்கள் என நான் கேள்விப்பட்டேன். பௌத்த பிக்குகள் சிறு இலையானைக் கூட கொல்வது பாவம் என்பவர்கள். ஆனால் அவர்களுக்கு தமிழரின் உயிர் ஒரு இலையானின் உயிரை விட பெறுமதி குறைந்ததாக உள்ளது.

## டென்காக் நகரில் தமிழீழ உணர்வலைகள்

கடந்த 19.01.97 அன்று இந்திய அரசின் சதியால் விதையாகிப்போன மாவீரன் கேணல் கிட்டுவினதும் சக ஒன்பது மாவீரர்களினதும் 4-ம் ஆண்டு நினைவு நிகழ்வு நெதர்லாந்தின் டென்காக் நகரில் மிகவும் உணர்வு பூர்வமாக நடைபெற்றது. தமிழீழ விடுதலைப்புலிகளின் நெதர்லாந்துக்கிளைப் பொறுப்பாளர் அருமைநாயகம் அவர்கள் மாவீரர் கேணல் கிட்டுவின் உருவப் படத்திற்கும் ஒன்பது மாவீரர்களுக்கும் தீபம் ஏற்றி இந்நினைவு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இந் நினைவு நிகழ்வின் போது மாவீரன் கேணல் கிட்டு வெளிநாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் இருந்து சில பகுதிகள் வீடியோ தொலைக்காட்சியில் போட்டு காண்பிக்கப்பட்டன. தமிழீழத்தின் தற்போதைய உணர்வுகளைப் பற்றிய கருத்தரங்கும் நடைபெற்றது. இக் கருத்தரங்கின் போது நெதர்லாந்தில் உள்ள தமிழ் மக்கள் தற்போது தமிழீழ போராட்டத்துக்கு ஆற்றவேண்டிய பணிகள் உறுதி செய்யப்பட்டன.



## ‘ஓயாத அலைகள்’ பிறீமனில் ஏற்படுத்திய சாதனை !

ஜேர்மனியில் பிறீமன் நகரில் முல்லைச் சமர் ‘ஓயாத அலைகள்’ பெரும் சாதனையொன்றை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 09.02.97 அன்று வெண்திரையில் காட்டப்பட்டபோது ஏராளமான மக்கள் திரண்டனர். மண்டபத்தில் இருந்த ஆசனங்களை விட கூடுதலான ஆசனங்கள் அதிகரித்தும் மக்கள் தொகையை கட்டுப்படுத்த முடியவில்லை

நின்று கொண்டேனும்' முல்லைச் சமரை பார்க்க அனுமதியுங்கள் என பலர் கேட்டவண்ணம் இருந்தனர். தமிழ் மக்களின் ஆர்வத்தைக் கண்டு மண்டபத்தின் இரு கரைகளிலும் நிற்க சிலர் அனுமதிக்கப்பட்டும், மேலும் பலர் வெளியே நின்றனர். முல்லைச் சமரைப் பார்க்காமல் இங்கிருந்து நகரமாட்டோம் என அவர்கள் அன்புடன் கேட்டுக்கொண்டனர்.

மீண்டும் ‘முல்லைச் சமர்’ மாசி மாதம் 23-ம் திகதி காட்டப்படும்! அப்போது நீங்கள் பார்க்கலாம் என உறுதி மொழி அளிக்கப்பட்டதையடுத்து சோர்ந்த முகத்துடன் பலர் திரும்பிச் சென்றதைக் காணக் கூடியதாக இருந்தது. பிறீமன் தமிழ் மக்களிடையே இது போன்றதொரு ஆர்வம் முன்னெப்போதும் ஏற்பட்டதில்லை.

(ஆர். வி. வரதராஜா)

## உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஆசிரியர்களுக்கான ஒன்றுகூடல்

உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு சேவையினரால் நடாத்தப்படும் தமிழ் பாடசாலை ஆசிரியர்களுக்கான வருடாந்த ஒன்று கூடல் ஒன்று அடுத்த மாதம் 09.03.97 ஞாயிறன்று சூரிச்சில் நடாத்தப்படவுள்ளது.

இந்த ஒன்று கூடலில் தமிழ் பாடசாலை ஆசிரியர்களும், பாடசாலைப் பொறுப்பாளர்களும் கலந்து கொள்ளும் போதிலும் தமிழ் பாட்சாலைகளில் கல்வி கற்பிக்காது தங்கள் வீடுகளில் குறைந்தது ஏழு மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும் கலந்து கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தமக்குரிய விண்ணப்பங்களை 01.03.97 சனிக்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

உ.த.ஒ.குழு. கல்விச்சேவை

**Saiva Thamil Sangam,**

Wehntaler Str-293, 8046 Zurich.

**விபரங்களுக்கு: (01) 4621349, (01) 3622755, (089) 4052209**

## உலகத் தமிழர் இயக்கம் ஜேர்மன் கிளையின் கல்விப்பணியின் வெளியீடுகள்

உலகத்தமிழர் இயக்கம் - ஜேர்மனி கல்விப்பணியை ஆரம்பித்து ஜேர்மனியெங்கும் பரவலாக 98 தமிழாலயங்களை நடாத்தி ஆயிரக்கணக்கான பிள்ளைகளுக்கு தமிழறிவையூட்டி வருகின்றது தெரிந்ததே. வெளிநாட்டில் வாழும் பிள்ளைகளின் நிலைப்பாட்டை கவனத்திற் கொண்டு அவர்கள் இலகுவாக கற்கும் வகையிலும் உளவியல் ரீதியான மனவளர்ச்சி பெறும் வகையிலும் பாட நூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

உலகத்தமிழர் இயக்கங்களால் வெளியீடு செய்யப்பட்டு தமிழாலயங்களில் பயிற்றுவிக்கப்படும் பாடநூல்கள் யாவயும் அனைவரும் பெற்றுக் கொள்ளலாம். இதற்காக வெளிவாரி மாணவர்கள் தங்களுக்கு அருகாமையில் உள்ள தமிழாலயங்களிற் பாட நூல்களைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.


**பிரான்ஸ்:**

**லியோனில்:**

**முல்லைப் பெருஞ்சமர் - முல்லையை மீட்ட**

**ஓயாத அலைகள்**

**காலம்:** 23.02.1997 ஞாயிறு பி.ப 3.00 மணி

**இடம்:** 13 RUE BONY, 69004 CROIX ROUGE.

மேலதிக தொடர்புகட்கு: 04 78 80 08 14

**சாந்தினி உணவகம்**

அறுசுவை உணவுவகைகளை உடனுக்குடன் தயாரித்து வழங்குபவர்கள்!! திருமணம், பிறந்தநாள் கொண்டாட்டங்களுக்கு தேவையான சாப்பாட்டு வகைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்!

| | |
|---|---|
| * மரக்கறிச் சாப்பாடு (5 மரக்கறி, பப்படம், மிளகாய், பாயாசம்) (50 சாப்பாடுகளுக்கு மேல்) | 16F |
| * பிரியாணி (ஆடு, மாடு, கோழி) | 19F |
| * பிறைட் றைஸ் | 20F |



விரைவில், வாடிக்கையாளர்கள் வசதி கருதி மிகக் குறைந்த விலையில் உணவு வகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

**RESTAURANT SHANTHINI**

10, Rue Labat, 75018 PARIS.

M°: Marcadet Poissonniers - Tel: 01 42 58 71 19


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# "அகத்திற்கு விடுதலை தேடு-பெண்ணே புறத்திற்கு வேண்டிப் பயனில்லை"

எமது சமூகத்தில் ஒரு பெண் வகிக்கும் பங்கு பல பரிமாணங்களைக் கொண்டது. தாயாக, மனைவியாக, நண்பியாக, சகோதரியாக, சுயதொழில் முயற்சியாளராக, மேலதிகாரியாக, குடும்பத் தலைவியாக, இதற்கும் மேலாக ஒரு படைப்பாளியாக என அனைத்து நிலைகளிலும் நின்று இச்சமூகத்திற்கு பணி புரிபவள் பெண். ஒரு பெண் எப்போதுமே முழுமையானவளாக, முக்கியமானவளாக, மிகுந்த உறுதிப்பாடு கொண்டவளாக விளங்குகிறாள். அறிவியல் ரீதியில் நோக்கினும் ஆண்களை விட பெண்ணின் உயிரியலமைப்பு சமநிலைத்தன்மை வாய்ந்ததாக கருதப்படுவதனால் அவளின் உணர்வுகளும் சமநிலையில் இருக்கின்றன. இதனால் தான் உறுதி, பதற்றமின்மை, நிதானம், யதார்த்தத்துடன் ஒத்துப்போகும் தன்மை என்பன ஆணைவிட பெண்ணிடம் கூடுதலாக உண்டு. இதற்கும் மேலாக ஒரு குடும்பத்தை உருவாக்கும் பணியில் முக்கியமானவள் பெண்ணே. இந்த உயரிய பண்புகளை சமுதாய நலன் நோக்கி ஒரு பெண் திசை திருப்புவாளாயின் இன்று வீடிழந்து, சொத்திழந்து, தமது உயிர்ப்பையே சிறிது சிறிதாக இழந்து கொண்டிருக்கும் எமது சமூகத்தை அழிவின் விளிம்பிலிருந்து பாதுகாக்க அவளால் முடியும். அந்நிய ஆக்கிரமிப்புக்குள் சிறிது சிறிதாக அகப்பட்டு அல்லப்பட்டு, அதிலிருந்து தப்பியோடி திசைக்கொன்றாக சிதறி பலவித உளவியல் தாக்கங்களுக்காளாகி பாதிப்படைந்து கொண்டிருக்கும் எமது சமூகத்திற்கு இன்று தேவை அன்புடன் கூடிய அரவணைப்பு. சோர்ந்து, விரக்தியின் விளிம்பில் நிற்கும் சமூக அங்கத்தவர்களை மனைவியாக, தாயாக என்று அனைத்து நிலைகளிலும் நின்று அரவணைக்க வேண்டிய பாரிய கடமை எமது பெண்ணினத்திற்கு உண்டு.

பெண்ணானவள் தனது முக்கியத்துவத்தை தான் உணர்ந்து, சமூகத்தின் இன்றைய தேவையை கருத்தில் கொண்டு அதற்கேற்ற வகையில் தனது குடும்பத்தின் உயிர்ப்பு இழக்காத வகையில் செயற்படுவாளாயின், இச்சமூகம் நிமிர்வடைந்து கால ஓட்டத்திற்கமைய வாழ்வின் சவால்களை தீரமுடன் எதிர்கொள்ளும் என்பது திண்ணம்.

# பெண்மைப் பிணியியலும் நீரிழிவும்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

## நீரிழிவு தரும் பெண்மைச் சிக்கல்கள்

பெண்மைப் பிணியியல் தொடர்பாக நாம் வைத்தியரை அணுகும்போது அங்கு கேட்கப்படும் கேள்வி உங்களுக்கு நீரிழிவு உள்ளதா என்பதாகவே அமையும். பெண்மைக் கோளாறுகளுடன் மட்டுமல்லாது. இதயம், சிறுநீரகம், கண், பல், இனப்பெருக்கம், நரம்புமண்டலம் தொடர்பான நோய்களுடன் கூட நீரிழிவு சம்பந்தப்பட்டுள்ளது. இவ்வாறான நிலமைகளை சுருக்கமாகப் பார்ப்போம்.

## தாம்பத்தியம் - மலட்டுத்தன்மை

நீரிழிவின் தன்மை கூடுமானால் உடலுறவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். தாம்பத்தியத்தின்போது ஒரு விருப்பமற்ற நிலையே இங்கு மேலோங்கி இருப்பதால் குடும்ப வாழ்வில் சில விரிசல்கள் கூட ஏற்பட இடமுண்டு. எனவே, தாமதிற்காது நீரழிவிற்கான சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும். இந்த நிலையை நீடிக்க விட்டால் மலட்டுத் தன்மைகூட உருவாக வாய்ப்புண்டு.

## கர்ப்பகால நீரிழிவு

நீரிழிவு நோய்க்காளான ஒரு பெண் கர்ப்பமடையும் போது இந் நோய் மிகவும் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டியது அவசியம். இல்லாவிடில் கருச்சிதைவு ஏற்பட வாய்ப்புண்டு. அல்லது உடல் ஊனமுற்ற, மூளை வளர்ச்சி குன்றிய, அதிக எடையுள்ள குழந்தைகள் பெற வாய்ப்புண்டு. கருவைச் சுமக்கும் தாய் கூட அடிக்கடி தொற்று நோய்ப் பீடிப்பிற்கும் ஆளாக வேண்டி நேரிடலாம்.

எனவே, கர்ப்ப காலத்தில் நீரிழிவு ஏற்படும் பெண்கள் அதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியது அவசியம்.

## மூளை பாதிப்பு

நீரிழிவு நோயினால் மூளையின் ஒரு பகுதி பாதிக்கப்பட்டால் பக்கவாதம் (STROKE) வர வாய்ப்புண்டு.

## சிறுநீரகம்

சரியான முறையில் கட்டுப்படுத்தப்படாமல் நீரிழிவு நோயானது 10 வருடங்களுக்கு மேல் நீடித்தால் சிறுநீரகங்கள் பாதிப்படைய வாய்ப்புண்டு.

## கண்களின் பாதிப்பு

நீரிழிவு நோய்களுக்கு விழிப்படலம் பாதிக்கப்படலாம், ஏனெனில் கண் புரையும் கண்ணிற்குச் செல்லும் இரத்த நாளங்களும் பாதிப்படைவதே இதற்குக் காரணமாகும்.

## இருதயப் பாதிப்பு

நீரிழிவு உச்ச நிலமையை அடையும்போது மாராடைப்பு ஏற்படும். இந்த மாரடைப்பு உயிருக்கு ஆபத்துகளை விளைவிக்கும் கொடிய தன்மையைக் கொண்டிருப்பதால் நீரிழிவினை கட்டுப் படுத்தி வைத்திருப்பது மிகவும் அவசியம்.

இதயத் தசைகளுக்கு இரத்தத்தினை செலுத்தும் தமனிகளின் பக்கமாக படியும் ஒரு வகை வீழ்படிவினால் ஏற்படும் மாரடைப்புகளுக்கு நீரிழிவே இரண்டாம் இடத்தை வகிக்கிறது. (முதலாம் இடம் புகை பிடிப்பவர்களுக்கு ஏற்படும்)

நீரிழிவினால் ஏற்படும் மாரடைப்புகளில் வலி ஏற்படாமலே மரணம் ஏற்படுவது குறிப்பிடத்தக்கது.

## கை, கால்கள், பாதிப்பு

நீரிழிவினால் நரம்புகள் பாதிக்கப்படுவதால் கால், கை எரிச்சல் நடக்கும்போது வேதனை ஆகியன ஏற்படும். காலில் புண் ஏதாவது ஏற்பட்டால் விரைவில் குணமாகாத நிலை ஏற்படும். கவனிக்காது விட்டால் காலை அகற்ற கூடிய நிலை கூட எழலாம்.

தொகுப்பு: வர்ஷிகா-வைஷ்ணவி

# விழிப்புலனற்ற சகோதரிகளின் நம்பிக்கை நட்சத்திரம்



தமிழகத்தின் தலைசிறந்த கண் வைத்தியர்களில் ஒருவரான ஜோசப் ஞானாதிக்கத்தின் புதல்வி திருமதி பிரியா. தியோடர்.

இவர் விழிப்புலனிழந்த பெண்களுக்காக ஒரு காப்பகத்தை நடாத்தி வருகின்றார். இவ்வாறான ஒரு இல்லத்தை இவர் ஆரம்பிப்பதற்காக பல தரவுகளை இந்தியா முழுவதும் சென்று திரட்டியதுடன் அதன் அடிப்படையிலேயே இந்த இல்லமும் உருவாக்கப்பட்டது.

ஆரம்ப நாளன்று விழிப்புலனிழந்த 50 பெண்கள் இல்லத்தில் இணைந்து கொண்டது திருமதி பிரியாவின் உழைப்பிற்கு கிடைத்த முதல் வெற்றி எனலாம். இவர்களில் அநேகர் கிராமப்புற பின்னணியினைக் கொண்டவர்கள். பொதுவாக இந்த நிலையத்தில் சேரும் பெண்களுக்கு பயிற்றும் வகையில் பல துறைகள் இங்கு கற்பிக்கப் படுகின்றன. பயிற்சிக்காலம் மூன்று ஆண்டுகளாகும். பயிற்சி முதலில் அவர்களுக்கான சுய தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதுடன், பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு சேர வேண்டிய பணத்தினையும் வங்கியில் வைப்பிட்டு அதனை அப்பெண்களின் எதிர்கால வாழ்விற்கு உறுதுணை புரிய வழிசெய்வதும் இந்த நிலையத்தின் சேவையாகிறது.

தற்போது இந்த இல்லத்தில் கணணித்துறையும் கற்பிக்கப் படுகிறது. இசை ஆர்வமுள்ளவர்களுக்கு அத்துறை பயிற்றுவிக்கப்படுவதுடன் வானொலி வாய்ப்புக்களும் கொடுக்கப்படுகின்றன.

விழிப்புலனிழந்தவர்களுக்கு பார்வை மீளக் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதும் இந்த காப்பகத்தின் நோக்கமாகும். உதாரணமாக பிரியா தியோடரின் பெற்றோரின் கண்கள் கூட இரு பெண்களுக்கு பொருத்தி பார்வை மீளக் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது.

இந்த இல்லத்தில் தங்கியிருக்கும் பெண்கள் எல்லாம் திருமதி பிரியாவை அம்மா என்று தான் அழைக்கிறார்கள். அது உண்மையில் பொருத்தம் அல்லவா?


# Siva Thaya Tamil Printers

தொடர்புகளுக்கு:
Mr. K. SIVA
HAUPT STR - 13
6313 MENZINGEN.
(ZUG, SWITZERLAND)
T.P: 0041/ 41/755 31 92
Fax: 0041/ 41/ 755 31 92


உங்கள் திருமணம், பிறந்தநாள், பூப்புனிதநீராட்டுவிழா, மற்றும் சகலவித அழைப்பிதழ்களும் இலங்கை, இந்தியா, இலண்டன் மற்றும் சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட மிக அழகான, நவீன, தரமான அழைப்பிதழ்களில் குறித்த நேரத்தில் மிக விரைவாக செய்து தரப்படும். இத்துடன் வாழ்த்து மடல்கள், சகல பிரசுரங்கள், விளம்பரங்கள், விலைப்பட்டியல்கள், புத்தகங்கள் போன்றனவும் எம்மிடம் பதிப்பிக்கலாம்.

உங்கள் திருமணம், பிறந்தநாள், பூப்புனிதநீராட்டுவிழா, மற்றும் சகலவித அழைப்பிதழ்களுக்கும் எம்மிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டால் நாம் இலவசமாக Model Cards உங்களுக்கு அனுப்பி, Fax or T.P மூலமாக விபரங்களை பெற்றுக் குறிப்பிட்ட தவணையில் உங்களுக்கு அழைப்பிதழ்களை பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைப்போம்.

அவசர திருமண அழைப்பிதழ்கள் மேலதிக கட்டணமின்றி 24 மணித்தியாலத்தில் செய்து தரப்படும்.

அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!
மேற்குறிப்பிட்ட நாடுகளில் இருந்து தருவிக்கப்பட்ட தரமான அதிநவீன அழைப்பிதழ்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வி சு. திவ்வியாவையும், செல்வன் கபிலன் லோகேஸ்வரனையும் பல்கலையும் கற்று சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## உங்கள் கை வண்ணம்

### இவ்வாரக் கைவண்ணங்கள்

செல்வன் ஆதவன் நடனபாதம்
வயது: 9 (28.11.1987)
இடம்: 7400 Herning, Danmark.




பசு

பசு பால் தரும்
பசு பல நிறங்களில் உண்டு
பசு உறவினரை கண்டால் கத்தும்
பசு புல் மேயும்
பசுவின் பால் வெள்ளை நிறம்
பசுவிற்கு நான்கு கால்கள் உண்டு
பசுவிற்கு வால் உண்டு
பசுவிற்கு இரண்டு செவிகள் உண்டு



செல்வி. வாசுகி கெந்தேஸ்வரன்
வயது: 07 (31.10.1989)
இடம்: காரைநகர்
தற்போதைய வதிவிடம்: பாரிஸ், பிரான்ஸ்



சிங்கம்

சிங்கம் காட்டில் வாழும் மிருகம்,
இது மற்றைய மிருகங்களை வேட்டை
-யாடி உண்ணும்,
சிங்கத்தை காட்டு ராஜா என்றும்
அழைப்பார்கள்.
ஆண் சிங்கத்தின் பிடரியில் மயிர்கள்
உண்டு, இது அழகானது.

இம்மடலை எழுதி அனுப்பியவர்:
செல்வி. சுதர்ஷினி திருச்செல்வம்
வயது: 14, இடம்: Danmark

## மகாராணிக்கு ஒரு மடல்...

*இரண்டு ஆடுகள்
அக்கரையிலும் இக்கரையிலும்
நின்றன
ஒன்றின் நிறம் வெள்ளை
ஒன்றின் நிறம் கறுப்பு
இருவருக்குமிடையே ஒரு ஆறு
அந்த ஆற்றின் மேலே ஒரு பாலம்
ஆடுகள் இரண்டும்
பாலத்தின் மேல் ஏறின
ஆற்றைக் கடப்பதற்காக
இரு ஆடுகளும்
பாலத்தின் மத்தியை அடைந்தன
இருவரில் ஒன்று கூட விட்டுக்
கொடுக்கவில்லை
முரண்பாடு எற்பட்டது
முடிவில் இரு ஆடுகளும்
ஆற்றில் விழுந்து மாண்டன
இரு ஆடுகளும் ஒருவருக்கு ஒருவர்
விட்டுக் கொடுத்திருந்தால்....
மகாராணி!
இவர்களைப்போல்தான்
இவ்வுலகில் வாழும் மனிதர்கள்
இதை உணர்த்தவே
இந்த சிறு மடலை எழுதுகிறேன்*



இக் கதையை எழுதி அனுப்பியவர்
செல்வன் வி.சசிகரன்
வயது: 10
இடம்: 31100 Toulouse, France.

### நான் ரசித்த மிருகக்காட்சிச்சாலை

நானும் எனது பாடசாலை மாணவர்களும் மிருகக் காட்சிச்சாலை பார்க்கப் போனோம். அங்கு நாங்கள் கண்ணுக்குக் குளிர்ச்சியான மயில், யானை குரங்கு, சிங்கம், புலி, பாம்பு, கோழி, வாத்து, புறா, குதிரை என்பவற்றைப் பார்த்து மகிழ்ந்தோம்.

அங்கு நாங்கள் கண்ட காட்சிகளாவன, மயில் சிறகு விரித்து நன்றாகவும் அழகாகவும் ஆடியது. யானை எங்கள் முன் வந்து தும்பிக்கையால் வணக்கம் சொன்னது. குரங்கு மரத்தில் தாவித்தாவி சென்றது. நாங்கள் குரங்குக்கு கொக்காக்கோலா கொடுத்தோம்.

கண்ணாடிப் பெட்டிக்குள் பாம்பு இருந்தது. இத்துடன் இன்னும் பலவற்றையும் எனது நண்பர்களுடன் பார்த்து மகிழ்ந்தோம்.


## தெரிந்து கொள்ளுங்கள்



### நீலக் குருவிகள்

படத்தில் காணப்படும் இந்த அழகிய நீலக்குருவிகளுக்கு புளூ பிளை கேட்சர் என்று பெயர். இவை பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவைகளாகும். உலகின் அபூர்வமான பறவைகளில் இதுவும் ஒன்று. மிக அரிதான இந்த நீலக்குருவிகள் சிறு சிறு கூட்டமாக சேர்ந்து வாழ்கின்றன. இவைகளுக்கு கூடு கட்டத் தெரியாது. ஆகையால் இவை மரப் பொந்துகளில்தான் வசிக்கின்றன. இந்தப் பறவையின் அன்றாட உணவு பூச்சிகள்தான். எந்தப் பூச்சிகள் கண்ணில் பட்டாலும் பிடித்து உணவாக்கிக் கொள்கின்றன. வண்ணத்துப்பூச்சிகள் தான் இவைகளுக்கு மிகவும் பிடித்த உணவாகும். இந்த நீலக்குருவிகளின் முட்டை இளம் பச்சை நிறத்தில் அழகாக இருக்கும். இவைகள் பெரும்பாலும் மரத்திலேயே தங்கள் பொழுதைக் கழிக்கின்றன.

## கவிதை பாடுவோம்



### கப்பல்

கப்பல் கப்பல் புகைக் கப்பல்
கட்டழகான புகைக் கப்பல்
நீலக் கடல் மீது நீண்டு
நிமிர்ந்து மிதக்கும் புகைக் கப்பல்

வீசி அடிக்கும் புயலையும்
மலைபோல் திரளும் அலையையும்
முட்டி மோதிக் கிழித்தெறிந்து
விரைந்து போகும் புகைக் கப்பல்

பனி படிந்த கடல் மீதும்
இரவு பகலென்று ஓயாது
வீரனைப் போல் முன்னோக்கி
விரைந்து போகும் புகைக் கப்பல்.

- பூரணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 90ம் நாள் நினைவாஞ்சலி



## லெப். சிவகுமாரன்

**பரமானந்தம் குமரதாஸ்**
(கொக்குவில் கிழக்கு கொக்குவில்)
**வீர மரணம் - 19.11.1996**

சொந்த மண்ணில் விடுதலைக்காய்
சுடரான குமரனே!
தமிழீழ மக்களின் விடுதலைக்காய்
விதையாகிய மாவீரனே! சிவகுமாரா!
உன் விடுதலைப் பணி
ஓயப்போவதில்லை! என்றோ ஓர் நாள்
வெற்றி முரசு முழங்கும்!

உன் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.
தகவல்: (சகோதரன்)
P.MURUGATHAS (Babi)
Schwojer -Str - 22
82140 - OLCHING,
GERMANY.
TEL: 08142 - 49230

## 31ம் நாள் கண்ணீர் அஞ்சலி

**திரு. செல்லர் ஆறுமுகதாஸ்**
(முல்லைத்தீவு)
(முன்னாள் உப தபாலதிபர்)
**மறைவு - 23.01.1997**

தாவடி தெற்கை பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் ஆறுமுகதாஸ் 23.01.97-ல் இணுவிலில் காலமானார். இவர் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், கதிமாலினி, கதிவாணி, கதீவன் ஆகியோரின் தந்தையும், காலம் சென்ற செல்லர் பாக்கியத்தின் அன்பு மகனும், காலம் சென்ற சோமசுந்தரம் பாரசக்தியின் அன்பு மருமகனும், மனோமணி, இரத்தினம்மா, சுகிர்தலட்சுமி, சற்குணதேவி, தியாகராசா, ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவபாதசுந்தரம், கமலேஸ்வரி, சுமத்திராதேவி, இந்திராணி, வசந்தாதேவி பத்மாசனி, ஆகியோரின் அன்பு மச்சானுமாவார். அன்னாரின் மரணச்செய்தி கேட்டறிந்து எமது துயரத்தில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றிகள்.

தொடர்புகட்கு,
தியாகு - 061.8318176
கஜன் - 055.6404559
நீதன் - 077.588763

## 45ம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்

தாயின் மடியில்: 05.01.71



தாயக மண்ணில்: 09.01.97

## மேஜர் சேந்தன் (ராஜா)

பரந்தன் ஆனையிறவு களச் சமரில் மாவீரனாக
மரணித்த **கிருஷ்ணப்பிள்ளை இளங்கோ**
(சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்)

ஈழத்தமிழர் இன்னல் போக்க வேங்கையில் சேந்தனாக
இணைந்து கொண்ட இளங்கோ எனும் இலட்சிய வீரனே
களங்கள் பல கண்டு காவியம் படைத்து காலத்தால்
அழியாத சுதந்திர வேட்கையை நெஞ்சில் சுமந்தவனே
மானசீக தமிழனாய் மக்கள் மனதில் என்றும் மங்காத
ஒளிச்சுடராய் திகழ்பவனே
விடுதலைப்பாதையிலே வெற்றியோடு வீறுநடை போட்டு
வீரத்தோடு வாழ்க்கையிலே விடிந்தும் விடியாத அந்த
வியாழன் உமக்குமட்டும் விடியாமல் போனதென்ன
சேந்தா!
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்லவன்
அருள் வேண்டி அன்னை பராசக்தியின் அடியில்
காணிக்கை ஆக்குகின்றோம். மரணச் செய்தி அறிந்து
நேரிலும் தொலைபேசி மூலமும் எமது துயரத்தில் பங்கு
கொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றியை
தெரிவிக்கின்றோம்.

என்றும் நீங்காத நினைவுடன்
அப்பா, அம்மா, அண்ணாமார், அக்கா, தம்பி,
தங்கை, மச்சாள்மார், அத்தான், மருமக்கள்,
மகன்மார், மகள், நண்பர்கள்

தகவல்- கி. பாலசுந்தரம்
BASEL STR-27, 6003 LUZERN, SWISS
T.P: 041.2402784

# 91ம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

## செல்வி தயாளினி கந்தையா

(வட்டுக்கோட்டை)

**உதயம்: 09.03.1976** **உதிர்வு: 23.11.1996**

ஆசைகளை சுமந்த மனம்
அனாதையாய் நிற்குதடி
பட்டு சேலை கட்டி பவனி வரப்போகிறாய் என்று
எத்தனையோ சீர் வரிசை உனக்காகச் சேர்த்து வைத்தோம்.
மனதுக்குள் ஆசைகளை அடுக்கடுக்காய்
சுமந்து கொண்டோம் அத்தனையும் அழிந்ததடி
உன் ஆகாயப் பயணத்தில்! உன் அழகு முகம் எங்கே
அன்பு வார்த்தை எங்கே வருந்தி நாம்
அழைக்கின்றோம் வாராயோ எம்மருகில் காலன்
உன்னருகில் வர காவலனாய் நாமில்லை வேதனையை
எமக்களித்து ஏன் வெகு தூரம் நீ சென்றாயோ?

உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
அப்பா, அம்மா, சகோதரர்கள், உன் ஆசை அத்தான்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.



எமது சகோதரியின் துயரச் செய்தி
அறிந்ததும்
எமது துயரில் பங்கு கொண்ட
உற்றார் உறவினர்
நண்பர்கள் அனைவருக்கும் மற்றும்
சகல விதத்திலும்
உதவி புரிந்தவர்களுக்கும் எமது
நன்றியை தெரிவித்துக்
கொள்ளுவதுடன் 21.02.1997
வெள்ளிக்கிழமை நடை பெறும்
அந்தியேட்டியில் கலந்து
கொள்ளுமாறும் வேண்டுகின்றோம்.

நடைபெறும் இடம்:
Rest Rheinkrone Chur

தகவல்:
சகோதரன்,
கந்தையா கருணாகரன்
(0041) 081/ 3281079

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 09-10 ஜனவரி 1997 ஆனையிறவு, பரந்தன் இராணுவ முகாங்கள் மீதான தாக்குதலில் வீரமரணத்தை தழுவிய மாவீரர்களில் கிடைக்கப்பெற்ற பெயர் விபரங்களில் சில



1. **வீரவேங்கை பிரகாசினி / மணியரசி**
பர்னாந்து இம்மானுவல்
பெரிகலிஸ்ரா
யாழ்ப்பாணம்
த.மு. கடற்கரை வீதி, நாச்சிக்குடா.
(06.08.1976)

2. **2ம் லெப். ஆரணி**
சக்திவேல் கிருஸ்ணவேணி
ஏ.சி.பண்ணை, தட்டுவன்கேணி
கிளிநொச்சி (15.07.?)

3. **லெப்.ரேகா / சிவநங்கை**
பாலகிருஸ்ணன் சியாமளவேணி
(றெஜி), எழுதுமட்டுவாள்.
த.மு: பன்றிக்கெய்தகுளம்,
ஓமந்தை (01.04.1976)

4. **லெப். புகழரசி**
இன்பகவிராசா சசீகரி
96ம் வட்டாரம் கும்புறுபிட்டி
உடையார்கட்டு.
த.மு: காந்தி திட்டம்
நெடுங்கேணி (24.05.1977)

5. **லெப். இளவழகி**
மகாதேவன் மதுரா (சுவீற்றி)
மானிப்பாய். (09.11.1978)

6. **லெப். நந்தினி**
ஏழுமலைநாதன் சுகிர்தா
(சோதி), சுன்னாகம்
த.மு. 8ம் வட்டாரம் மணி
ரெய்லர் கடையடி
புதுக்குடியிருப்பு. (01.02.1975)

7. **கப்டன். சுபாநந்தி**
கனகசிங்கம் வசந்தராணி
(வசந்தி)
கோப்பாய் யாழ்ப்பாணம்.
த.மு: பிள்ளையார் கோவிலடி,
முழங்காவில்
மன்னார். (08.07.1976)

8. **லெப்.ஆதிரை**
சிவபாதம் ஞானேஸ்வரி(ஞானம்)
திருவையாறு, கிளிநொச்சி.
த.மு. தீப்பெட்டிபாலம், பாளிநகர்
வவுனிக்குளம். (09.05.1975)

9. **கோகிலா**
வைத்தியநாதன் ராகினி
(சாந்தா)
அல்வாய் கிழக்கு. (04.05.1978)

10. **லெவ். மாதுரி**
கந்தசாமி ஜெயச்சித்திரா
(சித்திரா)
மாந்துவில் கிழக்கு,
கொடிகாமம்.

11. **மேயர். பாமிலா (உமா)**
கந்தசாமி உமாமகேஸ்வரி
(ரமணி)
மீசாலை வடக்கு
கொடிகாமம். (03.03.1971)

12. **வீரவேங்கை. கௌரி**
ஆனந்தராஜா மனோரஞ்சினி
கோண்டாவில் கிழக்கு,
(15.05.1975)
த.மு: வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

13. **குயில்மொழி**
நாகராஜா ராஜலட்சுமி (ராசம்)
மிருசுவில். (10.10.1978)

14. **2வது லெப்.தாரணி**
தேவராஜா கிருஸ்ணவேணி,
(ரமணி)
வாரோதயர் நகர்
சாம்பல்தீவு, திருமலை.

15. **லெப்.விஸ்வம்**
சண்முகம் ராஜேஸ்வரி
வாடியடி பாறயன்கீறை, பூநகரி.
(23.05.1977)

16. **2வது லெப். வானிலா**
குழந்தைவேல் தவநேசம்
(வனிதா)
கீரன், கோரைக்களிமடு,
ஆலடிச்சேனை,
மட்டக்களப்பு. (17.02.1977)

17. **வீரவேங்கை. பூங்கிளி**
ராஜதுரை கிரிஜா (கிரி)
வேலணை, யாழ்ப்பாணம்.
த.மு: துணுக்காய், மல்லாவி.
(09.06.1975)

18. **கப்.மஞ்சு**
மரியதாஸ் மேகலா
செல்வராணி (கலா)
அரியாலை, யாழ்ப்பாணம்.
த.மு: புதிய வீடமைப்புத்திட்டம்
மடு வீதி, கடையம், மன்னார்.
(28.02.1976)

19. **2வது லெப். தவமலர்.**
முருகேசு முத்துக்குமாரி (மணி)
கண்டி.
த.மு: சிவன் நகர், உருத்திரபுரம்.
(27.06.1972)

20. **2வது லெப்.கலைப்பிரியா / அருள்**
ஜெயகலா திருநாவுக்கரசு
(ஜெயா)
கரவெட்டி, யாழ்ப்பாணம்.
குரும்பசிட்டி, யாழ்ப்பாணம்.
(31.10.1975)

21. **வீரவேங்கை விவேகா**
செல்வராஜா உசாந்தினி
தண்ணீரூற்று, நீலகண்டபுரம்
முள்ளியவளை. (18.10.1975)

22. **கப்டன். கிளிமோ**
யோசப் பெர்ணாண்டோ மேரி
ஜெயராணி. (18.11.1977)

23. **கப்.தமிழரசி**
நாகேஸ்வரன் விக்னேஸ்வரி
(சாந்தி)
சில்வா வீதி, வட்டக்கச்சி.
(18.07.1976)

24. **மேயர். தர்சிகா / தாமரைச்செல்வி**
சசிகலா நடராஜா
அச்சுவேலி சந்தி, அச்சுவேலி
(02.09.1974)

25. **லெப். ஒளிநிலா**
நவரட்னம் சுமதி
குமரபுரம், பரந்தன்
கிளிநொச்சி. (09.01.1977)

26. **2ம். லெப்.மாலதி**
தவராசா அனிதா,
நயினமடு,
ஆனந்தபுளியங்குளம்.
(15.09.1979)

27. **லெப்.வாசுமதி**
ஆறுமுகம் அன்னபூரணி (பூரணம்)
2வது பிரிவு சேமமடு,
வவுனியா. (04.01.1979)

28. **2ம்.லெப். பைந்தமிழ்**
கந்தையா ஜெயசிறி
(குட்டி - ஜெயா)
பன்னீர்ச்சங்கேணி,
மதுரங்குளம்
மட்டக்களப்பு. (20.10.1980)

29. **லெப்.கலைச்செல்வி**
சந்தானம் ஸ்ரீதேவி
வவுனியா.
த.மு: டீ பிரிவு மடு முகாம்
மன்னார். (12.05.1978)

30. **கப்டன். அல்லி**
வீரகத்தி உதயமாலா
தனங்கிளப்பு. (03.05.1975)

31. **கப்டன். விநோதன்**
டானியல் ஜெயரங்கன்
4ம் பிரிவு வரிக்குடியிருப்பு
பாவற்குளம், வவுனியா.

32. **2ம்.லெப்.குரு / திலீபன்.**
சங்கரதாஸ் ரவி
பண்றிக்கெய்தகுளம், வவுனியா.

33. **லெப்.சுகந்தி**
செல்வவேலாயுதன் தனுசா
கோப்பாய் தெற்கு
த.மு: ஒட்டிசுட்டான்.

34. **2ம். லெப். ஞானம் அல்லது கருணா**
நாகரட்னம் விஜயசங்கர்.
மூதூர், திருமலை.

35. **கப்டன். உதயசங்கர்**
செல்வராஜா ஜெயசீலன் / சுதன்
முல்லைத்தீவு வீதி, ஒலுமடு,
மாங்குளம்.

36. **வீரவேங்கை நல்லழகன்**
செல்வராஜா உதயகுமார்

**மாவீரர்களுக்கு எமது வீர வணக்கம்**

## குறுக்கெழுத்துப் போட்டி இலக்கம். 11

**இடமிருந்து வலம் ➲**
1. நாடி (2)
5. தாய் மகவுக்காகப் பாடுவது (4)
7. அரி; ஆபத்தான..(?) மிருகம் (4) குழம்பியுள்ளது
9. கசப்புக்கு இது... (3)
12. இராஜராஜ சோழன் கட்டிய கோயில்களின் உறைவிடம் இது (3)
16. நள மகாராஜனுக்கும்; புகலிட ஆண்களுக்கும் கை வந்தது இது (4)

**மேலிருந்து கீழ் ↓**
1. எமது பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்று (3)
2. இராசி; தராசு (3)
3. எம்முடன் பரிச்சயமான சீட்டு இது (3)
4. மனித உரிமைகளைப் பிரகடனப்படுத்திய நாடு (4)
10. வட்டமான... ஓடம்.. (4)
11. இதன் விளை நிலம் ஈழம் (3)

**வலமிருந்து இடம் ⊂**
3. சந்தேகம்; ஒளி (3)
8. பாலைவனக் கப்பல் (5)
13. தொண்டமான் ஆற்றுத் திருத்தலம் (4)
18. அரச(ர்) படை; ஒரு வகைக்கிழங்கு (2)

**கீழிருந்து மேல் ↑**
6. மாந்தரை மயக்குவது (2)
14. தமிழகத்தை அண்டிய தமிழீழத்தீவுகளில் ஒன்று (5)
15. உப்பளத்துக்குப் பெயர்போன இடங்களில் ஒன்று (5)
17. ஈழமுரசின் இலக்கியப் பகுதியையும் குறிக்கும் (4)
18. மாவின் ரகம்; ஊர் (3)

## குறுக்கெழுத்துப் போட்டி இல.-11

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | 3 | | 4 |
| | 5 | | | | | 6 | |
| 7 | | | | ■ | | ■ | |
| | | | | 8 | | ■ | |
| | 9 | | | 10 | | 11 | ■ |
| 12 | | | | | | | |
| | | | | 13 | 14 | | |
| 15 | 16 | | 17 | | ■ | | 18 |

பெயர்: ..........................................
முகவரி: ..........................................
..........................................
..........................................

போட்டியில் கலந்துகொள்பவர்கள் உங்கள் பதில்களை 12-03-97க்கு முன்பாக கடித உறையில் குறுக்கெழுத்துப் போட்டி - 11 எனக் குறிப்பிட்டு மேற் பகுதியையும் இணைத்து அனுப்புங்கள். (ஆர்.)

## குறுக்கெழுத்துப் போட்டி இலக்கம் - 10

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ப | ர | ந் | 2 த | ன் | ■ | 3 பா | 4 பூ |
| ர | ன் | த | ந் | கி | 5 ம | டை | ந |
| ணி | 6 வெ | ■ | தி | நி | ணா | ரு | 7 க |
| ■ | ளி | 8 பி | டு | 9 ஒ | 10 கா | வே | ரி |
| 11 ப | ள் | ளி | ட் | மை | ■ | தி | கா |
| ரி | ■ | று | 12 கி | ரு | சா | ந் | தி |
| வி | வ் | 13 செ | 14 பா | ர | தி | தொ | 15 ந் |
| 16 க | ண் | ண | தா | ச | ன் | ■ | 17 ச |

குறுக்கெழுத்துப்போட்டி இல 10 இற்கு சரியான விடை எழுதிய வாசகர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்

**திரு. ஆனந்தன். கனகரத்தினம்**
HERNING 7400, DANMARK

*இவருக்கு 'பாலம்' ஆறு இதழ்கள் பரிசாக அனுப்பிவைக்கப்படும்.*

குறிப்பு: 'பாலம்' ஆறாவது இதழ் விரைவில் வெற்றி பெற்றவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

## சரியான விடை எழுதிய ஏனைய வாசகர்களது விபரம் வருமாறு:

**பிரான்ஸ்:**
நகுலேஸ்வரி. கெந்தேஸ்வரன் - 75019 Paris
விஜயரத்தினம் . சுரேஸ்குமார் - 75011 Paris
திருமதி: மகிந்தராஜா. நவநிதா - 94140 ALFORT VILLE
திருமதி: சேகரன் - 12000 RODEZ
ச.பார்த்திபன் - 93300 AUBERVILLIERS
இராஜிதன். இரத்தினராஜசிங்கம்- 94130 NOGENTS/marwn

**ஜேர்மனி:**
திருமதி. எ. கௌரி SCHWENNINGEN _ 78054.V
மது. சீவரத்தினம் - ADENDORF 21365
திருமதி. கலா - விக்கினேஸ்வரன் - ESSEN 45138
விஸ்வேஸ்வரி . பவானந்தராஜா ALSDORF - 52477
றெபெக்கா. ரூபி. பாலசிங்கம் FURTH - 90763
செல்வி: லாவண்யா. பாலேந்திரன் MEERBUSCH- 40670
அனற்றலீலா - ஸ்ரீபன் FALKENWEG- 8
அச்சுதை வசந்தன் - NEUSS - 41462
க. நித்தியானந்தன் . KREFELD 47807
கந்தையா. அரியநாயகம் SAARBRUKKEN 66119
மார்க்கண்டு. பாஸ்கர் LANDAU _ 76829
தேசிகன் . செல்வராஜா DUREN - 52351
மயில்வாகனம் . கருணாநிதி ESSEN - 45127
ம. பேடினன்ஸ் HAMBURG - 20257

**சுவிட்சர்லாந்து:**
S.J/ கென்னடி DELEMONT (JURA) 2800
K. தமிழினியன் OSTER MUNDIGEN 3072
S. விஜயவேல் OBERATH (Sz) 6414
குணரத்தினம் குணரூபன் KOLLIKEN 5742
நா.மோகனதாஸ் SEON 5703
K. ஜெகதீசன் ZURICH _8005
R. கணேசலிங்கம் NEUCHATEL 2000
T. சண்முகநாதன் LOCARNO 6600
மல்லிகா. குணலிங்கம் ZURICH . 8004
திருமதி. இ. தெய்வராணி ZURICH. 8003
திருமதி. புவனேஸ்வரி. ஆனந்தராஜா STECKBORN 8266
K. மேகா - GOLDAU_6410

**டென்மார்க்:**
R. சோதா IKAST 7430
T.சிவநேசன் IKAST 7430

**நெதர்லாந்து:** செல்வி.S.நந்தா HENGELO_ 7551 TAG

**நோர்வே:** மைதிலி OSLO 0182
ஓ. செல்வராஜா EGERSUND 4370
கிருஷ்ணா. மகேஸ் OSLO 0182

**ரஷ்யா:** க. நேசன். TVER 26M

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானம் சென்ரர் தொலைபேசி அட்டைகள் ஞானம் சென்ரர் தொலைபேசி அட்டைகளை விட விலை குறைந்தவை



# 100 Frs.

| DESTINATION | DURÉE D'APPEL |
|---|---|
| **ALLEMAGNE** | **50 Mn** |
| ANGOLA | 13 Mn |
| ARABIE SAUDIE | 17 Mn |
| ARGENTINE | 20 Mn |
| **BENGLADESH** | **14 Mn** |
| BELGIQUE | 40 Mn |
| BOLIVIE | 16 Mn |
| **BURKINA FASO** | **17 Mn** |
| BURUNDI | 13 Mn |
| CAMBODGE | 13 Mn |
| CAMEROUN | 15 Mn |
| **CANADA** | **62 Mn** |
| REP. C.AFRIQUE | 10 Mn |
| CONGO | 14 Mn |
| **COTE D'IVOIRE** | **18 Mn** |
| CHILI | 21 Mn |
| CHINE | 17 Mn |
| COLOMBIE | 23 Mn |
| CUBA | 15 Mn |
| DANEMARK | 41 Mn |
| EGYPTE | 18 Mn |
| ESPAGNE | 33 Mn |
| ETHIOPIE | 12 Mn |
| FINLANDE | 35 Mn |
| **GABON** | **15 Mn** |
| **GHANA** | **17 Mn** |

| DESTINATION | DURÉE D'APPEL |
|---|---|
| **HAITI** | **17 Mn** |
| HONG KONG | 33 Mn |
| **INDE** | **20 Mn** |
| ISRAEL | 20 Mn |
| ITALIE | 35 Mn |
| JAPON | 36 Mn |
| LIBAN | 15 Mn |
| LUXEMBOURG | 35 Mn |
| **MALI** | **15 Mn** |
| MAROC | 24 Mn |
| MAURICE | 14 Mn |
| MEXIQUE | 31 Mn |
| NORVEGE | 45 Mn |
| **PAKISTAN** | **16 Mn** |
| PAYS-BAS | 40 Mn |
| PHILIPPINES | 18 Mn |
| POLOGNE | 25 Mn |
| PORTUGAL | 29 Mn |
| **SENEGAL** | **14 Mn** |
| **SINGAPOUR** | **40 Mn** |
| **SRI LANKA** | **17 Mn** |
| **SUISSE** | **45 Mn** |
| **THAILANDE** | **16 Mn** |
| TUNISE | 24 Mn |
| VENEZUELA | 27 Mn |
| ZAIRE | 18 Mn |

**நிமிடங்கள் யாவும் ஒவ்வொரு தடவையும் அறிவிக்கப்படும்**

# GNANAM CENTER COMMUNICATION

195, Rue du Faubourg Saint Denis. 75010 Paris.

Tel: 01 46 07 09 36 - Fax: 01 46 07 00 14

Mº: La Chapelle / Gare du Nord


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் துயரத்தை துச்சமாக எடுத்தால் யுத்தம் தொடரும் - ஜப்பானியத் தூதர்

தமிழ் மக்களின் துயரத்தினை துச்சமென எடுத்தால் யுத்தம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருக்கும். யுத்தத்தினை முடிக்க சிறீலங்கா அரசு விரும்பினால் இராணுவத் தீர்வினை நாடாது பேச்சு வார்த்தை மேசையிலே அதனைத் தீர்க்க முயலவேண்டும்.

இவ்வாறு சிறீலங்காவுக்கான ஜப்பானியத் தூதுவர் ஜோசுவோ நகஷி கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். அவர் அப் பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

சிறீலங்கா அரசு இராணுவத் தீர்வினை நாடுவது தொடர்பாக எத்தனை முறை நீங்கள் வினவினாலும், நான் திரும்பத் திரும்பச் சொல்வது இதுதான், அரசியல் ரீதியான பேச்சுக்கள் மட்டுமே இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளுக்குத் தீர்வாக முடியும். இராணுவத் தீர்வு அழிவினை முன்னெடுத்துச் செல்லுமே தவிர பிரச்சினைகளுக்கு தீர்வாக அமைய மாட்டாது.

மூன்றாம் தரப்பின் உதவியோடு பேச்சுக்களை முன்னெடுப்பது தொடர்பாக நீங்கள் வினாவுகிறீர்கள். ஆனால், அரசு விடுதலைப் புலிகளுடன் ஒரு பொது உடன்பாட்டுக்கு வரவேண்டும். இதய சுத்தியுடன் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தை அணுகுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்கும் மக்களுக்கு அது தொடர்பான பூரண விளக்கத்தினை முதலில் வழங்கிய பின்னரே அவற்றின் பலாபலன்கள் தொடர்பான எதிர்பார்ப்பினைக் கொண்டிருக்க வேண்டும் எனவும் தூதர் தெரிவித்துள்ளார்.

## ஸ்ராஸ்பூர்க்கில் தமிழ் சிறுவன் விபத்தில் பலி

பிரான்சின் ஸ்ராஸ்பூர்க் நகரில் வசிக்கும் தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தை ஒன்று யன்னலுக்கு போடப்படும் திரைச்சீலையின் கயிறு நெரித்த காரணத்தால் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த சம்பவம் ஒன்று கடந்த திங்கட்கிழமை மாலையில் நடைபெற்றுள்ளது.

குறூஸ் அந்தோனியின் மூன்று வயது மகனான ராசல் என்னும் சிறுவனே திரைச்சீலை இழுக்கப் பயன்படும் கயிற்றுடன் விளையாடிக்கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக கயிறு கழுத்தினைச் சுற்றியதால் மூச்சுத்திணறி மரணமெய்தியுள்ளார்.

இப்பரிதாபச் சம்பவம் நடைபெற்ற போது தாயார் கடைக்குச் சென்று விட்டதாகவும் கூறப்படுகிறது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### அரசியல்....

கருத்துத் தெரிவிக்கையில்

பிரித்தானியாவில் சுமார் ஒரு இலட்சம் சிறீலங்கா நாட்டவர்கள் உள்ளனர் என்றும் தெற்கு இலண்டனில் மாத்திரம் சுமார் நாற்பதினாயிரம் தமிழர்கள் வசிப்பதாகவும் குறிப்பிட்டார். ஆனால் அவர்களில் எத்தனை பேருக்கு அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டது என்ற விபரத்தை தம்மால் வெளியிட முடியாத நிலையில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

பிரித்தானிய அமைச்சரை சந்தித்த சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கடந்த ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்ட பயங்கரவாதம் தொடர்பான ஐ.நா. தீர்மானத்திற்கு அமைவாக பிரித்தானியா நடந்துகொள்ள வேண்டுமென கோரிக்கை விடுத்தபோதும் பிரித்தானிய அமைச்சர் சாதகமான பதிலை அளிக்கவில்லை எனவும் தெரிகிறது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### சுங்காவில்...

தப்பியோடியதாகவும் தெரியவருகிறது. இத்தாக்குதலின்போது பெருமளவிலான ஆயுததளபாடங்களும் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. காயமடைந்த பொலீசார் தற்போது பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### மகப்பேற்றுக்கு...

அதை செவிமடுத்துக் கொண்டிருந்த போதிலும் யாருமே எதுவுமே கூறவில்லை. நீங்கள் பிள்ளைகளைப் பெறுவதானால் இனிமேல் இங்கு வர வேண்டாம் என ஆத்திரத்துடன் அத்தாதி கூறியதைக் கேட்டதும் பிரசவ நோயிலிருந்த அப் பெண்மணி கண்ணீர் விட ஆரம்பித்தது மிகவும் கொடுமையான காட்சியாக இருந்தது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### சீற்றத்துடன்...

சிறீலங்கா அரசு இக் கப்பலை விடுவித்ததுடன் எந்த வேளையிலும் பிரயாணத்தைத் தொடரலாமென அனுமதித்த போதிலும் கியூப அதிகாரிகள் மேற்கொண்டிருக்கும் சுயாதீனமான விசாரணைகள் முடியும் வரை கப்பல் தொடர்பான விடயம் முடிவடைந்து விடாதென கியூபத் தூதர் சினத்துடன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கடற் பகுதியில் இக் கப்பல் நிறுத்தப்பட்டிருந்த தாக்குதல் நடாத்தப்பட்டமை கியூப நாட்டில்சற்று சர்ச்சையாக கிளம்பி உள்ளதாகவும் கியூபப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

திருமலை சென்ற கியூபத் தூதர் கப்பலின் மாலுமியை சந்தித்து விபரங்களைக் கேட்டறிந்து அது தொடர்பான அறிக்கையினை ஹவானாவிற்கு சமர்ப்பித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

தற்பொழுது இக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கின்றது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### யுத்தப் பழுவை...

டது. இத்தகைய பொருளாதார இழப்புக்களை தாங்கும் சக்தி இலங்கைக்கு இல்லை எனவும் தெரிவித்துள்ளார். கடந்த திங்களன்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சும் இணைந்து நடாத்திய சிறிய, நடுத்தர கைத்தொழில் அதிபர்களுக்கான கருத்தரங்கிலேயே அமைச்சர் பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.


## ஈழமுரசு சந்தா விண்ணப்பப் படிவம்

பெயர்: ..................

முகவரி: ..................

..................

தொலை பேசி எண்: ..................

பிரான்சுக்கான சந்தா (தபாற் செலவுடன்)

12 மாதம் → 420 பிரெஞ்சு பிராங் ☐

பிரான்ஸ் தவிர்ந்த ஏனைய நாடுகளுக்கான சந்தா (தபாற் செலவுடன்)

12 மாதம் → 520 பிரெஞ்சு பிராங் ☐

காசுக்கட்டளை, காசோலையை, 'ஈழமுரசு' என்ற பெயருக்கு அனுப்பவும்.
நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
"EELAMURASU"
22, Rue Perdonnet, 75010 Paris.
TEL: 0140 37 63 63 / FAX: 0140 37 64 64


## முதலாம் ஆண்டு நினைவாஞ்சலி



### T. பிறேமநாயகி

தோற்றம்: 27.02.1970

மறைவு: 27.02.1996

'ஆறாது ஆறாது அழுதாலும் தீராது
ஆனாலும் வழி என்ன பிறேமா'

தாயாரும் உடன் பிறப்புகளும் குழந்தைகளும்

## 10-வது ஆண்டு நினைவஞ்சலி



**14.02.87 அன்று கைதடியில் எதிர்பாராத வெடி விபத்தொன்றில் வீரமரணத்தை தழுவிக்கொண்ட போராளிகளுக்கும் உயிர்நீத்த பொதுமக்களுக்கும் எமது**

**இதய அஞ்சலிகள்**

பொன்னம்மான், கேடில்ஸ், வாசு
பரன், கவர், சித்தார்த்தனோடு
தேவனும் அக்பர் யோகேஸ்
குமணனும் கூடப் போனான்

நாவற் குழியதில் எதிரிமீது
குறிவைத்த சிறுத்தைக் கூட்டம்,
கைதடி மண்ணில் வைத்து
கள நிலை தயார் செய்கையிலே,

எதிர்பாரா வெடி விபத்தில்
விதையாகி நெஞ்சில் வீழ்ந்தார்
ஈழவர் பலரும் மாண்டார்
இலட்சியம் ஈழம் வெல்க.

ஆண்டுகள் பத்துப் போயும்
ஆறாத உங்கள் எண்ணம்
மீண்டும் இம் மண்ணை மீட்க
மிடுக்கென எழுந்து வாரீர்

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

சுவிஸ் வாழ் தென்மராட்சி மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

WOODLANDS
AXS Card 100 பிராங்க் மட்டுமே!
Cabin இல் இருந்து தொடர்புகொள்ள 90Frs - 15Min
மிகமிகக் குறைந்த விலையில் கூடிய நேரம் தொடர்பு கொள்ளலாம்.
வர்த்தகர்களுக்கு விசேட விலையுண்டு
அட்டையில் பாவிக்கக் கூடிய நேர அளவு கணணி முறை பதிவில் உங்களுக்கு அறிவிக்கப்படும்
Australie........45 Min.
Canada......... 60 Min.
Inde..............20 Min.
Pakistan.......17 Min.
London.........70 Min.
Sri Lanka......17 Min.
USA..............70 Min.
Germany.........50 Min.
Denmark.........50 Min
Thailand.........20 Min
Singapore......45 Min.
இன்னும் பல நாடுகள் மிகமிகக் குறைந்த விலையில்...
70, Rue Louis Blanc, 75010 Paris · Tel: 01 40 35 01 04 / 01 40 35 00 27

# இரத்தினபுரியில் கலவரம் - தீவைப்பு பொலீசாரின் சூட்டுக்கு மூவர் பலி

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் கொல்லப்பட்ட இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நந்தா எல்லாவெலயின் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் பொலீசாருக்குமிடையே பெரும் கைகலப்பு ஏற்பட்டதையடுத்து பொலீசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு மூவர் பலியாகியதுடன் மேலும் 28 பேர் படுகாயமடைந்தனர். இவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனியன்று இடம்பெற்ற இச் சம்பவத்தை தொடர்ந்து இரத்தினபுரி நகரில் பெரும் தீவைப்புச் சம்பவங்களும் இடம் பெற்றன. தமிழர்களின் கடைகளும் சூறையாடப்பட்டு எரியூட்டப்பட்டன. பொலீசாரினால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களில் முஸ்லிம் ஒருவரும் அடங்கியுள்ளார்.

மக்கள் கும்பல்கள் இரத்தினபுரி நகரிலுள்ள இரண்டு பொலீஸ் நிலையங்களையும் தாக்கிச் சேதப்படுத்தியன. பொலீசாரை நோக்கி கல்லெறி சம்பவங்களும் இடம் பெற்றன.

நிலைமை கட்டுக்கடங்காது போகவே இராணுவத்தினர் அப் பகுதிக்கு அனுப்பப்பட்டனர். இரத்தினபுரியில் இருந்து தகவல்கள் யாவும் சந்திரிகாவுக்கு உடனடியாக அனுப்பப்பட்டதுடன் பாதுகாப்பு ஆலோசனைகளும் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரியவருகிறது.

## அரசியல் தஞ்சம் கோரும் விடயத்தில் பிரித்தானியா பொது நிலையே பேணும்

பிரித்தானிய அமைச்சர் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்தும் நோக்கோடு பிரித்தானியாவுக்குள் நுழைபவர்களுக்கு பிரித்தானியா அரசு சமூக சேவை உதவிகளை வழங்காது எனினும் அரசியற் தஞ்சம் கோருபவர்கள் மீது நல்ல ஒரு நிலைப்பாட்டினையே தொடர்ந்தும் பேணிவரும்

இவ்வாறு சிறீலங்காவிற்கு விஜயம் செய்த பிரித்தானிய அமைச்சர் கலாநிதி லியாம் பொக்ஸ் பத்திரிகையாளரிடையே பேசும்போது தெரிவித்துள்ளார். விடுதலைப்புலிகளுக்கும் சிறீலங்கா அரசிற்கும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது தொடர்பாக தான் எந்த விதமான தொடர்புகளையும் ஏற்படுத்தவரவில்லை என்பதனைத் தெரிவித்த அமைச்சர் சார்க் நாடுகளுடன் பிரித்தானிய வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது தொடர்பான விடயங்களைப்பற்றி கலந்தாலோசிக்கவே வந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்ட சிறீலங்காவிற்கான பிரித்தானிய தூதர் திரு. டேவிட் நாதம்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## சீற்றத்துடன் திருமலை சென்ற கியூபா தூதர்

முல்லைத்தீவுக்கு அப்பால் சர்வதேச கடற் பிரதேசத்தில் வைத்து சிறீலங்கா விமானப் படையினரால் தாக்கி சேதப் படுத்தப்பட்ட கியூபா நாட்டு நிறுவனமொன்றிற்குச் சொந்தமான "கபீரியன் குயின்" கப்பலை பார்வையிடுவதற்காக சிறீலங்காவிற்கான கியூபா தூதர் திரு. றொலென்டோ லூப்பே தெல் அமோ திருமலைக்கு கடந்த வெள்ளிக்கிழமை சென்றிருந்தார்.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## யுத்தப் பழுவைத் தாங்கும் சக்தி இனியும் இலங்கைக்கு இல்லை

### - ஜி.எல். பீரிஸ் -

யுத்தத்திற்கென பெருமளவு பணம் விரயமாகிறது. இதனால் எமது நாட்டின் அபிவிருத்தி பின் தள்ளப்படுகின்றது. பொருளாதார அபிவிருத்திக்கும் கைத்தொழில் அபிவிருத்தி முயற்சிகளுக்கும் பயன்படுத்தப்பட வேண்டிய நிதி எமது சக்திக்கும் மீறிய அளவில் யுத்தத்திற்குப் பயன்படுத்தப்படுவதால் நாம் பிற நாடுகளில் கடன் வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்று நிதியமைச்சரும், நிதி திட்டமிடல் பிரதி அமைச்சருமான ஜீ.எல்.பீரிஸ் கருத்தரங்கொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த வருடத்தில் மாத்திரம் யுத்தத்திற்கென 4600 கோடி ரூபா செலவிடப்பட்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## மகப் பேற்றுக்கு இங்கு வரவேண்டாம்

### பிரசவ விடுதியில் தமிழ்ப் பெண்ணை சிங்கள தாதி மிரட்டல்

கொழும்பு பிரசவ விடுதியொன்றில் அனுமதிக்கப்பட்டிருந்த தமிழ் பெண்ணொருவரை சிங்கள தாதி ஒருவர் துவேஷமாக பேசியதுடன் மீண்டும் இங்கு மகப்பேறுக்காக வரக் கூடாதெனவும் மிரட்டியுள்ளார்.

பிரசவ வலி எடுத்த நிலையில் வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்ட வேளையிலேயே இந்த அநாகரீகமான நிகழ்வு நிகழ்ந்துள்ளது.

இப் பெண்ணிற்கு அருகில் வந்த சிங்களத்தாதி தமிழர்களான நீங்கள் அதிகம் பிள்ளைகளைப் பெற்றுத்தள்ளுவதால் எங்கள் சிங்கள இனம் குறைவடைந்து வருவதுடன் உங்கள் சந்ததி பெருகி எம்மை அழிக்க முயல்கின்றது என்றும் இனத் துவேசமாக பேசியுள்ளார்.

தாதி இவ்விதம் மிரட்டிய போது சுற்றிலும் இருந்தோர்


(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## சுங்காவில் காவல் நிலையம் மீது தாக்குதல் 15 பொலீசார் பலி. 10-ற்கு மேல் காயம்

பொலநறுவ மாவட்டத்தில் உள்ள சுங்காவில் பொலீஸ் காவல் நிலையம் மீது விடுதலைப்புலிகள் கடந்த 11.ற2.97 அன்று நடத்திய திடீர் தாக்குதலில் 15 பொலீசார் கொல்லப்பட்டு 10-ற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

பல நூற்றுக்கணக்கான விடுதலைப்புலிகள் காவல் நிலையத்தை திடீரெனச் சூழ்ந்து நின்று தாக்குதலில் இறங்கியதாகவும் தாக்குதலுக்கு முகம் கொடுக்கமுடியாத பொலீசார்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

ஞானம் சென்ரரின் புதிய தொலைபேசி அட்டை
Gnanam Center Communication

இலங்கை........... 17 நிமிடம்
இந்தியா............ 20 நிமிடம்
கனடா......... 62 நிமிடம்
ஜேர்மனி...... 50 நிமிடம்
100Frs மட்டுமே! (மிகக் குறைந்த விலையில்)
10 தொலைபேசி அட்டைகள் 900Frs.
195, Rue du Faubourg Saint Denis, 75010 Paris. Tel: 01 46 07 09 36 - Fax: 01 46 07 00 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org